

විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව

හතලිස් හතර වන වාර්ෂික වාර්තාව

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

நாற்பத்து நான்காவது ஆண்டறிக்கை

UNIVERSITY GRANTS COMMISSION

FORTY FOURTH ANNUAL REPORT

2022

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

நாற்பத்து நான்காவது ஆண்டறிக்கை

2022

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தூரநோக்கு, பணிக் கூற்று மற்றும் இலக்குகள்



தூரநோக்கு

சிறப்பான இலங்கைக்கான /உலகத்திற்கான தலைமைத்துவ அறிவினை வழங்குதல்



பணிக் கூற்று

மூன்று அடிமட்ட கோடுகளை பூர்த்தி செய்தல் பற்றிய வேட்கையுடைய அறிவுள்ள தலைவர்களை உருவாக்குவதற்கு அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட ஓர் அமைப்பின் ஊடாக உயர் தாக்கமிக்க ஆராய்ச்சி, தரமான கற்பித்தல் மற்றும் தொழில் ஈடுபாடுஎ ன்பவற்றுடன் இளமாணிப் பட்டம்,பட்டபின் படிப்பு மற்றும் உச்சமான தரத்தில் தொழில்முறைக் கல்வி போன்றவற்றின் ஏற்பாடுகளை எளிதாக்குவதில் முகாமைத்துவம் மற்றும் நல்லாட்சியை வளர்த்தல்



இலக்குகள்

- அரச துறையின் உயர் கல்விக்கான சமமான வாய்ப்பை அதிகரித்தல்
- 21ஆம் நூற்றாண்டு குடியுரிமைக்கு தேவைப்படுகின்ற மாணவர்களின் திறன்கள் மற்றும் அறிவை விருத்தி செய்வதற்கு நிதிகளை பங்கீடு செய்வதன் மூலமாக அரச உயர் கல்வி நிறுவனங்களுக்கு உதவுதல்.
- பூகோளச் சூழலொன்றில் வாழ்நாள் முழுவதும் கற்பவர்களாக மாணவர்கள் மாறுவதற்கு வழிகோலுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள்,ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்கள் ஊடாக அரச உயர் கல்வி நிறுவனங்களின் கல்வித் திறனை ஊக்குவித்தல்.
- வினைத்திறன்மிக்க தரமான மனித வளங்கள்,மிகச் சிறப்பான வசதிகள் மற்றும் நிலைத்திருக்க கூடிய பசுமை எண்ணக்கருக்களுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட உயர் கல்வி நிறுவனங்களை உறுதி செய்தல்.
- பாதுகாப்பானதும் நிலையானதுமான அமைப்புகள் மற்றும் பரஸ்பரமாக உற்பத்தித் திறன்மிக்க பங்குதார உறவுகள் மூலமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தை வலுப்படுத்தல்.

தலைவரின் ஆசிச் செய்தி



2022 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவானது சில முக்கிய அலுவல்களை நெறிப்படுத்துவதற்கும் அனைத்து மறுசீரமைப்புகளுக்குத் தேவையான பின்னணியை தயார்செய்வதற்கும் கணிசமான கொள்கைத் தீர்மானங்களை எடுத்துள்ளது. இத்தகைய மாற்றங்கள் ஜனாதிபதி செயலணி மற்றும் உயர் கல்விக்கான உப குழுவின் தலையீட்டுடன் வரையப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மேலும் இத்தகைய மறுசீரமைப்புக்கள் இலங்கை உயர்கல்வித் துறையை மறுசீரமைப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2020 - 2022 கான மூலோபாயத் திட்டத்துடன் உடன்பட்டுக் காணப்படுவதோடு அரசாங்கத்தின் புதிய உயர் கல்விக் கொள்கை மறுசீரமைப்பின் அமுலாக்கத்திற்கும் பங்களிப்புச் செய்கின்றன.

09 மூலோபாயங்களுடன் உயர் கல்வித் துறையை 50 முக்கிய அடைவு மட்டக் குறிகாட்டிகளுக்குட்படுத்தி (KPIs) சரளமான பின்னணியில் அனைத்துப் பணிகளையும் 05 வருடகாலத்திற்குள் பூரணப்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த சில வருடங்களில் இலங்கையின் உயர்கல்வித் துறையானது துரித மற்றும் புரட்சிகரமான சில மாற்றங்களை அனுபவித்துள்ளது. 2019 / 2020 கல்வியாண்டில் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்பட்ட மாணவர்கள் தொகையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது முன்னொருபோதுமில்லாதவாறு 31% இனால் அதிகரித்துள்ளது. இந்த அதிகரிக்கப்பட்ட உள்வாங்கலை முகாமைப்படுத்துவதனை இலகுபடுத்துவதற்காக கல்விசார் ஆளணி அங்கத்தவர்களை 500 இனாலும் 70 தற்காலிக கல்விசார் பதவிகளைக் கொண்ட மேலதிக ஆளணியொன்றை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

15 வருடங்களுக்குப் பின்னர் கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகம் ஆகிய இரண்டு தேசிய பல்கலைக்கழகங்கள் பல்கலைக்கழக முறைமையுடன் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 2022 ஆம் ஆண்டில் 02 புதிய பீடங்கள், 12 புதிய கற்கைப் பிரிவுகள்,19 இளமாணிப் பட்டப் பாடநெறிகள் மற்றும் 30 பட்டப்பின் படிப்பு பாடநெறிகள் அறிமுகஞ் செய்யப்பட்டள்ளன.

பல்கலைக்கழகங்களுக்கு புதிதாக அனுமதித்துக்கொள்ளப்படும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக பாடநெறிகள் ஆரம்பிக்கும் வரையான காலப் பகுதியினுள் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழி பற்றிய டிப்ளோமா பாடநெறியைக் கற்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கொவிட் 19 தொற்று நோய் காரணமாக பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டிருந்தமையினால் Lanka Education and Research Network (LEARN) ஊடாக மாணவர்களுக்கு மற்றும் கல்விசார் ஆளணி அங்கத்தவர்களுக்கு இலவசமாக தரவுகளைப் பெற்றுத்தரும் இணையவழி கல்வி முறையொன்று அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியில் சிரமங்களை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கு உதவி புரிவதற்காக மக்கள் வங்கி ஊடாக சலுகை வட்டி அடிப்படையில் மடிக்கணனிகளைக் கொள்வனவு செய்வதற்காகன கடன் திட்டமொன்று அறிமுகஞ் செய்யப்பட்டது. மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்துவதற்காக மானியடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடங்களில் சில கணனித் தொழில்நுட்ப கற்கைப் பிரிவுகள் தாபிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த நாட்டில் தகவல் தொழில்நுட்பத் துறை தொழிலாளர்களுக்காக நிலவும் கடும் பற்றாக்குறைக்குத் தீர்வாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினூடாக வருடாந்தம் 10,000 மென்பொருள் பொறியியலாளர்களை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரச பல்கலைக்கழகங்களில் பன்முகத் தன்மைக்கு மற்றும் வேறுபாடுகளுக்கு உணர்வுபூர்வமான கற்றல் / சேவை சூழலொன்றை உருவாக்குதல் மற்றும் பேணிவருவதற்காக பாலின நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவம் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு நிலையத்தை அமைத்தல் அண்மையில் ஏற்பட்ட மேலுமொரு முக்கியமான நிகழ்வாகும்.

தற்போது தேசிய கல்வி ஆணைக்குழு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் இணைந்து 04 பிரதான பிரிவுகளின் கீழ் பல்கலைக்கழக அனுமதிக்கான கொள்கை மற்றும் பயன்பாடுகள் மறுசீரமைப்புக்கான பரிந்துரைகளை அறிமுகப்படுத்தம் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

சிஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க
தலைவர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

உள்ளடக்கம்

		பக்க இல.
	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தூரநோக்கு, பணிக் கூற்று மற்றும் இலக்குகள்	i
	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரின் ஆசிச் செய்தி	ii
	உள்ளடக்கம்	iii
	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு [UGC]	
	அறிமுகம்	v
	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வகிபாகம்	v
	நிறைவேற்றுச் சுருக்கம்	vi
	அட்டவணைகள் பட்டியல்	xv
	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிறுவனக் கட்டமைப்பு	xix
01	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முகாமைத்துவம்	1
02	பல்கலைக்கழக முகாமைத்துவம்	2
03	நிறுவகங்கள்	6
04	வளாகங்கள்	8
05	பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்துக்கொள்ளல்.....	9
06	கல்வி அபிவிருத்தி மற்றும் கல்வித் தரங்களைப் பேணிவரல்.....	24
07	நிதி நிர்வாகம்.....	40
08	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்தின் ஆளணி எண்ணிக்கை.....	49
09	மனித வளங்கள் பிரிவின் முன்னேற்றம்	51
10	உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி	61
11	தரப் பாதுகாப்பு சபையின் (கவுன்சில்) வகிபாகம் மற்றும் பணிகள் (QAC)	63
12	தகவல் தொழில்நுட்ப உதவி	67
13	சட்ட அலுவல்கள்	72
14	பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீடுகள் சபை (USAB).....	77
15	மத்திய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அலுவல்கள்	78
16	வெளியீடுகள் மற்றும் அறிக்கைகள் / அபிவிருத்தி நடவடிக்கைகள் / சிறப்புப் பணி ஒப்படைகள்	82
17	பாலின நிலை ஒப்புரவு / சமத்துவம்	83
18	பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதியுதவி வழங்குதல்.....	87
19	பல்கலைக்கழக கல்விசார் ஆளணிக்கு உயர் கல்விக்கான உதவி வழங்குதல்.....	90
20	பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்.....	96
21	பல்கலைக்கழக சேமலாப நிதியம்	101
22	2022 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஆணைக்குழு சுற்றறிக்கைகள் மற்றும் தாபன சுற்றறிக்கைக் கடிதங்கள்.....	105
23	மாணவர் அலுவல்கள் மற்றும் நலனோம்புகை பிரிவு	109
24	ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு.....	109

25 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் - 2022……. 110

26 பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் - 2022…..... 127

27 பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் - 2022…..... 137

28 நிலையான (பேண்தகு) அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையிலான எதிர்காலத் திட்ட அறிக்கை - 2022 …… 147

29 இணைப்புக்கள

i பல்கலைக்கழக அனுமதி - கல்வியாண்டு 2021/2022 166

பொதுவான ஏற்பாடுகள் மற்றும் விசேட ஏற்பாடுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை ……..

ii 2021/2022 கல்வியாண்டிற்காக பொதுவான ஏற்பாடுகள் மற்றும் விசேட ஏற்பாடுகளின் கீழ் பல்வேறு கற்கைநெறிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 170

[பீடத்திற்கமைய நாடளாவிய திறமை மற்றும் மாவட்ட ஒதுக்கீடு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை]

iii 2021/2022 கல்வியாண்டிற்காக பொதுவான மற்றும் விசேட ஏற்பாடுகளின் கீழ் பல்வேறு பாடநெறிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை [மாவட்டம் மற்றும் கற்கைநெறிகளுக்கமைய வகைப்படுத்தல்] …… 172

30 சுருக்கக் குறியீடுகள் ……..…… 181

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC)

அறிமுகம்

இலங்கையில் அரச பல்கலைக்கழக முறைமையின் வழிகாட்டுதல் மற்றும் செயற்பாடுகளின் ஒத்துழைப்புக்கான உச்ச சபையாக தொழிற்படும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது (UGC) 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் 1978ம் ஆண்டு திசெம்பர் மாதம் 22ம் திகதியன்று ஸ்தாபிக்கப்பட்டது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதான பொறுப்புக்களாக பல்கலைக்கழக கல்வியைத் திட்டமிடலும் ஒருங்கிணைத்தலும், உயர் கல்வி நிறுவனங்களுக்கான நிதிகளை ஒதுக்குதல், உயர் கல்வி நிறுவனங்களின் கல்விசார் தரங்களை பேணுதல், உயர் கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான ஒழுங்குபடுத்தல், அரச உயர் கல்வி நிறுவனங்களின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தல், அத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகார எல்லைக்குள் வருகின்ற அனைத்து அரச உயர் கல்வி நிறுவனங்களின் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல் என்பனவாகும்.

ஆணைக்குழுவின் தலைவர் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராகவும் பொறுப்புக் கூறுகின்ற உத்தியோகத்தராகவும் இருக்கின்ற அதேவேளை ஆணைக்குழு விவகாரங்களின் தினசரி நிர்வாகத்தை கட்டுப்படுத்துபவராகவும் ஆணைக்குழு கூட்டங்களுக்கு தலைமை தாங்குபவராகவும் காணப்படுகின்றார். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கும் நெறிப்படுத்துவதற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் செயற்பாடுகளுடன் திணைக்களங்கள், பிரிவுகள் மற்றும் அலகுகள் போன்றன காணப்படுகின்றன. பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரச உயர் கல்வி நிறுவகங்கள் 17 பல்கலைக்கழகங்களையும் 10 பட்டப்பின் படிப்பு நிறுவனங்களையும் 8 நிறுவகங்களையும் 1 நிலையத்தினையும் உள்ளடக்குகின்றன. ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் நிர்வாக அதிகரியாக பேரவை இருக்கும் அதேவேளை கல்விசார் செயற்பாட்டின் உச்ச அமைப்பாக மூதவை காணப்படுகின்றது. பல்கலைக்கழகம் ஒன்றினதும் நிறுவனம் ஒன்றினதும் பிரதம நிறைவேற்று அதிகாரியாக முறையே உபவேந்தர் மற்றும் பணிப்பாளர் காணப்படுகின்றனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வகிபாகம்

1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவானது பின்வரும் பிரதான பொறுப்புக்கள் மற்றும் நோக்கங்களை கொண்டுள்ளது.

1. தேசிய கொள்கைகளுக்கு இணங்க பல்கலைக்கழக கல்வியின் திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பு.
2. உயர்கல்வி தொடர்பில் பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்பட்ட நிதியை உயர் கல்வி நிறுவகங்களுக்கு பகிர்ந்தளித்தல் மற்றும் அத்தகைய உயர் கல்வி நிறுவகங்கள் ஒவ்வொன்றினதும் செலவினைக் கட்டுப்படுத்தல்.
3. உயர் கல்வி நிறுவகங்களின் கல்வித் தரங்களை பேணுதல்.
4. உயர் கல்வி நிறுவகங்களின் நிர்வாகத்தினை ஒழுங்குமுறைப்படுத்தல்
5. 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் அல்லது இச்சட்டத்தின் மூலமாக உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் அனுமதியை ஒழுங்கமைத்தல், மற்றும் நடவடிக்கை எடுத்தல், செயற்றிறன் மற்றும் அத்தகைய அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளை இல்லாதாக்குதல் போன்றவற்றை மேற்கொள்வதற்காகஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டு, விதிக்கப்பட்டு அல்லது ஒதுக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்றுச் சுருக்கம்

இந்த வருடாந்த அறிக்கையானது 2022 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மீளாய்வெகன்றினை வழங்குகின்றது. இவ்வருடத்தின் மீளாய்வின் போது பல்கலைக்கழகங்களுக்கான மாணவர் அனுமதி, கல்வி மற்றும் ஆய்வு அபிவிருத்தி, ஆளணியினர் அபிவிருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி (IT), தர உறுதிப்பாடு, நிதி நிர்வாக மற்றும் முகாமைத்துவம் என்பவற்றுடன் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடனான கல்விசார் கூட்டுறவு, ஆய்வுக்கான ஒத்துழைப்பு போன்ற முக்கிய அம்சங்களையும் சாதனைகளையும் உள்ளடக்கியுள்ளன.

2019 -2023 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலோபாயத் திட்டத்துடன் 2022ம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் செயற்பாடுகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும் போது, வளர்ந்துவருகின்ற எதிர்பார்ப்புகள்மற்றும் நாட்டினுடைய தேவைகள், முன்மொழியப்பட்ட அறிவு சார்ந்த பொருளாதாரம் மற்றும்இலங்கை அரசாங்கத்தின் கொள்கைகளில் மனித தேவைகள் என்பவற்றுடன் சேர்ந்தே 2019-2023 வரையான காலப்பகுதிக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழுவின் மூலோபாயத் திட்டத்தின் இலக்கு, நோக்கம் மற்றும் பிரதான அடைவுக் குறிகாட்டிகள் (KPI),என்பன கவனத்திற் கொள்ளப்பட்டன.

<u>2021/2022 கல்வியாண்டுக்காக பல்கலைக்கழகங்கள் /உயர் கல்வி நிறுவகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல்</u>

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது 2021/2022 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிகள் கையேட்டினை வெளியிடப்பட்டுள்ளதுடன் 2021 பெப்ருவரி மாதம் இடம்பெற்ற க.பொ.த (உயர்தர) பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 2022 செப். 05 மற்றும் 2022 செப். 23 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் விண்ணப்பதாரிகளிடமிருந்து இணையவழி மூலமாக 2021/2022 கல்வியாண்டுக்குரிய பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. பின்னர் 2022 திசெம்பர் 02 இல் வெட்டுப்புள்ளிகளும் வெளியிடப்பட்டதுடன் சாதாரண அனுமதியின் கீழ் ஒவ்வோர் இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்குமான மாணவர் தெரிவானது நிறைவ செய்யப்பட்டது. விசேட ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்படும் மாணவர்களுக்கான தெரிவானது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் 2023ம் ஆண்டில் நிறைவு செய்யப்படும்.

2021/2022 கல்வியாண்டின் பல்கலைக்கழக அனுமதிக்குரிய முக்கிய விபரங்கள் கீழே சுருக்கமகக் குறிப்பிடப்பட்டுள்ளன;

வெளியிடப்பட்ட க.பொ.த (உ/த) பெறுபேற்றின் அடிப்படையில் 2021/2022 கல்வியாண்டிற்காக பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை	**171,497**
2021/2022 கல்வியாண்டிற்காக பல்கலைக்கழக அனுமதிப்பதற்காக முன்மொழியப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை	**42,519**
தெரிவு செய்யப்பட்ட / அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை:	
(1) சாதாரண அனுமதி : (பெறுபேறுகள் மீள் மதிப்பீட்டுக்கு முன்னர்)	**41,228**
(2) விசேட ஏற்பாடுகள்:	**191**

பல்கலைக்கழக உள்வாங்கலை அதிகரிக்கும் முகமாக, 2022ம் ஆண்டில் பல்கலைக்கழக முறைமையின் கற்கைநெறிப் பட்டியலில் புதிய பதினாறு (04) கற்கை நெறிகள் சேர்க்கப்பட்டுள்ளதுடன் 2021/2022 கல்வியாண்டிற்காக அவை பின்வருமாறு அமுலாக்கம் செய்யப்பட்டன.

இல	கற்கை நெறி	பல்கலைக்கழகம்	உள்வாங்கல்
1	நிதிப் பொருளியல்	ஸ்ரீ ஜயவர்தனபுர	50
2	படைப்பாற்றல்மிக்க இசை தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தி		50
3	ஆங்கில மொழி மற்றும் பிரயோக மொழியியல்	ஊவா வெல்லஸ்ஸ	50
4	வங்கியியல் மற்றும் காப்புறுதி	வவுனியா	50
	மொத்தம்		**200**

இது தவிர 2021/2022 கல்வியாண்டுக்காக கீழ் குறிப்பிடப்படும் பல்கலைக்கழகங்களுக்கு தற்போதுள்ள பின்வரும் கற்கை நெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டன;

இல	கற்கை நெறி	பல்கலைக்கழகம்	உள்வாங்கல்
1	கணனி விஞ்ஞானம்	ஸ்ரீ ஜயவர்தனபுர	50
2	மென்பொருள் பொறியியல்		50
3	தகவல் முறைமை		50
	மொத்தம்		**150**

<u>கல்வி மற்றும் ஆய்வு அபிவிருத்தி</u>

உயர் கல்வியில் பரந்துபட்ட பங்கேற்பு மற்றும் சமமான அணுகுதலின் இலக்கை எளிதாக்குவதற்கு பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்கள் என்பன தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களிலான புதிய மற்றும் புத்தாக்கபூர்வமான கற்கைநெறிகளையும் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களையும் அறிமுகப்படுத்துவதற்காக ஊக்கப்படுத்தப்பட்டன. இந்த முயற்சிக்கு ஆதரவளிக்கும் வகையில் 2022ம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது:

- மூன்று (03) புதிய பீடங்கள்
- பதினான்கு (14) புதிய கற்கைப் பிரிவுகள்
- பத்து (10)புதிய பட்டப் பாடநெறித் திட்ட்ங்கள்
- ஒன்பது (09) புதிய சிறப்பு பட்டப் பாடநெறித் திட்டங்கள்
- முப்பத்து நான்கு (34) புதிய பட்டப்பின் படிப்பு பாடநெறித் திட்ட்ங்கள்
- ஒரு (01) புதிய வெளிவாரி பட்டப் பாடநெறித் திட்டம்

மேலும் அதிகரித்துள்ள வேலை வாய்ப்புக்களை மாணவர்களுக்கு வழங்கும் முகமாக, ஏற்கனவே நடைமுறையில் உள்ள பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு நாட்டின் தற்காலத் தேவைகளுக்கு ஏற்றது போல் புதிய அறிவு மற்றும் திறமைகளை வழங்கி அதனை மீள்கட்டமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதனடிப்படையில், 2022ம் ஆண்டில் இரண்டு (03) கற்கைப் பிரிவுகளின் பெயர் மாற்றங்கள் மற்றும் ஒரு (01) பட்டப் பாடநெறி நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் மாற்றங்கள் முன்மொழியப்பட்டன.

2022ம் ஆண்டில் பல்வேறு துறைகளுக்குமாக அந்தந்த துறைகளில் உயர்கல்வியுடன் தொடர்பான அறிக்கையிடல் மற்றும் உயர்கல்வியுடன் தொடர்பான விடயங்களில் ஆணைக்குழுவிற்கு பரிந்துரைகளை முன்வைப்பதற்காக இருபத்து நான்கு (24)

நிலையான குழுக்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் செயற்படுத்தப்பட்டன.

நிதிசார் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம்

மீளாய்வாண்டின்போது, திறைசேரியினால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறந்த முகாமைத்துவ நடைமுறைகளின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவகங்களின் சகல நிர்வாக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் அனைத்துப் பிரிவுகளையும் கண்காணிக்கும் நோக்கத்துடன் 2022 இல் 05 கணக்காய்வுக் கூட்டங்கள் இடம்பெற்றன. மேலும்,பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மத்திய உள்ளக கணக்காய்வு பிரிவானது அமைப்பினுள் முறையான நிர்வாகத்தை உறுதி செய்து கொள்வதற்காக பல்கலைக்கழகங்கள்/உயர் கல்வி நிறுவகங்களின் உள்ளகக் கணக்காய்வு பிரிவுகளுடன் முறையாக ஒத்துழைத்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் ஆளணி நடவடிக்கைகள் முகாமைத்துவம்

2022ம் ஆண்டுடன் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்காக அங்கீகரிக்கப்பட்ட மொத்த பதவியணியினர்களின் எண்ணிக்கை 325 ஆக காணப்பட்டதுடன், அதில் நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத ஊழியர்கள் உள்ளடங்குகின்றனர். 2022 டிசம்பர் 31 ஆந் திகதியிலுள்ளவாறு, ப.மா.ஆ செயலகத்தில் பணியாற்றிக் கொண்டிருப்போர் 239 ஆக காணப்பட்டது. 2022ம் ஆண்டில் முகாமைத்துவ உதவியாளர் தரம் III பதவிக்காக ஏழு (07) ஆரம்ப நிலை பதவிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டிருந்தன. மேலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்தின் 17 ஊழியர்கள் சேவையில் உறுதி செய்யப்பட்டுள்ளனர்.

வினைத்திறன் தடை தாண்டல் (EB) தேவைப்பாடுகளுக்கான மதிப்பீட்டின் பின்னர் 28 ஊழியர்கள் பதவி உயர்த்தப்பட்டதுடன் ஆறு (06) நியமனங்களும் மேற்கொள்ளப்பட்டன. ஊழியர் ஒருவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

2022ம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் மூன்று (03) உள்ளக இடமாற்றங்கள் மட்டுமே அறிக்கைப்படுத்தப்பட்டிருந்தது. ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 678, 696 மற்றும் 893 என்பவற்றின் ஏற்பாடுகளின் கீழ் நீண்டகால சேவை விருதுகளுக்கு ஒன்பது (09) ஊழியர்கள் தகுதி பெற்றிருந்ததுடன் அவர்கள் பல்கலைக்கழக அமைப்பிற்கு ஆற்றிய நீண்டகால புனிதமான சேவையினை கௌரவித்து பணப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

2022 இல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் ஏனைய பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களுக்கு மூன்று (03) இடமாற்றல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், ஏனைய பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களிலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு 04 இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. 04 ஓய்வுக்கு முன்னரான விடுமுறை, 04 பணிநிலை ஓய்வு பெறல்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சேவையிலிருந்து 01 பணி நீக்கம் மற்றும் 01 பதவி 06 கேட்டு விலகல்கள் என்பன மீளாய்வு ஆண்டுப் பகுதியில் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் பரீட்சை எழுதுவதற்காக 09 விடுமுறைகள், சம்பளமற்ற 04 விடுமுறைகள், 08 மகப்பேற்று விடுப்புக்கள் மற்றும் 10 காலம் கடந்த விடுப்புக்கள் 2022 ஆம் ஆண்டுப் பகுதியில் பதிவு செய்யப்பட்டன.

2022ம் ஆண்டில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சகல நிரந்தர ஊழியர்களுக்குமாக கவர்ச்சிகரமான மற்றும் நியாயமான கட்டணத்தில் தனியாள் கணக்கின் மூலம் குடும்பத்தினையும் உள்ளடக்கும் விதத்தில் மேம்படுத்தப்பட்ட சலுகைகள் உள்ளடக்கிய சுகாதாரக் காப்புறுதிக் காப்பீடானது வழங்கப்பட்டது.

பல்கலைக்கழக முறைமையில் மனித வளங்கள் பங்களிப்பு

2022ம் ஆண்டில் பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் (DMS) மொத்தமாக 118 புதிய ஆளணிப் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டன.

பல்கலைக்கழகங்கள்/உயர்கல்வி நிறுவகங்களின் நிர்வாகத் தர நியமனங்கள் /பதவியுயர்வுகள் என்பவற்றுக்குப் பொறுப்பாகவுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது 2022ம் ஆண்டில் 56 நியமனங்களை வழங்கியது. இதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போது ஏனைய பதவிநிலை தரங்களைக் கொண்ட பதவிகளிலும் 106 நியமனங்களையும் 466 பதவி உயர்வுகளையும் வழங்கிய அதேவேளை பல்கலைக்கழக அமைப்பினுள் மொத்தமாக 141 இடமாற்றங்களையும் மேற்கொண்டது.

2022 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான 12 மாத காலப்பகுதியில் பல்கலைக்கழகங்கள்/ உயர்கல்வி நிறுவகங்களிடமிருந்து சலுகை அடிப்படையிலான மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்களுக்காக மொத்தமாக 171 விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பெற்றுக் கொண்டது. இது உயர்கல்வி அமைச்சினூடாக நடைமுறைப்படுத்தப்படும்.

1978ம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தினூடாக ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளிற்குள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2022ம் ஆண்டில் 13 ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் இலகு தொழிற்பாட்டுக்காக ஆணைக்குழுவிடமிருந்து வந்த தீர்மானங்கள் மற்றும் கொள்கைகளுடன் தொடர்புடைய அவசியமான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் வழங்குவதற்காகவே இவை வெளியிடப்பட்டன.

பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதிசார் உதவி

புலமைப்பரிசில்கள் என்பது நன்கொடையாளர்கள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ((UGC)) ஒப்புக்கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் தனிநபர்கள் அல்லது நிறுவனங்களால் நிறுவப்பட்ட மற்றும் எதிர்காலத்தில் நிறுவப்படக்கூடியவையாக காணப்படுகின்றன. இந்த நிதிசார் உதவியானது அரச பல்கலைக்கழகங்களில் உள்வாங்கப்படுகின்ற தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தமது கல்வியை மேற்கொள்வதற்காக வழங்கப்படுகிறது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கல்வி விவகாரங்கள் திணைக்களமானது தற்பொழுது நிதித் திணைக்களம் மற்றும் அனுமதிகள் திணைக்களம் என்பவற்றின் உதவியுடன் புலமைப்பரிசில் திட்டங்களை ஒருங்கிணைத்துக் கொண்டிருக்கின்றது.

பல்கலைக்கழகக் கல்விசார் ஆளணி அங்கத்தவர்களின உயர்கல்வித் தேவைகளுக்கான உதவி மற்றும் நிதியுதவியை வழங்குதல்

மீளாய்வாண்டின் போது, கல்விசார் ஊழியர்களின் குறிப்பாக இளம் பல்கலைக்கழகக் கல்விசார் ஆளணி அங்கத்தவர்களுக்கு தமது உயர்கல்வித் தேவையினைப் பெற்றுக் கொள்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது வாய்ப்புக்களை உருவாக்குவதற்காக சிரத்தையுடன் பணியாற்றியது. இத்தகைய முயற்சிகளானவை ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் சர்வதேச ஒத்துழைப்புப் பிரிவினால் (DRIC) முதற்கட்டமாக ஆரம்பிக்கப்பட்டதுடன் அம் முயற்சிகள் பின்வருமாறு காணப்படுகின்றன:

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி நிறுவகங்களின் கல்வி ஊழியர்களின் நிரந்தர உறுப்பினர்களுக்கு முதுமாணி மற்றும் முனைவர் பட்டப்படிப்புகளை கற்பதற்கு நிதி உதவியை வழங்குகிறது. இந்த மானிய திட்டத்தின் நோக்கம், கல்வியாளர்கள் தமது தொழில் முன்னேற்றத்திற்கு தேவையான தகுதிகளைப் பெற்றுக் கொள்ள அனைத்து துறைகளிலும் அவர்களுக்கான நிதிசார் உதவியை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக வழங்குவதன் மூலம் அரச பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சி திறனை பலப்படுத்துவதாகும்.

மானியத்தின் மொத்த மதிப்பானது துறை, ஆய்வின் தன்மை மற்றும் கற்கை நிகழ்ச்சித் திட்டத்தை நடத்தும் நாடு போன்றவற்றின் அடிப்படையில் மாறுபடும்.

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் நிலவும் பல்கலைக்கழகங்களின் கல்விசார் ஆளணியின் மற்றும் நிர்வாக ஆளணி ஊழியர்களின் பயன்கருதி அவர்களுக்கு தங்களுடைய ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பை பூர்த்தி செய்து கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் ஜப்பான் சர் பல்கலைக்கழகத்துடன் இணைந்து புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பல்கலைக்கழகங்களிலுள்ள கல்வியியலாளர்களின் பயன்கருதி அவுஸ்திரேலியாவில் கற்றலில் முன்னணியில் திகழும் குயின்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் (QUT) இணைந்து இணைந்த/ தனித்தனியான கலாநிதிப் பட்ட நிகழ்ச்சித் திட்டமொன்றினை ஆரம்பித்துள்ளது.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள பல்கலைக்கழக கல்விசார் ஆளணி அங்கத்தவர்களுக்கு பட்டப் பின்படிப்பை (PhD) வழங்கும் விதமாக அவுஸ்திரேலியாவில் குயின்ஸ்லாந்திலுள்ள கிறிபித் பல்கலைக்கழகத்துடன் இணைந்து இணை அனுசரணையுடனான புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டமொன்றினை ஆரம்பித்துள்ளது.

உயர்கல்வி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திப் பணிகள்

2022ம் ஆண்டில் புதிய கட்டுமானங்கள், நடைபெற்றுவருகின்ற செயற்றிட்டங்கள், புனரமைக்கப்பட்ட செயற்றிட்டங்கள், கையகப்படுத்தல்கள் மற்றும் மனித மூலதன அபிவிருத்தி செயற்றிட்டங்கள், அத்துடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் என்பவற்றுக்காக மொத்த தொகை ரூபா.4,700 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த தொகை ரூபா. 3,042 மில்லியனை திறைசேரி பரிந்துரைத்து விடுவித்துள்ளது.

ஆண்டினுள் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிடமிருந்து 10 புதிய செயற்றிட்ட முன்மொழிவுகள் பெறப்பட்டதுடன் மேலும் கவனமாக ஆராய்ந்து மதிப்பீடு செய்த பின்னர் *8 முன்மொழிவுகள் மாத்திரமே 2022 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டன. நிரல் அமைச்சினால் 2022 ஆம் ஆண்டில் இந்த 08 தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டது. 2022ம் ஆண்டில் பௌதீக ரீதியாக எந்தவொரு செயற்றிட்டமும் ஆரம்பிக்கப்படவில்லையென்பதோடு ஆண்டிறுதியில் ரூ.28,748 மில்லியன் பெறுமதியில் பல்கலைக்கழக முறைமைகளுக்குள் வடிவமைத்தல் மற்றும் கட்டுமாண செயன்முறைகளில் 56 கட்டுமாண செயற்றிட்டங்கள் பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மீளாய்வாண்டில் மொத்தமாக மதிக்கப்பட்ட செலவு ரூ. 99.1 மில்லியன்கள் பெறுமதியான 1 செயற்றிட்டம் பூரணப்படுத்தப்பட்டு பல்கலைக்கழக முறைமையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்ப உதவி

ஒதுக்கப்பட்ட பொறுப்புகளுக்கு ஏற்ப, தகவல் தொமில்நுட்பப் பிரிவானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்தின் தகவல் தொழில்நுட்பத் தேவைகளை எளிதாக்குவதற்கு ஆரோக்கியமானதும் தடையற்றதுமான கணினி அமைப்புகளை உறுதிசெய்து கொள்வதற்கு முகாமைத்துவ ஒத்துழைப்பை வழங்கியது. புதிய தகவல் தொடர்பாடல் அமைப்பு அபிவிருத்தி மற்றும் நிறுவுதல், தற்போதுள்ள அமைப்புகளை மேம்படுத்துதல், தேவைப்பாடுகள் / விவரக்குறிப்புகளை உருவாக்குதல், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒலி ஒளி செயற்பாடுகளை முகாமை செய்தல், கணினி மற்றும் தகவல் தொடர்பாடல் அமைப்புகளின் ஒட்டுமொத்த நிர்வாகம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்/உயர் கல்வி நிறுவனங்களின் ஒட்டுமொத்த நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான தரவுச் செயலாக்க நடவடிக்கைகள் ஆகியவை இந்த பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளில் அடங்கும்.

2022 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்ப பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளின் சுருக்கம் பின்வருமாறு:

- புதிய தகவல் தொடர்பாடல் அமைப்பு அபிவிருத்தி மற்றும் நிறுவுதல், தற்போதுள்ள அமைப்புகளை மேம்படுத்துதல், தேவைப்பாடுகள் / விவரக்குறிப்புகளை உருவாக்குதல், கணினி அமைப்பு மற்றும் வலைத்தளம் உள்ளடங்கலான மென்பொருள், தொடர்பாடல் முறைமை, தரவுச் செயலாக்க செயற்பாடுகள் மற்றும் அமைப்பிற்கு தகவல் தொழில்நுட்பத் தேவைகளை வழங்குவதற்கு ஆரோக்கியமானதும் தடையற்றதுமான கணினி அமைப்பினை நிர்வகித்தல்.

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒலி ஒளிச் செயற்பாடுகளை நிர்வகித்தல்.

- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் (ICTA) மற்றும் அரச சர்புடைய, அரச சார்பற்ற அமைப்புகளான LEARN, SLT, LK Domain Registry போன்றவற்றுடன் ஒருங்கிணைப்பை செய்தல்

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த நிர்வாகத்தையும் மேம்படுத்துவதற்கான அதிநவீன தகவல் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தல்.

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையத்தளம் மற்றும் இணைய முகப்பு என்பவற்றை நிர்வகித்தல் மற்றும் பேணுதல்.

- வெற்றிகரமான வெளியீட்டினை வழங்குவதற்கு பின்வரும் பகுதிகளின் கீழ் உள்ளடக்கி அப்ளிகேசன் மேம்பாட்டு குழு மற்றும் சேவை வழங்குநர்களை ஒன்றிணைத்தல்.
    - 2021 / 2022 கல்வியாண்டுக்காக இணையத்தளம் மூலமாக வெட்டுப்புள்ளிகளின் வெளியீடு.
    - பல்கலைக்கழக அனுமதிகள் தொடர்புபட்ட குறுஞ்செய்தி மற்றும் அரசாங்க தகவல் நிலையச் (1919 அழைப்பு மையம்)செயற்பாடுகள்.
    - முகாமைத்துவ உதவியாளர் மற்றும் ஆரம்ப நிலை தரங்களின் பதவி உயர்வுகளுடன் தொடர்பாக இணையவழி விண்ணப்பங்களுக்கு அரசாங்கத்தின் குறுஞ்செய்தி (GovSMS) சேவை.
    - பல்கலைக்கழகங்களுக்கான இணையவழி மாணவர் பதிவு – (2021/2022 கல்வியாண்டு)
    - இணையவழி விண்ணப்பங் கோரல் செயன்முறை - 2021/2022 கல்வியாண்டு

- ICTA உடனான இணையவழி பணம் செலுத்தல் செயன்முறையின் நிர்வாகம் மற்றும் ஒருங்கிணைப்பு.

- இணைய முகப்பு, சபைக்கான முற்பதிவுச் செயன்முறை, ஊழியர்களின் வரவினைக் குறித்துக் கொள்கின்ற ஆளணிப் பிரிவுக்கான eHRM முறைமை, ஊழியர் பதவி உயர்வுக்கான இணையவழி விண்ணப்பங் கோரல் போன்ற வணிக அப்பிளிகேசன்களின் அமூலாக்கம் மற்றும் பராமரிப்பு.

- இலங்கையில் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கல்வியின் நூற்றாண்டு விழாவுக்கான (1921 -2021) இணையத்தளப் பக்கத்தை அதன் முன்னைய உள்ளடக்கத்துடன் மீண்டும் தயாரித்து அதனை நிலவும் சர்வரில் (https://eugc.ac.lk/hss/) உள்ளடக்குதல்.

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் புதிய அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

- **மென்பொருள்கள் மேம்பாடு**

  - முகாமைத்துவ உதவியாளர் தரம் III இலிருந்து தரம் II இற்கு பதவி உயர்த்துவதற்கான இணையவழி விண்ணப்பங்கள் கோரல் மற்றும் அதனைக் கையாளும் அமைப்பு
  - முகாமைத்துவ உதவியாளர் தரம் III பதவிக்கு ஆரம்ப தர ஊழியர்களை நியமிப்பதற்காக இணையவழி விண்ணப்பங்களைக் கோரல் மற்றும் அந்த அலுவல்களை கையாளும் அமைப்பு
  - சிரேஷ்ட உதவிச் செயலாளர் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர் மற்றும் சிரேஷ்ட உதவி கணக்காளர் / சிரேஷ்ட உதவி நிதி நிர்வாகி / சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் பதவிகளுக்கு இணையவழி விண்ணப்பங்களை அழைத்தல் மற்றும் அந்த அலுவல்களை கையாளும் அமைப்பு
  - ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் கையாளும் அமைப்பு
  - களஞ்சியசாலை முகாமைத்துவ அமைப்பு
  - சட்டம் மற்றும் ஆவணங்கள் பிரிவுக்கு கோப்புக்களை விநியோகித்தல் அமைப்பு
  - வாகனங்களை ஒதுக்கிக்கொள்வதற்கான இணையவழி விண்ணப்பம்
  - பல்கலைக்கழகங்களுக்கு இணையவழியில் இடமாற்றல் கோரிக்கை விண்ணப்பம்
  - ஊழியர் எண்ணிக்கையுடன் தொடர்புடைய அறிக்கைகளை தயாரிப்பதற்கான கணனிப் பயன்பாடு

<u>முகாமைத்துவ தகவல் முறைமைப் பிரிவின் செயற்பாடுகள் மற்றும் உதவி</u>

2022ம் ஆண்டில் முகாமைத்துவ தகவல் அமைப்பு பிரிவினால் இலங்கை பல்கலைக்கழகப் புள்ளிவிபரவியல் - 2021 உடன் தொடர்புபட்ட முக்கியமான இரண்டு வெளியீடுகள் / அறிக்கைகளையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையத் தளத்தில் வெப்போமெற்றிக்ஸ் (webometrics) மற்றும் QS தரப்படுத்தல்களில் பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் புதுப்பிக்கப்பட்ட தரப்படுத்தல்களையும் வெளியிடப்பட்டது. மேலும் இந்தக் காலப் பகுதியினுள் நிறைவு செய்யப்பட்ட 09 விசேட ஒப்படைகள் கையளிக்கப்பட்டன.

<u>தர உறுதிப்பாட்டுப் பேரவையின் (QAC) நடவடிக்கைகள்</u>

2022 ஆம் ஆண்டு தர உறுதிப்பாட்டு பேரவைக்கு வேலைப்பளுமிக்க ஆண்டாக இருந்ததுடன், வருடாந்த செயற்பாடுகளை அடைந்துகொள்வதற்கான இலக்குகள் மற்றும் கொவிட் 19 நோய் தொற்று நோய் காரணமாக கடந்த 2 ஆண்டுகளில் மீதமாகிய பணிகளையும் நிறைவேற்ற வேண்டியிருந்தது. தர உறுதிப்பாட்டுப்

பேரவையானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்களால் ஆதரவழிக்கப்பட்டு தர உறுதிப்பாட்டுப் பேரவை தொடர்பான நிலையான குழுவினால் வழிநடாத்தப்படுகிறது. செயல் திட்டத்தின் அடிப்படையில் 2022 டிசம்பர் 31 வரையில் தர உறுதிப்பாட்டுப் பேரவையின் முன்னேற்றம் பின்வருமாறு:

- பல்கலைக்கழகங்களில் உள்ளக தர உறுதிப்படுத்தல் செயற்பாடுகளுக்கு உதவுதல்.
- தற்போதுள்ள பாடம்சார் அடைவுமட்டக் கூற்றுக்களை இற்றைப்படுத்தல் மற்றும் பொருத்தமான இடத்தில் புதிய கூற்றுக்களை உருவாக்குதல்.
- நிறுவனம்சார் மீளாய்வுகளை நடாத்துதல் (IRs).
- நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகளை நடாத்துதல்(PRs).
- இலங்கை தகைமைகள் வழிகாட்டி - 2015 (SLQF-2015) இற்கமைய பல்கலைக்கழகங்கள் தங்களுடைய தகமை மட்டத்தை ஒழுங்கமைப்பதற்கு உதவுதல்.
- பொதுவான கல்வி நாட்காட்டியை செயற்படுத்துவதற்கு பல்கலைக்கழகங்களுக்கு உதவுதல்.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் தகமைக்கான தேசிய அங்கீகாரம் மற்றும் தகவல் நிலையத்தினை தாபித்தல்.

<u>பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவனங்களில் பால்நிலை ஒப்பரவு மற்றும் சமத்துவம் (GEE), பாலியல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்செயல்கள் (SGBV) மற்றும் பகிடிவதைகள்</u>

இந்த நிலையமானது பால்நிலை ஒப்பரவு மற்றும் சமத்துவத்தை மேம்படுத்துவதற்காக இலங்கையிலுள்ள அரச பல்கலைக்கழகங்களில் பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கிய தன்மையை உணரக் கூடிய கற்றல்/பணி புரியும் சூழலை மேம்படுத்துவதற்கும் நிறுவப்பட்டுள்ளது. அதன்படி பால்நிலை ஒப்பரவு /சமத்துவம் குறித்த நிலையான குழுவின் வழிகாட்டுதலின் கீழ் தொழிற்படும் இந்த நிலையமானது பல்கலைக்கழக சமூகங்களிலுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதில் கவனம் செலுத்தும் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. பேராசிரியர் ஹேமாமாலி குணதிலக அவர்கள் (பெண்கள் மறறும் பால்நிலை பற்றிய கலாநிதிப் பட்டம், வோர்விக் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம்) இந்த நிலையத்திற்கான பணிப்பாளராக 2022 மே மாதம் ஓய்வு விடுமுறையின் கீழ் நியமிக்கப்பட்டார். அவருடைய ஒரு வருட சேவைக் காலத்தின் பின்னர் அவர் இந்த நிலையத்தின் பதில் கடமை பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன், 2022 ஆம் ஆண்டில் அந்த நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு:

முறைப்பாட்டு நுழைவாயில்

அரச பல்கலைக்கழக சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களும் இணையவழி முறைப்பாட்டு நுழைவாயிலை அணுக முடியும். அத்துடன் பகிடிவதை தொடர்பான ஆனால் முக்கியமாக பாலியல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறையென (SGBV) வகைப்படுத்தக்கூடிய சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளையும் பதிவுசெய்யலாம். 2022 ஆம் ஆண்டில் முறைப்பாடுகளின் எண்ணிக்கை வழக்கத்தைவிட குறைவாக உள்ளது. பல்கலைக்கழகங்கள் இணையவழி மூலமாக இடம்பெற்றதன் காரணத்தால் மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தினுள் வரவில்லை. எவ்வாறாயினும் சில முறைப்பாடுகள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அந்தந்த பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பப்பட்டதுடன் ஏற்கனவேயுள்ள முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு தீர்க்கப்பட்டன. (கிடைக்கப்பெற்ற மற்றும் தேவையான நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 71 ஆக இருந்ததுடன், 18 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டன.)

ஆராய்ச்சி முயற்சிகள்

இலங்கை அரச பல்கலைக்கழகங்களில் பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறைகள் பரவுவது தொடர்பான ஆராய்ச்சி மற்றும் பகிடிவதையை எதிர்த்துப் போராடுவதற்குரிய உத்திகளை முன்மொழிதல் மற்றும் UNICEF நிதியுதவியுடன் SGBV தொடர்பான 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் வெளியிடப்பட்டது. செயலாளர், கல்வி அமைச்சு, யுனிசெப் அதிகாரிகள், துணைவேந்தர்கள், பால்நிலை ஒப்புரவு மற்றும் நியாயம் பற்றிய நிலையியற் குழுவின் அங்கத்தவர்கள், பல்கலைக்கழகங்களின் பால்நிலை தொடர்பான நிலையங்களின் பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய அதிதிகளின் பங்கேற்புடன் ஆராய்ச்சி அறிக்கையை வெளியிடுவதற்காக பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவில் சாதாரண வைபவமொன்று நடாத்தப்பட்டது.

2022 காலப்பகுதியில் எடுக்கப்பட்ட முயற்சிகள்

இலங்கை அரச பல்கலைக்கழகங்களில் பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பாலின நிலையை அடிப்படையாகக்கொண்ட வன்முறைகள் அதிகமாகுவதற்கான காரணங்களை இனங்கண்டுகொள்ளல் மற்றும் அவ்வாறான நிகழ்வுகளைக் குறைத்துக்கொள்வதற்கான உபாயவழிகளை முன்மொழிவதற்காக முக்கியமாக பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பாலின நிலையை அடிப்படையாகக்கொண்ட வன்முறை தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்களில் பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பாலின நிலையை அடிப்படையாகக்கொண்ட வன்முறைகள் பரவுவதற்கான பிரதான காரணம் பன்முகத்தன்மை மற்றும் சமமான அணுகல் தொடர்பான சிக்கல்களை தீர்ப்பதற்கு முடியாமை என்பது ஆய்வுகளின்போது கண்டறியப்பட்டது. அவ்வாறான கண்டறிதல்களின் அடிப்படையில் தற்போது பாலின நிலை ஒப்புரவு / சமத்துவம் பற்றிய நிலையத்தின் வளவாளர்களின் உதவியுடன் "பன்முகத்தன்மையுடன் வாழ்வதற்கு கற்றுக்கொள்ளல்" எனும் பெயரில் பாடநெறியொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடநெறியானது கீழ் குறிப்பிடப்படும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளுடன் இணையானதாகஇருக்கின்றது:

இலக்கு 4: தரமான கல்வி
இலக்கு 5: பால்நிலை சமத்துவம்
இலக்கு 10: குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள்
இலக்கு 11: பேண்தகு நகரங்கள் மற்றும் சமூகங்கள்
இலக்கு 16: சமாதானம், நீதி மற்றும் உறுதியான நிறுவகங்கள்

பாலின நிலை பற்றிய உலகளாவிய மாநாடு

பாலின நிலை பற்றிய உலகளாவிய மாநாட்டினை ஏற்பாடு செய்வதற்கும் 2024 இல் அதனை நடாத்துவதற்கும் நிலையியற் குழுவினால் முன்மொழியப்பட்டது. மாநாட்டை ஏற்பாடு செய்வதற்காக உப குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அது நிலையியற் குழுவின் தன்னார்வ அங்கத்தவர்கள் மற்றும் அனைத்துப் பல்கலைக்கழகங்களின் பாலின நிலை பற்றிய நிலையங்களின் பணிப்பாளர்களை உள்ளடக்கியுள்ளது.

பாலின நிலை ஒப்புரவு / சமத்துவம் பற்றிய நிலையத்தின் ஆளணிக்கான பயிற்சியளிப்பு

பாலின நிலை ஒப்புரவு / சமத்துவம் பற்றிய நிலையத்தின் ஆளணியின் பணிப்பாளரால் அதன் ஆளணிக்கான பயிற்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது. இந்தப் பயிற்சியானது பாலின நிலை மற்றும் அசமத்துவத்தின் வேறு விதங்கள், தனிநபர் விருத்தி, தொழில்சார் முன்னேற்றம் மற்றும் நபர்களுக்கிடையில் மற்றும் சமூக திறன்கள் போன்ற துறைகள் உள்ளடக்கப்பட்டது.

அட்டவணைகள் பட்டியல்

அட்.இல.	பெயர்	பக்கம்
5.1.1	சாதாரண ஏற்பாட்டின் கீழ் பல்கலைக்கழங்களுக்கு அனுமதித்துக்கொள்ளல் (மீள் மதிப்பீட்டுக்கு முன்னர்) *	11-14
5.2	2021/2022 கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கற்கை நெறிகள்	14
5.3	2021/2022 கல்வியாண்டிற்காக ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்களில் காணப்படும் கற்கை நெறிகள்	15
5.4.(அ)	கட்புலனற்ற மாணவர்கள் மற்றும் விசேட தேவையுடைய மாணவாகளுக்கான அனுமதி	15
5.4.(ஆ)	இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் திறமையை வெளிப்படுத்திய மாணவர்களை அனுமதித்தல்	16-19
5.4.(ஈ)	இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு வெளிநாட்டு கல்வித் தகமையுடைய மாணவர்கள் அனுமதி	20
5.4.(உ)	ஆயுதப்படை, பொலிஸ் சேவை மற்றும் விசேட அதிரடிப் படையின் பட்டியலிடப்பட்ட நிரந்தர ஆளணியை அனுமதித்தல்	20
5.4.(ஊ)	விளையாட்டுத்துறையில் சிறப்புத் திறமைகளைக் காண்பித்துள்ள விண்ணப்பதாரிகள்	20
5.4.(ஏ)	மேலதிக பிரவேசத்தின் கீழ் மாணவர்களை அனுமதித்தல்	21
5.5 (அ)	வெளிநாட்டுத் தகைமைகளைக் கொண்ட மாணவர்களை அனுமதித்துக்கொள்ளல்	21
5.5 (ஆ)	ஆயுதப்படை, பொலிஸ் சேவை மற்றும் விசேட அதிரடிப் படையின் நிரந்தர ஆளணியை அனுமதித்தல்	22
5.5 (இ)	கட்புலனற்ற மற்றும் விசேட தேவையுடைய மாணவர்கள	22
5.5 ஊ)	மேலதிக பிரவேசம்	22

அட்.இல.	பெயர்	பக்கம்
6.1	2022 இல் இடம்பெற்ற நிலையான குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை	24-25
6.2.1	2022 இல் அங்கீகரிக்கப்பட்ட பீடங்கள்	25
6.2.2	2022 இல் அங்கீகரிக்கப்பட்ட கற்கைப் பிரிவுகள்	25-26
6.2.3	2022 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட புதிய இளமாணிப் பட்டப் பாடநெறிகள்	26
6.2.4	2022 இல் அங்கீகரிக்கப்பட்டஇளமாணி சிறப்பு பட்டப் பாடநெறிகள்	27
6.2.5	2022 இல் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் படிப்புப் பாடநெறிகள்	27-29
6.2.6	2022 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட வெளிவாரிப் பட்டப் பாடநெறிகள்	29
6.3.1	2022 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட கற்கைப் பிரிவுகளின் பெயர்களை மாற்றியமைத்தல்	30
6.3.2	2022 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட இளமாணிப் பட்டப் பாடநெறிகளின் பெயர்களை மாற்றியமைத்தல்	30
6.5.5	2022 இல் கைச்சாத்திடப்பட்ட அனுமதிப் பத்திர ஒப்பந்தங்கள் மற்றும் சந்தையில் காணப்படும் உற்பத்திகள்	37-38

அட்.இல.	பெயர்	பக்கம்
7.2	பல்கலைக்கழக முறைமையில் நிதி ஒதுக்கீடு/பயன்பாடு	43
7.2.1	மீண்டெழும் அளிப்புக்கள் (RBG)	43
7.2.2	மூலதன அளிப்புக்கள் (CBG)	43
7.2.3	வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் – 2022	44
7.4	பல்கலைக்கழக முறைமையில் நிதி ஒதுக்கீடு/பயன்பாடு 2018 முதல் 2022 வரை	46
7.5	மகாபொல மற்றும் உதவு தொகையைச் செலுத்துவதற்கான வருடாந்த நிதி ஒதுக்கீடு	46-47
7.6	2022.12.31 ஆம் திகதியன்று மகாபொல மற்றும் உதவு தொகை பெறுபவர்களின் எண்ணிக்கை	47-48
7.7	மகாபொல மற்றும் உதவு தொகை பற்றிய பொழிப்பு	49

அட்.இல.	பெயர்	பக்கம்
8	2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஆளணி பற்றிய தகவல்கள்	49
8.3	ஆண்டில் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ள விடுமுறை பெற்றுக்கொள்ளல்	50-51

அட்.இல.	பெயர்	பக்கம்
9.1.1	2022 இல் பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்கள் என்பவற்றுக்கு அங்கீகரிக்கப்பட்ட புதிய ஆளணி [வகைப்பாட்டு அடிப்படையில்]	519
9.1.2	உயர்கல்வி நிறுவகங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை	52
9.2.1(அ)	உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் பதவி நியமனங்களின் எண்ணிக்கை (சட்டம் மற்றும் ஆவணங்கள்)	52
9.2.2 (அ)	பிரதிச் செயலாளர் / பிரதிப் பதிவாளர் பதவிகளுக்கான பதவி உயர்வு	52-53
9.2.2(ஆ)	பிரதிக் கணக்காளர் / பிரதி நிதி நிர்வாகி / பிரதி உள்ளக கணக்காய்வாளர் பதவி	53-54
9.2.2(இ)	பிரதிச் செயலாளர் / பிரதிப் பதிவாளர் பதவி (சட்டம் மற்றும் ஆவணங்கள்) பதவிக்கான பதவி உயர்வுகளின் எண்ணிக்கை	54
9.3.1	ஏனைய பதவிநிலைத் தரங்களின் பதவிகளுக்கான நியமனங்கள் - 2022	54
9.3.2	ஏனைய பதவிநிலைத் தரங்களின் பதவிகளுக்கான பதவி உயர்வுகள் - 2022	54-55
9.4	ஆரம்ப தர ஊழியர் பதவியிலிருந்து முகாமைத்துவ உதவியாளர் தரம் III பதவியில் நியமித்தல்	56
9.9	மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை	57
9.10 (அ)	உதவிப் பேராசிரியர் / பேராசிரியர் பதவிகளுக்காக திறமை அடிப்படையிலான பதவி உயர்வுகள் தொடர்பான தெரிவுக் குழுக்களுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பெயர் குறிப்பிடல்கள்	58

9.10 (ஆ)	அறிவித்தல்கள் ஊடாக வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட பேராசிரியர் பதவிகளுக்கான தெரிவுக்குழுக்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பெயர் குறிப்பிடல்கள்	58-59
9.10 (இ)	பிரதி நூலகர் பதவிக்கு திறமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பதவி உயர்வுகள் தொடர்பான தெரிவுக் குழுக்களுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பெயர் குறிப்பிடல்கள்	59
9.10 (ஈ)	அறிவித்தல்கள் ஊடாக வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட நூலகர் பதவி தொடர்பான தெரிவுக் குழுக்களுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பெயர் குறிப்பிடல்கள்	59
9.10 (உ)	விரிவுரையாளர் (தகுதிகாண்) / விரிவுரையாளர் (உறுதி செய்யப்படாத), சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - II/I பதவிக்கான ஆட்சேர்ப்பு / பதவி உயர்வு தொடர்பான தெரிவுக் குழுக்களுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பெயர் குறிப்பிடல்கள்	60
9.11 (அ)	விரிவுரையாளர் பதவி (தகுதிகாண்) பதவி நியமனத்திற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட எண்ணிக்கை	60
9.11 (ஆ)	விரிவுரையாளர் பதவிக்கு அங்கீகாரம் எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கை (உறுதிப்படுத்தப்படாத)	61
9.11 (இ)	சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - II/I பதவிக்கு அங்கீகாரம் எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கை	61

அட்.இல.	பெயர்	பக்கம்
10.1	நிறைவு செய்யப்பட்டு பல்கலைக்கழக முறைமையிடம் ஒப்படைக்கப்பட்ட செயற்றிட்டங்கள்	62

அட்.இல.	பெயர்	பக்கம்
15.4	முன்னேற்ற அறிக்கை – உள்ளக கணக்காய்வுப் பிரிவு	79-81
15.5	வெளியிடப்பட்ட உள்ளக கணக்காய்வுச் சுற்றறிக்கைகள் மற்றும் தாபன சுற்றறிக்கைகள்	81

அட்.இல.	பெயர்	பக்கம்
18.1.1	மிட்சுபிசி கம்பனியின் சர்வதேச புலமைப்பரிசில்	87
18.1.2	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புலமைப்பரிசில் திட்டம்	88
18.1.3	சிறந்த பல்கலைக்கழக மாணவருக்கான புலமைப்பரிசில்கள்	88-89
18.1.4	டப்ளியூ பீ ஹென்திரிக் அப்பு அபேதீர புலமைப்பரிசில் திட்டம்	89-90


அட்.இல.	பெயர்	பக்கம்
20.1	ஓய்வூதிய நிதியத்தின் பிரதான நிதிசார் தகவல்கள்	96
20.2	2022.12.31 ஆம் திகதியன்று முதலீடுகள் பற்றிய பொழிப்பு - பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்	99
20.3	ஓய்வூதிய நிதியத்தினால் வெளியிடப்பட்ட வீதங்கள்	100

அட்.இல.	பெயர்	பக்கம்
21.1	நிதிக் கூற்றுக்களின் பொழிப்பு - பல்கலைக்கழக சேமலாப நிதியம்	101
21.2	2022.12.31 ஆம் திகதியன்று முதலீடுகளின் பொழிப்பு - பல்கலைக்கழக சேமலாப நிதியம்	104
21.3	நிலையான வைப்புக்கள், திறைசேரிப் பிணைப் பத்திரங்கள் / உண்டியல்கள் மற்றும் கடன்களின் 05 வருட சாதாரண வட்டி வீதங்கள்	105

அட்.இல.	பெயர்	பக்கம்
22.1	2022 இல் வெளியிடப்பட்ட ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள்	106-107
22.2	2022 இல் வெளியிடப்பட்ட தாபனச் சுற்றறிக்கைகள்	108-109

உ.க – உள்ளக கணக்காய்வாளர்
பி.செ –பிரதிச் செயலாளர்
சி.உ.செ – சிரேஸ்ட உதவிச் செயலாளர்
சி.உ.கண – சிரேஸ்ட உதவிக் கணக்காளர்
சி.உ.உ.கண– சிரேஸ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர்
உ.செ – உதவிச் செயலாளர்
உ.உ.கண – உதவி உள்ளக கணக்காய்வாளர்
ம.தொ.அ – மக்கள் தொடர்புகள் அலுவலர்
ம.வ- மனித வளங்கள்
உ.அ.பி – உட்கட்டுமான அபிவிருத்தி பிரிவு
த.உ.பே – தர உறுதிப்பாடுப் பேரவை
ச&ஆ - சட்ட மற்றும் ஆவணப்படுத்தல்
வ&பரா- வழங்கல்கள் மற்றும் பராமரிப்பு
ம.வ.அ.அ - மனித வளங்கள் அபிவிருத்தி அலகு
ப.சே.நி – பல்கலைக்கழக சேமலாப நிதியம்
ப.சே.மே.ச – பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீட்டு சபை
பா.பா.நி – பால்நிலை ஒப்பரவு மற்றம் சமத்துவ நிலையம்

ப.மா.ஆ குழுவின் அமைப்பு



1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முகாமைத்துவம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாவுள்ள ஆணைக்குழு 2022 ஆம் ஆண்டில் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது;

தலைவர்	**சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க** *பொருளியல் இளங்கலைமாணி (சிறப்பு) (ஸ்ரீ ஜெ.ப.க);பொருளியல் முதுகலைமாணி (கொழும்பு); கிராமிய அபிவிருத்தி பொருளியல் முதுவிஞ்ஞானமாணி. (சாகா,ஜப்பான்); கலாநிதி (ககோசிமா, ஜப்பான்)*
உப தலைவர்	**சிரேஷ்ட பேராசிரியர் சந்தன பீ.உடவத்த** *விஞ்ஞான இளமாணி, தத்துவமாணி, கலாநிதி, பட்டய இரசாயனவியலாளர், இரசாயனவியல் பொறியியல் டிப்ளோமா (Dip.Chem. Eng),உயிரியல் தொழில்நுட்ப டிப்ளோமா (Dip.Bio.Tech)*
ஆணைக்குழு உறுப்பினர்கள்	**சங்கைக்குரிய பேராசிரியர் கொட்டபிட்டியே ராகுல தேரர்** *இளங்கலைமாணி (சிறப்பு), முதுகலைமாணி, கலாநிதி (பேராதனை) அக்கமகாபண்டிதர்*
	சிரேஷ்ட பேராசிரியர். A K W ஜெயவர்தன *விஞ்ஞான இளமாணி (சிறப்பு), (மொறட்டுவ), நிர்மாணங்கள் விஞ்ஞான முதுமாணி (லொப்பறொ, ஐ.இ.), நிர்மாணங்கள் முகாமைத்துவம் கலாநிதி (லொப்பறொ, ஐ.இ.),பட்டயப் பொறியியலாளர், F.I.F (S.L), MSSE(SL), IntPE (SL), FIPM(SL), FNAS(SL),GSLID*
	சிரேஷ்ட பேராசிரியர். வசந்தி அரசரத்னம் *விஞ்ஞான இளமாணி, விஞ்ஞான முதுமாணி, கலாநிதி (உயிர் இரசாயனவியல்)*
	சிரேஸ்ட பேராசிரியர். பிறேமகுமார டீ சில்வா *இ.கலைமாணி, முதுகலைமாணி (கொழும்பு), விஞ்ஞான முதுமாணி மற்றும் கலாநிதி (எடின்பிறோ, ஐ.இ.)*
	திரு. பாலித்த குமாரசிங்க (ஜனாதிபதி சட்டத்தரணி)
திறைசேரியின் பிரதிநிதி	**திரு. R H W A குமாரசிரி** *இ.கலைமாணி (சிறப்பு) கொழும்பு ப.கலை, 1991, பட்டப் பின்படிப்பு டிப்ளோமா (கைரோ), 1997, முதுகலைமாணி (அபிவிருத்தி கற்கை), நெதர்லாந்து, 2002*
செயலாளர்	**கலாநிதி. பிரியந்த பிறேமகுமார** *விஞ்ஞான இளமாணி (சிறப்பு), வணிக முதுமாணி (MBA)(கொழும்பு)கலாநிதி (வூகான்)*

2. பல்கலைக்கழக முகாமைத்துவம்

2.1 கொழும்புப் பல்கலைக்கழகம்

வேந்தர்
சாசன கீர்த்தி ஸ்ரீ புத்த சாசன சோபன சங்கைக்குரிய முருத்தெட்டுவே ஆனந்த நாயக்க தேரர்

உப வேந்தர்
சிஷ்ட பேராசிரியர் சீ.என். விஜயரத்ன (2022.04.11 வரை)
சிரேஷ்ட பேராசிரியர் எச்.டீ.கருணாரத்ன (2022.04.12 முதல் அமுலுக்கு வரும் வகையில்)

பிரதி உப வேந்தர்
வெற்றிடம் நிலவுகின்றது

பதிவாளர்
திரு. கே.எ.எஸ். எட்வேட்

2.2 பேராதனைப் பல்கலைக்கழகம்

வேந்தர்
பேராசிரியர். கே.எம். டி சில்வா (2022.05.04 வரை)
பேராசிரியர் ஜீ.எச்.பீரிஸ் (2022.05.05 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில்)

உப வேந்தர்
பேராசிரியர். எம்.டி. லமாவன்ச

பிரதி உப வேந்தர்
பேராசிரியர். டபிள்யூ.எம்.ரி. மடுஜித்

பதிவாளர்
திருமதி. எம்.ஜே.ஜீ. தர்மசேன (பதில் கடமை)

2.3 ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

வேந்தர்
சியாமோபாலி மஹா நிக்காயவின் கோட்டை ஸ்ரீ கல்யாணி சாம தர்ம மஹா சங்க சபையின் ஸ்ரீ மகா விஹாரை வன்சலங்கார விமலகீர்த்தி ஸ்ரீ தம்மலோக சாகித்தியசூரி சங்கைக்குரிய கலாநிதி இத்தேபான தம்மலங்கார மகாநாயக்க தேரர்

உப வேந்தர்
சிரேஸ்ட பேராசிரியர். எஸ். எஸ். எல். டப்ளியு. லியனகே(2022.12.23 வரை)
பேராசிரியர் எஸ்.எம்.யூ.பீ.சுபசிங்க (பதில் கடமை) (2022.12.24 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில்)

பதிவாளர்
திரு. டபிள்யூ.எம்.ஆர்.டபிள்யூ.எ.வி. வெலிவிட்ட

2.4 களணிப் பல்கலைக்கழகம்

வேந்தர்
சங்கைக்குரிய பேராசிரியர் கொள்ளுபிட்டியே மகிந்த சங்கரக்கித்த நாயக்க தேரர்

உப வேந்தர்
சிரேஷ்ட பேராசிரியர் நிலந்தி டி சில்வா

பதிவாளர்
திரு. கே.கே.கே தர்மதிலக்க

2.5 மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

வேந்தர்
வித்தியாஜோதி பேரா. கே.கே.வை.டபிள்யூ. பெரேரா

உப வேந்தர்
சிரேஷ்ட பேராசிரியர் என்.டி. குணவர்தன

பிரதி உப வேந்தர்
பேரா. பீ.கே.எஸ். மகாநாம (*2022.10.04* வரை)
கலாநிதி டீ.பீ.சந்திரசேக்கர (2022.10.05 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில்)

பதிவாளர்
திருமதி டபிள்யூ.எம்.டி.பீ.எம் குலுகல்ல

2.6 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வேந்தர்
பேரா. எஸ். பத்மநாதன்

உப வேந்தர்
பேரா. எஸ்.ஸ்ரீ. சற்குணராசா

பிரதி உப வேந்தர்
வெற்றிடம் நிலவுகின்றது

பதிவாளர்
திரு. வீ. காண்டீபன்

2.7 றுகுணு பல்கலைக்கழகம்

வேந்தர்
சங்கைக்குரிய கலாநிதி. அக்குறேடிய நந்த நாயக்க தேரர்

உப வேந்தர்
சிரேஸ்ட பேரா. ரி.எஸ். டி அமரசேன

பிரதி உப வேந்தர்
பேரா.ஈ.பீ.எஸ். சந்தன

பதிவாளர்
திருமதி.பி.எஸ். கலுகம

2.8 இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்

வேந்தர்
கலாநிதி.வி.விவேகாநந்தராஜா (*2022.05.14* வரை)
பேராசிரியர் எம்.செல்வராஜா (*2022.06.02* ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில்)

உப வேந்தர்
பேரா.எவ்.சி. றாகேல் (*2022.01.21* வரை)
பேராசிரியர் வீ.கனகசிங்கம் (*2022.02.22* ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில்)

பிரதி உப வேந்தர்
பிரதி உப வேந்தர் பதவி 2022.04.24 ஆம் திகதி வரை வெற்றிடமாகியிருந்தது
பேராசிரியர் கே.ஈ.கருணாகரன் (*2022.04.25* ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில்)

பதிவாளர்
திரு.ஏ.பகிரதன்

2.9 இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

வேந்தர்
பேராசிரியர்.ஏ.எம். இஸ்ஹாக் (*2022. 11.18* வரை)
திரு. எப்.முஸ்தபா (*2022.11.19* ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில்)

உப வேந்தர்
பேரா.ஏ.ரமீஸ்

பதிவாளர்
திரு. எச்.ஏ. சத்தார்

2.10 இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம்

வேந்தர்
சங்கைக்குரிய ராஜக்கீய பண்டிதர் இதாலவெட்னுவவெ ஞானதிலக தேரர்

உப வேந்தர்
பேரா.ஜி.ஏ.எஸ் கினிகத்தர

பதிவாளர்
திரு.என்.சி.எஸ் சேனக (பதில் கடமை) *(2022.04.17 வரை)*
திரு. ஏ.எம்.ஜீ.பி.அபேசிங்க (*2022.04.18* ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில்)

2.11 இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

வேந்தர்
சங்கைக்குரிய பேராசிரியர் கம்புருகமுவெ வஜிர நாயக்க தேரர்

உப வேந்தர்
பேரா.ஆர்.எம்.யு.எஸ்.கே. ரத்நாயக்க

பதிவாளர்
திரு.எஸ்.உயன்கொட

2.12 இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்

வேந்தர்
தேசபந்து பேராசிரியர் ரியுலே சில்வா

உப வேந்தர்
சிரேஸ்ட பேரா.ஜே.எம்.யு.கே ஜெயசிங்க *(2022.06.30* ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில்)

கலாநிதி.எஸ் போவத்த (பதில் கடமை) *(2022.01.01* ஆம் திகதி முதல் 2022.06.29 ஆம் திகதி வரை)

பதிவாளர்
திரு.டபிள்யு.எ.டீ சித்ராநந்த

2.13 இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

வேந்தர்
திரிபீடகச்சாரிய தர்ம கீர்த்தி ஸ்ரீ சுமங்கல ரத்தினபால தம்மரஹித்த அதிசங்கைக்குரிய பென்கமுவே ஸ்ரீ தம்மாதின்ன நாயக்க தேரர்

உப வேந்தர்
பேரா. ஜெ.எல் ரத்னசேகர

பதிவாளர்
திரு.எம்.எப்.எச் கரீம்

2.14 இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

வேந்தர்
ஓய்வுநிலைப் பேராசிரியர்.டி.ஏ. தன்த்ரிசொட

உப வேந்தர்
பேராசிரியர் பி.எம்.சி. திலகரத்தின

பிரதி உப வேந்தர்
வெற்றிடம் நிலவுகின்றது

பதிவாளர்
திருமதி டபிள்யு.எல்.வி. ஜயசேன

2.15 கட்புல ஆற்றுகை கலைப் பல்கலைக்கழகம்

வேந்தர்
ஓய்வுநிலைப் பேராசிரியர் சங்கீத் நிபுன் சனத் நந்தசிறி

உப வேந்தர்
சிஷ்ேட பேராசிரியர் (கலாநிதி) ஆர்.பீ. மகாலியனாறாச்சி
சிரேஷ்ட விரிவுரையாளர் ஜே.ரவீந்திர (பதில் கடமை) (2022.08.28 முதல் 2022.09.10 வரை)

பதிவாளர்
திரு. பி.எம் தயாவன்ச

2.16 கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம் (GWUIM)

[1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் 2021.03.01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம் தாபிக்கப்பட்டது.]

வேந்தர்
சாகித்ய சக்கரவர்த்தி, மல்வத்து பீடத்தின் அனுநாயக்க தேரர், சங்கைக்குரிய கலாநிதி. நியாங்கொடை தர்மகீர்த்தி ஸ்ரீ சங்கரக்கித்த விஜிதசிரி தேரர்

உப வேந்தர்

பேராசிரியர் ஆர்.டபிள்யூ சேனவிரெத்ன (பதில் கடமை)

பதிவாளர்
திரு.பி.ஏ.என்.கிரிசாந்த

2.17 வவுனியா பல்கலைக்கழகம்

	விருத்திசெய்தல். 2. தகவல் தொழில்நுட்பத் துறையில் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தியை எதிர்பார்ப்பவர்களுக்கு தகவல் தொழில்நுட்பக் கல்வியை தொடர்ந்து மேற்கொள்வதற்கான அடிப்படையை வழங்குதல். கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கற்கை நிறுவகத்தினால் கற்கைநெறியின் அபிவிருத்தி செலவுக்கு (மூலதன செலவு) முதலீடு செய்வதுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மீண்டெழும் செலவுகளுக்கான நிதியுதவி வழங்கப்படுமென்ற நிபந்தனையின் கீழ் தகவல் தொழில்நுட்ப பல்கலைக்கழக தேர்ச்சிப் பரீட்சை திட்டத்தை தொடர்ந்தும் நடாத்துவதற்கு ஆணைக்குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

6.5.2 ஆங்கில மொழிக்கான பல்கலைக்கழகப் பரீட்சை (UTEL)

ஆங்கில மொழிக்கான பல்கலைக்கழகப் பரீட்சை (UTEL) என்றால் பல்கலைக்கழகங்களின் 3 ஆம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தேசிய மட்டத்திலான சான்றிதழ் வழங்கப்படும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டலின் கீழ் நிர்வகிக்கப்படும் தேசிய மட்டத்திலான பரீட்சையொன்றாகும். பரீட்சையை நிர்வகிப்பதற்காக UTEL இற்கான வெட்டுப் புள்ளி மேம்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டது. UTEL மாணவர்களின் கையேட்டுடனான இறுவட்டுக்கள் பல்கலைக்கழகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. UTELஇன் முன்னோடி பரீட்சை நிர்வாகம் UTELஇன் செயல்திட்டக் குழுவுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டலின் கீழ் 2023 ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்படும் கால அட்டவணைக்கமைய முன்னோடிப் பரீட்சையின் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்ததன் பின்னர் UTEL இன் உண்மையான பரீட்சை 2023 ஆம் ஆண்டிறுதியில் நிர்வகிக்கப்படுகின்றது.

6.5.3. பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் நடாத்தப்படும் இணையவழி / இலத்திரனியல் கற்றல் முறையில் ஆங்கில மொழியைக் கற்பித்தல் திட்டம்

பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் மாணவர்களின் ஆங்கில மொழியறிவை மேம்படுத்தும் நோக்கில் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் நடாத்தப்படும் இணையவழி / இலத்திரனியல் முறையில் ஆங்கில மொழியைக் கற்பித்தல் திட்டம் திட்டமிடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மொடியூல் 15 இன் பாடத்திட்டம், ஆலோசனைக் குழு மற்றும் கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவகத்தினால் (UCSC) தயாரிக்கப்பட்டுள்ளது. 2023 ஜனவரி மாத ஆரம்பத்தில் புதிய பல்கலைக்கழக அனுமதிக்காக மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்திருக்கும் காலப் பகுதியில் அவர்களுடைய ஆங்கில மொழியை மேம்படுத்துவதற்காக இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது.

6.5.4 பல்கலைக்கழகங்கள் / வளாகங்களில் சமூக நல்லிணக்க நிலையங்களை அமைத்தல்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) சனாதிபதி செயலகம் மற்றும் அரச பல்கலைக்கழகங்கள் / வளாகங்கள் (17 பல்கலைக்கழகங்கள் மற்றும் 02 வளாகங்கள்) ஒன்றிணைந்து ஆரம்பித்து வைக்கப்பட்டது. இலங்கைப் பல்கலைக்கழகப் பிரஜைகளிடையே சமூக ஒருமைப்பாட்டு செயற்பாடுகள் ஊடாக சுமார் 1,810,036 மாணவர் சமூகத்திற்கு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.

இந்த நிலையங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விடயப் பரப்பின் கீழ் நிறுவப்படுவதுடன், பல்கலைக்கழக முறைமையில் சமூக நல்லிணக்க நிலையங்களின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்காக தனியான நிலையான குழுவொன்று அமைக்கப்படும். பல்கலைக்கழகங்கள் / வளாகங்களின் சமூக நல்லிணக்க நிலையங்கள் துணைவேந்தர்கள் / வளாக அதிபதிகளின் விடயப் பரப்பின் கீழ் நிறுவப்படுவதுடன் அவற்றின் நிர்வாகம் மற்றும் நிதி முகாமைத்துவம், முகாமைத்துவ சபையின் கட்டமைப்பின் கீழ் நிலவும் பணிப்பாளர் ஒருவரின் தலைமையிலான முகாமைத்துவக் குழுவொன்றினால் நிர்வகிக்கப்படுகின்றது.

இந்தச் செயற்பாட்டுடன் இணையான வகையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இலங்கை அரசாங்கம் மற்றும் சிவில் சமூகக் குழுக்களுடன் ஒத்துழைப்புடன் பல்கலைக்கழகங்களுக்கு பொதுக் கொள்கை சட்டகம் உள்ளடக்கப்பட்ட 10/2021 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டல் மற்றும் விடயப் பரப்பின் கீழ் நிபுணர்களைக் கொண்ட நிலையான குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளது. 10/2021 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கைக்கமைய பல்கலைக்கழகங்கள் மற்றும் வளாகங்கள் ஏற்கனவே அவர்களுடைய சமூக நல்லிணக்க நிலையங்களுக்கு பணிப்பாளர்களை நியமித்துள்ளதுடன், அவர்கள் இந்த நிலையங்களின் அபிவிருத்தி மற்றும் நிலைத்திருப்பு தொடர்பாக அவர்களுடைய மூலோபாயத் திட்டத்தில் உள்ளடக்கியுள்ளனர்.

6.5.5 2022 இல் உயர்கல்வி விரிவுபடுத்தல் மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்தல் (AHEAD) திட்டத்தினால் வழங்கப்படும் பல்கலைக்கழக வணிகத் தொடர்பு (UBL) உதவி

AHEAD செயற்பாட்டின் ஊடாக 17 பல்கலைக்கழங்களில் வணிகத் தொடர்புகள் கூடங்களை (UBL) முறையாக UBL புள்ளிப் பத்திரத்தினூடாக அவற்றின் அபிவிருத்தியை கவனமாக கண்காணிப்பதன் மூலம் தாபிக்கப்பட்டது.

பல்கலைக்கழகங்களில் புலமைச் சொத்துக்களின் (IP) பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்கு உதவி வழங்குவதற்காக மத்திய அலுவலகமொன்று இருக்கவில்லை. அது தற்போது பல்கலைக்கழக வணிக தொடர்பு கூடங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. காப்புரிமை அனுமதிப்பத்திரத்திற்கு கோரிக்கை விடுப்பதற்கு முன்னர் வர்த்தக மற்றும் இலவசமாக காப்புரிமை தரவுகள் தளங்களைப் பயன்படுத்தி உலகத்தில் அதற்குச் சமமான புதிய உற்பத்திகள் இருக்கின்றனவா என்பதனைக் கண்டறிவதற்கான ஆராய்ச்சிகளுக்கு பல்கலைக்கழக வணிகத் தொடர்பு உதவி வழங்குகின்றது.

வணிக பங்காளர்களுக்கு புதிய கண்டுபிடிப்பாளர்களால் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களுக்கான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு பல்கலைக்கழக வணிகத் தொடர்பு ஆராய்ச்சியாளர்களுக்கு உதவி வழங்குகின்றது. 6.5.5 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் 2022 இல் 34 அனுமதிப்பத்திர ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டதுடன் 37 உற்பத்திகள் தற்போது உள்நாட்டுச் சந்தையில் காணப்படுகின்றன.

அனுமதிப்பத்திர ஒப்பந்தங்களின் தாக்கம் இங்கு காணப்படும் இலக்கங்களின் ஊடாக வெளிப்படுத்தப்படாதிருக்க முடியும். ஆனாலும் ஒரு அனுமதிப்பத்திர ஒப்பந்தத்திற்கும் உயர் பெறுமதி மற்றும் சமூகத்திற்கு குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

பல்கலைக்கழகம்	**அனுமதிப்பத்திர ஒப்பந்தம்**	**சந்தையில் காணப்படும் உற்பத்திகள்**
றுஹுணு பல்கலைக்கழகம்	1	9
தென்கிழக்கு பல்கலைக்கழகம்	1	0
கொழும்புப் பல்கலைக்கழகம்	3	4
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	2	3
கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்	1	1
இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம்	0	0
பேராதனை பல்கலைக்கழகம்	1	1
இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்	5	7
களணி பல்கலைக்கழகம்	1	0
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்	1	3
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	5	2
இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்	6	1
மொரட்டுவை பல்கலைக்கழகம்	1	3

பல்கலைக்கழகம்	அனுமதிப்பத்திர ஒப்பந்தம்	சந்தையில் காணப்படும் உற்பத்திகள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	3	1
வவுனியா பல்கலைக்கழகம்	0	0
கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்	0	0
இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்	3	2
மொத்தம்	**34**	**37**


அட்டவணை 6.5.5. 2022 இல் கைச்சாத்திடப்பட்ட அனுமதிப் பத்திர ஒப்பந்தங்கள் மற்றும் சந்தையில் காணப்படும் உற்பத்திகள்

i. உணவு உற்பத்திகள்

பல்கலைக்கழக வணிக தொடர்பு தொழில்நுட்ப பரிமாற்றல் செயற்பாடுகள் காரணமாக சந்தையில் தற்பொது காணப்படும் சில உற்பத்திகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.



ii. இலத்திரனியல் மற்றும் இயந்திர சாதனங்கள்



iii. விவசாயம்





iv. மருத்துவம் / தாவர சாறுகள் உற்பத்தி



நாட்டில் நிலவும் தற்போதைய பொருளாதார நிலைமை காரணமாக தொலைநோக்கிகள், நுண்ணறிவுக் கெமராக்கள், நரம்பில் வலையமைப்பு செயலி, மின்னலை முன்கூட்டியே கண்டறியும் அமைப்பு, வானொலி அலைவரிசை கம்பியற்ற தொடர்பாடல் பொறிமுறை, உமிழ்வு கண்டறியும் அமைப்பு, யானைகளை நிறுத்துவதற்கான செங்குத்து வேலி போன்ற உயர்மட்டத்திலான புதிய கண்டுபிடிப்புகளுக்கு வணிக பங்காளர்களை கண்டறிதல் பல்கலைக்கழக வணிக தொடர்புகளுக்கு சிரமமாகும்.

6.5.5.1 கொள்கை ரீதியிலான ஆரம்பிப்புக்கள்

1. பல்கலைக்கழக வணிகத் தொடர்புகளின் நிலைத்திருப்புக்காக புதிய உற்பத்திகள் மேம்பாடு மற்றும் வணிகமயப்படுத்திலில் ஈடுபடுவதற்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்களை ஊக்கப்படுத்துதல் முக்கியமாகும். எனவே ஆராய்ச்சிக் கொடுப்பனவுகளை செலுத்தும்போது ஆராய்ச்சிகளை வணிகமயப்படுத்தலைக் கவனத்திற்கொள்வதன் முக்கியத்துவம் AHEAD இனால் வலியுறுத்தப்பட்டது.

   இது, 5/2014 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் தற்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் பிரவேசித்துப் பெற்றுக்கொள்ள முடியும். (https://www.ugc.ac.lk/index.php?option=com_content&view=article&id=2387%3Aestab-circular-no-52014iii -payment-of-research-allowance&catid=183%3A2022& Itemid =47&lang=en).

2. அந்த சுற்றறிக்கைக்கமைய கல்விசார் ஆளணி அங்கத்தவரால் தயாரிக்கப்பட்ட தொழில்நுட்பமொன்றை கைத்தொழிலொன்றுக்கான அனுமதிப் பத்திரத்தை வழங்கும்போது அந்தத் தொழில்நுட்பத்தை வணிக ரீதியில் பயன்படுத்திக்கொள்ள முடியுமென்பதற்கான சாட்சியங்கள் இருக்குமாயின் ஆராய்ச்சிக் கொடுப்பனவுக்கு விண்ணப்பிப்பதற்கு அந்த கல்விசார் ஆளணி அங்கத்தவர் தகைமையைப் பெறுகின்றார்.

3. பல்கலைக்கழக வணிகத் தொடர்புடன் கலந்துரையாடி வணிக பங்காளியொருவரை தெரிவு செய்துகொள்வதற்கான சுதந்திரத்தை ஆராய்ச்சிக் குழுக்களுக்குப் பெற்றுக்கொடுத்தலானது தொழில்நுட்ப பரிமாற்றல் செயற்பாட்டை முறைப்படுத்துவதற்கு மற்றும் அநாவசியத் தாமதங்களை தவிர்த்துக்கொள்வதற்கு முக்கியமான நடவடிக்கையாகும். தொடர்ந்தும் அவ்வாறான வணிகப் பங்காளியை கண்டுபிடிப்பதற்கு முடியாதபோது அந்த உற்பத்திகள் / செயற்பாட்டை சந்தைக்கு கொண்டு செல்வதற்கு ஆராய்ச்சிக் குழுவுக்கு ஆரம்ப வழிகாட்டி (start-up guide) உதவியாக இருக்கும். இந்தத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்காக புதிய ஆணைக்குழுச் சுற்றறிக்கையொன்று (இல. 12/2022) வெளியிடப்பட்டது.

(https://www.ugc.ac.lk/index.php?option=com_content&view=article&id=2389%3Acommissioncircular-no-122022-selection-of-the-commercial-partners-byresearch-and-innovation-teams-at-universitiesand-start-up-ahead-&catid=185%3A-circulars-published-in-2022-012022-and-above&Itemid=20&lang=en).



6.5.5.2 ஏனைய அபிவிருத்தி பங்காளர்களின் உதவி


AHEAD திட்டம், ஐக்கிய அமெரிக்க வணிகத் திணைக்களம், வணிக சட்டங்கள் மேம்பாட்டுத் திட்டம் (CLDP) என்பவற்றுடன் இணைந்து கொண்டுள்ளதுடன், 2022 இல் தொழில்நுட்ப பரிமாற்றம் பற்றிய வெபினார் (இணையவழிக் கலந்துரையாடல்) தொடரொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் கலந்துரையாடல் அடிப்படையிலான கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் திறன்கள் (negotiation skills) பற்றிய பயிற்சியொன்று, அதனுடன் தொடர்புடைய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி 40 பங்கேற்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்காக நேபாளத்தில் தனிப்பட்ட செயலமர்வொன்று (in person workshop) ஏற்பாடு செய்யப்பட்டது. WIPO தொலைக்கல்வி நிகழ்ச்சித் திட்டத்தை பயன்படுத்தி சில முகாமையாளர்களுக்கு தொடர்ச்சியாக இணையவழி மூலமான கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு புலமைப்பரிசில்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

7. நிதி நிர்வாகம்

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 15 ஆவது பிரிவுக்கமைய உயர்கல்வி நிறுவகங்களின் இணக்கப்பாட்டுடன் உயர்கல்வி நிறுவகங்களில் மூன்றாண்டுகளுக்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு. உயர்கல்வி நிறுவகங்களினால் சமர்ப்பிக்கப்படும் மூன்றாண்டுகளுக்கான வரவு செலவுத் திட்டம் பல்கலைக்கழக மானியங்பள் ஆணைக்குழுவின் பரிநதுரையுடன் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 100 ஆவது பிரிவுக்கமைய பொதுத் திறைசேரியின் பிரதி செயலாளரால் தலைப்பு இல. 214 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதன் பிரகாரம் உயர்கல்வி நிறுவகங்களுக்கு மீண்டெழும் மற்றும் மூலதன அளிப்புக்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

7.1 பல்கலைக்கழக முறைமையில் நிதி முகாமைத்துவம் பற்றிய பொழிப்பு நடைமுறை



i. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 15 (ii) ஆம் பிரிவுக்கமைய, பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களினால் அவர்களுடைய வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைப்பு இல. 214 இன் கீழ் அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட "வரவு செலவுத் திட்டத்திற்கான கோரல்கள்"இற்கமைய அந்தத் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும்.

ii. தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தினால் பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களுக்கான வருடாந்த மூலதன மற்றும் மீண்டெழும் அளிப்புக்கள் பரிந்துஐரக்கப்படுவதுடன் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் உள்ளடக்கப்படும். செலவு செய்வதற்கான அதிகார ஒப்படைப்பு மற்றும் ஆண்டிற்கான அரச செலவுகளை முகாமைப்படுத்தல் ம்றறும் வருடாந்த வரவு செலவு மற்றும் செயல் திட்டத்தை தயாரித்தல் சம்பந்தமாக தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படும்.

iii. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 100 (2) பிரிவுக்கமைய பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அளிப்புக்களின் அடிப்படையில் பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களின் நிர்வாக சபையினால் அவர்களுடைய தேவைகளுக்கான நிதியைப் பயன்படுத்துவதற்கு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது.

- 02/2019 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கைக்கமைய, திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவினத்தின் (TEC) கீழ் அங்கீகாரத்திற்காக பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களின் அபிவிருத்தித் திட்டங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரையுடன் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

- 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவுக்கமைய மூலதனக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ரூ. 500,000/- இலும் அதிக தொகையைப் பெற்றுக்கொள்வதற்காக கல்வி அமைச்சரின் பரிந்துரைக்கமைய நிதியமைச்சரின் இணக்கப்பாடு அவசியமாகும்.

- நிதி ஒழுங்குவிதிகளுக்கமைய, பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களின் நிர்வாக சபைகளினால் நிதிசார் வரையறைகள் தீர்மானிக்கப்படுகின்றது.

- நி.ஒ. 135. அனுமதி – நி.ஒ. 136; அங்கீகாரம் - நி.ஒ. 137; சான்றுப்படுத்தல் - நி.ஒ. 138; கையொப்பமிடும் அதிகாரம் - நி.ஒ. 139-141 இற்கமைய ஒப்படைக்கப்படும் நிதிசார் வரையறைகளுக்கிணங்க பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களினால் செலவுகள் மேற்கொள்ளப்படும்.

- இது தவிர பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களினால் செலவுகள் முகாமைத்துவம் மற்றும் தேசிய பெறுகைகள் முகவர் நிறுவனங்களுக்கான வழிகாட்டல்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட திறைசேரி சுற்றறிக்கையைப் பின்பற்றப்படல் வேண்டும்.

iv. பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்கள் அவர்களுடைய மாதாந்த நிதிசார் கணிப்பை (செலவுகள் பற்றிய தகவல்கள்) தயாரித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் வழிகாட்டல்களுக்கமைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரையுடன் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

v. பல்கலைக்கழகங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கணிப்பின் அடிப்படையில் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தினால் அவர்களுடைய பரிந்துரைகளுடன் விடுவிப்புக் கட்டளைகளை (release orders) வெளியிடல்.

vi. தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களின் செலவுகளை முகாமைப்படுத்துவதற்காக திறைசெரி செயற்பாட்டுத் திணைக்களத்தினால் நிதி ஏற்பாடு / நிதி நேரடியாக பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களுக்கு வெளியிடப்படும்.

- பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்கள் அரசாங்கத்தின் அளிப்புக்களாக திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் நிதி ஏற்பாடுகளை அறிக்கைப்படுத்துகின்றன. அத்தோடு திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தினால் திறைசேரிக்கு செலவுகளாக விடுவிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளை அறிக்கைப்படுத்துகின்றன.

vii. பல்கலைக்கழகங்கள் அட்டுறு அடிப்படையில் நிதியறிக்கைகளை பேணி வருவதுடன் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கமைய நிதிசார் தகவல்கள் தயாரிக்கப்படுகின்றன.

- நிதியாண்டு நிறைவடைந்து 60 தினங்களுக்குள் வருடாந்த நிதிசார் தகவல்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படும்.

- நிதியாண்டு நிறைவடைந்து 150 தினங்களுக்குள் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட நிதிசார் தகவல்களுடனான ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைப்பு இல. 214 இற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகள், நிதியாண்டு முடிவடைந்ததன் பின்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படும்.

7.2 பல்கலைக்கழக முறைமையில் நிதி ஒதுக்கீடு / பயன்பாடு

அளிப்புக்கள்	2021 ஆம் ஆண்டு			2022 ஆம் ஆண்டு		
	மொத்த ஒதுக்கீடு ரூபா.மில்லி	விடுவிக்கப் பட்ட மொத்த நிதி ரூபா.மில்லி	விடுவிக்கப் பட்ட/பயன் படுத்தப்பட்ட மொத்த ஒதுக்கீட்டின் வீதம் %	மொத்த நிதி ஒதுக்கீடு ரூபா.மில்லி	விடுவிக்கப் பட்ட மொத்த நிதி ரூபா.மில்லி	விடுவித்த/ பயன்படுத்திய மொத்த ஒதுக்கீட்டின் வீதம் %
மீண்டெழும்	53,995	52,490	97%	56,864	54,975	97%
மூலதனம்	8,400	6,549	78%	4,700	3,042	65%
மொத்தம்	**62,395**	**59,039**	**95%**	**61,564**	**58,017**	**94%**

அட்டவணை 7.2 பல்கலைக்கழக முறைமையில் நிதி ஒதுக்கீடு/பயன்பாடு

7.2.1 மீண்டெழும் அளிப்புக்கள் (RBG)

மில்.ரூ.

மூலதனச் செலவின வகை	ஒதுக்கீடு 2022	2022 இல் விடுவிக்கப்பட்ட நிதி
ஆளுக்கான வேதனாதிகள்	49,372	48,493
ஏனைய மீண்டெழும்	5,667	4,657
மகாபொல மற்றும் மாணவர் உதவு தொகை	1,825	1,825
மொத்தம்	**56,864**	**54,975**


அட்டவணை 7.2.1 மீண்டெழும் அளிப்புக்கள் (RBG)

7.2.2 மூலதன அளிப்புக்கள் (CBG)

மில்.ரூ.

மூலதன செலவின வகை	ஒதுக்கீடு 2022	2022 இல் விடுவிக்கப் பட்ட நிதி
கட்டுமானச் செயற்றிட்டங்கள்	2,127	2,672
நிலையான சொத்தின் புனர்நிர்மாணம் மற்றும் மேம்பாடு	596	
நிலையான சொத்துக்கள் கையகப்படுத்தல்	799	
மனித மூலதன அபிவிருத்திக் செயற்றிட்டங்கள்	205	
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி	68	
வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள்	905	370
மொத்தம்	**4,700**	**3,042**

அட்டவணை 7.2.2 மூலதன அளிப்புக்கள் (CBG)




7.2.3 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் – 2022

மில்.ரூ.

மூலதன செலவின வகை	ஒதுக்கீடு 2022	2022 இல் விடுவிக்கப்பட்ட நிதி
பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்ப பீடங்களை அமைத்தல்	750	318
புதிய கற்கைநெறிகளை அறிமுகஞ் செய்வதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் - மருத்துவ பீடம் (முதலாம் கட்டம்), இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்	50	-
கொழும்பு பல்கலைக்கழக புள்ளிவிபரவியல் கற்கைப் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகள்	35	35
ஈரல் சார்ந்த நோய்களுக்காக கொழும்பு வடக்கு நிலையத்தை அமைத்தல், களணிப் பல்கலைக்கழகம்	70	17
மொத்தம்	**905**	**370**

அட்டவணை 7.2.3 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் - 2022

7.3 உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் - 2022




10 - 30%
அத்திவாரம், கொன்க்ரீட் அமைப்புக்களின் 50% மற்றும் சுவர்களை நிறைவு செய்தல்

31 - 50%
100% கொன்க்ரீட் அமைப்புக்கள் மற்றும் சுவர்களை நிறைவு செய்தல்

51 - 70%
அனைத்து சாந்து பூச்சுப் பணிகள், நீர்க் குழாய்கள் மற்றும் மின்சார வயரின் பணிகளை நிறைவு செய்தல்

71 - 99%
கதவுகள், யன்னல்கள், தளவமைப்பு, வர்ணப் பூச்சு, நீர்க் குழாய், உடல் ஆரோக்கியம், மின்சார துணைக் கருவிகள், வெளிப்புர பணிகளை நிறைவு செய்தல்



7.4 பல்கலைக்கழக முறைமையில் நிதி ஒதுக்கீடு/பயன்பாடு 2018 முதல் 2022 வரை

மில்.ரூ.

	2018	2019	2020	2021	2022
1. அரசாங்க நிதி ஏற்பாடு					
மீண்டெழும்	36,786	46,076	49,497	53,995	56,864
மூலதனம்	19,454	13,980	9,545	8,400	4,700
2. செலவுகள்					
மீண்டெழும்	35,935	45,544	49,457	52,490	54,975
மூலதனம்	14,098	10,820	9,545	6,549	3,042
3. மாணவர் உதவு தொகை					
மகாபொல	1,305	1,257	1,420	1,138	930
மாணவர் உதவி	521	707	705	862	895

குறிப்பு : *திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் விடுவிக்கப்பட்ட நிதியானது மீண்டெழும், மூலதன மற்றும் மாணவர் நிதி உதவி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

அட்டவணை 7.4 : பல்கலைக்கழக முறைமையில் நிதி ஒதுக்கீடு/பயன்பாடு 2018 முதல் 2022 வரை

7.5 மகாபொல மற்றும் உதவு தொகையைச் செலுத்துவதற்கான வருடாந்த நிதி ஒதுக்கீடு

மில்.ரூ.

இல	பல்கலைக்கழகம்/ உயர்கல்வி நிறுவனங்கள்	மகாபொல	உதவு தொகை	மொத்தம்
1	பேராதனைப் பல்கலைக்கழகம்	109	25	134
2	கொழும்புப் பல்கலைக்கழகம்	126	24	150
3	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	162	27	189
4	களனிப் பல்கலைக்கழகம்	137	39	176
5	மொறட்டுவப் பல்கலைக்கழகம்	69	16	85
6	றுகுணைப் பல்கலைக்கழகம்	92	80	172
7	யாழ்பாணப் பல்கலைக்கழகம்	71	84	155
8	இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்	31	68	100
9	இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்	38	75	113
10	இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம்	41	52	93
11	இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்	46	70	116
12	இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்	48	46	94
13	கட்புல ஆற்றுகைக் கலை பல்கலைக்கழகம்	7	14	21
14	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	19	46	65

15	கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவகம்	7	1	8
16	கம்பஹா விக்கிரமராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்	3	13	16
17	வவுனியாப் பல்கலைக்கழகம்	7	29	36
18	திருகோணமலை வளாகம் இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்	6	28	34
19	ஸ்ரீ பாளி வளாகம்	2	8	11
20	சுவாமி விபுலாநந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம்	3	18	22
21	சுதேச மருத்துவ நிறுவனம்	8	11	19
22	தொழில்நுட்பம் நிறுவகம், மொறட்டுவ பல்கலைக்கழகம்	3	29	32
	மொத்தம்	**1,035**	**803**	**1,838**

அட்டவணை 7.5 மகாபொல மற்றும் உதவு தொகையைச் செலுத்துவதற்கான வருடாந்த நிதி ஒதுக்கீடு

7.6 2022.12.31 ஆம் திகதியன்று மகாபொல மற்றும் உதவு தொகை பெறுபவர்களின் எண்ணிக்கை

இல	பல்கலைக்கழகம்/ உயர்கல்வி நிறுவனங்கள்	மகாபொல	உதவு தொகை	மொத்தம்
1	பேராதனைப் பல்கலைக்கழகம்	109	716	6,411
2	கொழும்புப் பல்கலைக்கழகம்	126	1,330	6,402
3	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	162	3,212	10,173
4	களனிப் பல்கலைக்கழகம்	137	2,680	8,065
5	மொறட்டுவப் பல்கலைக்கழகம்	69	1,118	4,200
6	றுகுணைப் பல்கலைக்கழகம்	92	4,032	7,861
7	யாழ்பாணப் பல்கலைக்கழகம்	71	2,847	7,083
8	இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்	31	2,538	4,214
9	இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்	38	1,985	3,327
10	இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம்	41	2,442	5,285
11	இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்	46	3,018	4,724
12	இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்	48	1,767	3,788
13	கட்புல ஆற்றுகைக் கலை பல்கலைக்கழகம்	7	885	1,722
14	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	19	1,016	1,704

இல	பல்கலைக்கழகம்/ உயர்கல்வி நிறுவனங்கள்	மகாபொல	உதவு தொகை	மொத்தம்
15	கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவகம்	7	146	427
16	கம்பஹா விக்கிரமராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்	3	424	539
17	வவுனியாப் பல்கலைக்கழகம்	7	741	1,037
18	திருகோணமலை வளாகம் இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்	6	735	797
19	ஸ்ரீ பாளி வளாகம்	2	397	545
20	சுவாமி விபுலாநந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம்	3	756	977
21	சுதேச மருத்துவ நிறுவனம்	414	435	849
22	தொழில்நுட்பம் நிறுவகம், மொறட்டுவ பல்கலைக்கழகம்	314	622	936
	மொத்தம்	**47,224**	**33,842**	**81,066**

அட்டவணை 7.6 2022.12.31 ஆம் திகதியன்று மகாபொல மற்றும் உதவு தொகை பெறுபவர்களின் எண்ணிக்கை

குறிப்பு I: *2020/2021 கல்வியாண்டுடன் தொடர்பாக மகாபொல புலமைப்பரிசில் பெறுபவர்களை தெரிவு செய்யும் பணி நிறைவு செய்யப்படவில்லை. மொத்த புலமைப்பரிசில் பெறுபவர்களின் எண்ணிக்கை 16,000 ஆகும்.*

குறிப்பு II: *கொழும்பு, ஜ,புர, களணி, மொரட்டுவை, றுஹுணு, சப்ரகமுவ, வயம்ப, சுதேச மருத்துவ நிறுவகம், கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவகம், கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம், மொரட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம், சுவாமி விபுலானந்த அழகியற்கலைகள் கற்கை நிறுவகம்,ஸ்ரீபாளி வளாகம் என்பவற்றிலிருந்து மாணவர் உதவு தொகை புலமைப்பரிசிலுக்காக 2020/2021 கல்வியாண்டிற்காக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், ஏனைய பல்கலைக்கழகங்களுக்கான தெரிவுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.*

7.7 மகாபொல மற்றும் உதவு தொகை பற்றிய பொழிப்பு

மகாபொல புலமைப்பரிசில், பல்கலைக்கழகங்களின் கோரிக்கைக்கமைய மகாபொல நம்பிக்கை நிதியத்தினூடாக மாணவர்களுக்கு நேரடியாகச் செலுத்தப்படுகின்றது. தற்போது செலுத்தப்படும் ரூ. 2550/- தொகை மகாபொல புலமைப்பரிசில் தவணைத் தொகை மகாபொல நம்பிக்கை நிதியத்தினால் வழங்கப்படுவதுடன் ரூ. 2450/- தொகை பொதுத் திறைசேரியின் பங்களிப்புடன் வழங்கப்படுகின்றது.

விபரம்	மகாபொல	உதவு தொகை
புலமைப்பரிசில் தவணைக் கட்டணம்(ரூ.)	5,000/-	4,000/-
மகாபொல நம்பிக்கை நிதியத்தின் பங்களிப்பு (ரூ.)	2,550/-	-
திறைசேரி– பங்களிப்பு (ரூ.)	2,450/-	4,000/-
ஆண்டுக்கான தவணைக் கட்டணத் தொகை	10	10
மகாபொல மற்றும் உதவு தொகையை பெறுகின்ற மாணவர் எண்ணிக்கை*	63,224	33,842

* *2020/2021 கல்வியாண்டுடன் தொடர்பாக மகாபொல புலமைப்பரிசில் பெறுபவர்களின் எண்ணிக்கை 16,000 ஆகும்.*

அட்டவணை 7.7 மகாபொல மற்றும் உதவு தொகை பற்றிய பொழிப்பு

8. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்தின் ஆளணி எண்ணிக்கை

2022 ஆம் ஆண்டிற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்திற்கு பல்வேறு 5 ஊழியர் பிரிவுகளின் கீழ் அங்கிகீகரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை 325 ஆகுமென்பதோடு 2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 239 ஆகும். வெற்றிடங்களின் எண்ணிக்கை 86 ஆகும். அது பற்றிய தகவல்கள் கீழே அட்டவணை 8 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆளணி வகைப்பாடு		சம்பள அளவுத் திட்டம்	அனுமதிக்கப்பட்ட ஆளணி	தற்போது பணியாற்றும் ஆளணி	வெற்றிடம்
ஆரம்ப நிலை	பயிற்சி பெறாத	U-PL 1	44	27	17
	பகுதியளவு பயிற்சி பெற்ற	U-PL 2	3	1	2
	பயிற்சி பெற்ற	U-PL 3	18	14	4
இரண்டாம் நிலை	முகாமைத்துவ உதவியாளர்	U-MN 1	144	116	28
	முகாமைத்துவ உதவியாளர் (IT)	U-MT 1	4	2	2
	உதவி அலுவலர் பிரிவு .2	U-MN 2	8	2	6
	உதவி அலுவலர் பிரிவு .1	U-MN 3	6	2	4
	சிரேஷ்ட பதவிநிலை முகாமைத்துவ உதவியாளர்	U-MN 4	25	25	0
மூன்றாம் நிலை	கல்விசார் உதவி ஆளணி பிரிவு . 2	U-AS 1	3	1	2
	கல்விசார் உதவி ஆளணி பிரிவு . 1	U-AS 2	6	4	2
	கனிஷ்ட நிறைவேற்று தரம்	U-EX 1	18	10	8
	நிறைவேற்று தரம்(இடைநிலை மட்டம்)	U-EX 2	33	26	7
சிரேஷ்ட நிலை	நிறைவேற்று தரம் (சிரேஷ்ட மட்டம்)	U-EX 3	6	5	1
	சிரேஷ்ட மட்டம் - கல்விசார்	U-AC 3 முதல் U-AC 5	7	4	3
			325	**239**	**86**

அட்டவணை 8 2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஆளணி பற்றிய தகவல்கள்

8.1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஊழியர்களின் நியமனங்கள், பதவி உயர்வுகள், பதவி உறுதிப்படுத்தல்கள்

2022 ஆண்டில் முகாமைத்துவ உதவியாளர் தரம் - III பதவிக்காக ஆரம்ப தர ஊழியர்களுக்கான ஏழு (07) புதிய நியமனங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பதினேழு (17) ஊழியர்கள் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

வினைத்திறன் தடை தாண்டல் (EB) தேவைப்பாடுகள் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டதன் பின்னர் இருபத்தெட்டு (28) ஊழியர்கள் பதவி உயர்த்தப்பட்டதுடன், ஆறு (06) நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், ஒரு (01) ஊழியர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

8.2 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊழியர்களின் உள்ளக இடமாற்றங்கள், சேவை விருதுகள் மற்றும் விஷேட நோக்கத்திற்கான விடுமுறைகள்

2022 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் மூன்று (03) உள்ளக இடமாற்றங்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டது. ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கங்கள் 678, 696 மற்றும் 893 என்பவற்றில் உள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில் நீண்ட கால சேவைக்கான விருதினை பெறுவதற்கு தகுதியானவர்களாக ஒன்பது (09) ஊழியர்கள் காணப்பட்டதுடன் அதற்காக அவர்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இது தவிர, ஆண்டினுள் பிரிவுத் தலைவர்களாக நான்கு (04) புதிய உள்ளக இடமாற்றல்கள் வழங்கப்பட்டுள்ளன.

8.3 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலிருந்து ஊழியர்கள் வெளியேறிச் செல்லல்

2022 இல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலிருந்து ஏனைய பல்கலைக்கழங்கள் /உயர் கல்வி நிறுவகங்களுக்கு மூன்று (03) இடமாற்றல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் ஏனைய பல்கலைக்கழங்கள் /உயர் கல்வி நிறுவகங்களிலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு நான்கு (04) இடமாற்றல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நான்கு (04) ஓய்வுக்கு முன்னரான விடுமுறை பெறுதல்கள், ஆறு (06) ஓய்வுறுத்தல்கள், ஒரு (01) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சேவையிலிருந்து நீக்கப்படல் மற்றும் ஆறு (06) கேட்டு விலகல்கள் மீளாய்வாண்டில் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆண்டில் கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் விடுமுறைகள் வழங்கப்பட்டன.

விடுமுறை வகை	எண்ணிக்கை
சம்பளமற்ற விமுறை	04
பிரசவ விமுறை (தாய்)	08
பிரசவ விமுறை (தந்தை)	01
காலாவதி விடுமுறை	10
மருத்துவ சபையின் விடுமுறை	02
கற்கை விடுமுறை	01
ஓய்வு விடுமுறை	03
வெளிநாட்டுப் பயண விடுமுறை	04

1989.09.29 ஆம் திகதிய 406 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கைக்கமைய வெளிநாடொன்றில் தொழில் புரிவதற்கான சம்பளமற்ற விடுமுறை	01
பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்காக சம்பளத்துடனான விடுமுறை	09

அட்டவணை 8.3 ஆண்டில் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ள விடுமுறை பெற்றுக்கொள்ளல்

8.4 சுகாதாரக் காப்புறுதித் திட்டம்

2022 ஆம் ஆண்டில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டத்தாபனத்துடன் இணைந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்தில் உள்ள சகல நிரந்தர ஊழியர்களுக்கும் சுகாதார காப்புறுதித் திட்டமொன்று வழங்கப்பட்டுள்ளது.

9. மனித வளங்கள் பிரிவின் முன்னேற்றம்

பல்கலைக்கழக முறைமைக்கான மனித வளங்கள் உதவியை வழங்குவதற்கான அதன் பொறுப்பினை உரியமுறையில் பேணுவதில் மனித வளங்கள் பிரிவானது 2022 இல் நிலையான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. மனித வளங்கள் பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட அலுவல்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் கீழே குிப்பிடப்பட்டுள்ளன.

9.1. ஆளணி எண்ணிக்கையை மீளாய்வுக்குட்படுத்தல்

9.1.1 ஆண்டிற்கான புதிய ஆளணி எண்ணிக்கை - ஊழியர் வகைப்பாட்டிற்கமைய

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2022 ஆண்டில் பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவகங்களுக்காக 118 புதிய ஊழியர் பதவிகளுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டது. இந்த 118 பதவிகள் பற்றிய விபரம் அட்டவணை 9.1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊழியர் வகைப்பாடு	அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை
கல்விசார் ஊழியர்கள்	47
பணிப்பாளர்கள்	-
பீடாதிபதி	02
தற்காலிக கல்விசார் ஆளணி	30
நிர்வாக மற்றும் ஏனையோர்	11
மருத்துவ ஆளணி	-
கல்விசார் உதவி ஆளணி	05
முகாமைத்துவ உதவியாளர் /தொழில்நுட்பமல்லாத	14
முகாமைத்துவ உதவியாளர் /தொழில்நுட்பம்	09
ஆரம்ப தர(பயிற்சி பெற்ற /பகுதியளவு பயிற்சி பெற்ற /பயிற்சி பெறாத)	-
மொத்தம்	**118**

அட்டவணை 9.1.1 2022 இல் பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்கள் என்பவற்றுக்கு அங்கீகரிக்கப்பட்ட புதிய ஆளணி [வகைப்பாட்டு அடிப்படையில்]

9.1 2 உயர்கல்வி நிறுவகங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை

பல்கலைக்கழகங்கள்/உயர்கல்வி நிறுவகங்கள்	அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு	03
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	16
களனிப் பல்கலைக்கழகம்	15
மொரட்டுவைப் பல்கலைக்கழகம்	06
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	03
றுஹுணு பல்கலைக்கழகம்	02
இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்	18
இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்	33
வவுனியா பல்கலைக்கழகம்	16
சுதேச மருத்துவ நிறுவகம்	01
மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம்	05
மொத்தம்	**118**

அட்டவணை 9.1.2 உயர்கல்வி நிறுவகங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை

9.2 நிர்வாகம் சார்ந்த தரங்களுக்கான நியமனங்கள் / பதவி உயர்வுகள்

திருத்தப்பட்டவாறான 1978ம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 71(2) ஆம் பிரிவின் (ii) ஆம் பந்தி மற்றும் பிரிவு 8(1) க்கு அமைவாக, பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களுக்கான நிர்வாகம் சார்ந்த நியமனங்கள் /பதவி உயர்வுகள் தொடர்பான பொறுப்புக்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 2022 ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்படும் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன.

9.2.1 நியமனங்கள்

(அ) உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் பதவி (சட்டம் மற்றும் ஆவணங்கள்)

இல.	உயர்கல்வி நிறுவகம்	பதவி உயர்வுகளின் எண்ணிக்கை
1.	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	01

அட்டவணை 9.2.1 (அ) உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் பதவி நியமனங்களின் எண்ணிக்கை (சட்டம் மற்றும் ஆவணங்கள்)

9.2.2 பதவி உயர்வுகள்

(அ) பிரதிச் செயலாளர் / பிரதிப் பதிவாளர் பதவி

இல.	உயர்கல்வி நிறுவகம்	பதவி உயர்வுகளின் எண்ணிக்கை
1.	கொழும்புப் பல்கலைக்கழகம்	2
2.	களனி பல்கலைக்கழகம்	3

இல.	உயர்கல்வி நிறுவகம்	பதவி உயர்வுகளின் எண்ணிக்கை
3.	வயம்ப பல்கலைக்கழகம்	6
4.	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு	4
5.	கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவகம்	1
6.	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	3
7.	இலங்கை திறந்த பல்கலைக்கழகம்	1
8	பேரராதனை பல்கலைக்கழகம்	3
9.	கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம்	1
10.	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	2
11.	கிழக்குப் பல்கலைக்கழகம்	2
12.	வவுனியா பல்கலைக்கழகம்	1
13.	ரஜரட்ட பல்கலைக்கழகம்	1
14.	றுஹுணு பல்கலைக்கழகம்	1
15.	மனித வளங்கள் மேம்பாட்டு நிறுவகம்	1

அட்டவணை 9.2.2 (அ) பிரதிச் செயலாளர் / பிரதிப் பதிவாளர் பதவிகளுக்கான பதவி உயர்வு

(ஆ) பிரதிக் கணக்காளர் / பிரதி நிதி நிர்வாகி / பிரதி உள்ளக கணக்காய்வாளர் பதவி

இல.	உயர்கல்வி நிறுவகம்	பதவி உயர்வுகளின் எண்ணிக்கை
1.	உயிரியல் இரசாயனம், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவகம் (IBMBB)	1
2.	விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் (PGIS)	1
3.	பேராதனை பல்கலைக்கழகம் (PDN)	2
4.	கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவகம் (UCSC)	1
5.	சுவாமி விபுலானந்தா அழகியற்கலைகள் நிறுவகம் (SVIAS)	1
6.	கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம் (GWUIM)	1
7.	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் (SJP)	2
8.	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC)	2
9.	களனிப் பல்கலைக்கழகம் (KLN)	2
10.	முகாமைத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவகம் (PIM)	1
11.	இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் (WUSL)	1
12.	றுஹுணு பல்கலைக்கழகம் (RUH)	1
13.	இலங்கை திறந்த பல்கலைக்கழகம் (OUSL)	3
14.	கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் (UVPA)	1

இல.	உயர்கல்வி நிறுவகம்	பதவி உயர்வுகளின் எண்ணிக்கை
15.	இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் (RUSL)	1
16.	கொழும்புப் பல்கலைக்கழகம் (CMB)	1

அட்டவணை 9.2.2 (ஆ) பிரதிக் கணக்காளர் / பிரதி நிதி நிர்வாகி / பிரதி உள்ளக கணக்காய்வாளர் பதவி

(இ) பிரதிச் செயலாளர் / பிரதிப் பதிவாளர் பதவி (சட்டம் மற்றும் ஆவணங்கள்)

இல.	உயர்கல்வி நிறுவகம்	பதவி உயர்வுகளின் எண்ணிக்கை
1.	இலங்கை திறந்த பல்கலைக்கழகம் (OUSL)	01

அட்டவணை 9.2.2 (இ) பிரதிச் செயலாளர் / பிரதிப் பதிவாளர் பதவி (சட்டம் மற்றும் ஆவணங்கள்) பதவிக்கான பதவி உயர்வுகளின் எண்ணிக்கை

9.3 ஏனைய பதவிநிலைத் தரங்களின் பதவிகளுக்கான நியமனங்கள் / பதவியுயர்வுகள்

1978ம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 71(2) ஆம் பிரிவுக்கையம 2022 ஆம் ஆண்டில் ஏனைய பதவிநிலை தரப் பதவிகளுக்கு 01 நியமனம் மற்றும் இருபது (20) பதவியுயர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பான தகவல்கள் அட்டவணை 9.3.1 மற்றும் 9.3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

i. நியமனங்கள்

இல.	பதவி	பதவி உயர்வுகளின் எண்ணிக்கை
01	பாதுகாப்பு உத்தியோகத்தர் தரம் - II	01

அட்டவணை 9.3.1 ஏனைய பதவிநிலைத் தரங்களின் பதவிகளுக்கான நியமனங்கள்- 2022

ii. பதவி உயர்வுகள்

இல.	பதவி	பல்கலைக்கழகம்	பதவி உயர்வுகளின் எண்ணிக்கை
01	சிரேஷ்ட பதவிநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்	பேராதனை பல்கலைகழகம்	06
02	தலைமை தொழில்நுட்ப உத்தியோகத்தர்	பேராதனை பல்கலைகழகம் மொரட்டுவை பல்கலைகழகம் களணி பல்கலைகழகம்	03 01 02
03	செவிப்புல கட்புல தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் - I	களணி பல்கலைகழகம்	01

இல.	பதவி	பல்கலைக்கழகம்	பதவி உயர்வுகளின் எண்ணிக்கை
04	சிரேஷ்ட மருத்துவ உத்தியோகத்தர்	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைகழகம்	01
05	தலைமை பாதுகாப்பு உத்தியோகத்தர் தரம் - I	களணி	01
06	பண்ணை முகாமையாளர் தரம் - I	பேராதனை	01
07	பயிற்சிப் பொறியியலாளர் தரம் - II	இலங்கை திறந்த பல்கலைகழகம்	01
08	இலத்திரனியல் பொறியியலாளர் தரம் - II	இலங்கை திறந்த பல்கலைகழகம்	01
09	பணிப்பாளர் /உடற் கல்வி - உயர் தரம்	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைகழகம்	01
10	வேலைத்தளப் பொறியியலாளர் தரம் - II	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைகழகம்	01
	மொத்தம்		**20**

அட்டவணை 9.3.2 ஏனைய பதவிநிலைத் தரங்களின் பதவிகளுக்கான பதவி உயர்வுகள் 2022

9.4 ஆரம்ப தர ஊழியர் பதவியிலிருந்து முகாமைத்துவ உதவியாளர் தரம் III பதவியில் நியமித்தல்

1979.11.27 ஆம் திகதிய 50 ஆம் இலக்க, 1996.10.18 ஆம் திகதிய 692 ஆம் இலக்க, 1998.09.15 ஆம் திகதிய 742 ஆம் இலக்க, மற்றும் 2019.10.18 ஆம் திகதிய 10/2019 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் மற்றும் எழுதுவினைஞர் தரம் III பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய மேற்குறிப்பிடப்பட்ட விடயம் கீழே குறிப்பிடப்பட்டவாறு பூர்த்தி செய்யப்பட்டது.

இணையவழி ஊடாக விண்ணப்பங்கள் கோரல்	13.11.2021
எழுத்து மூலப் பரீட்சையை நடாத்துதல்	09.04.2022
பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடல்	09.09.2022
நேர்முகப் பரீட்சையை நடாத்துதல் முகாமைத்துவ உதவியாளர் தரம் -	2022.10.21,26,27 மற்றும் 2022.11.01
III இற்காக வழங்கப்பட்ட நிமனங்களின் எண்ணிக்கை -	105

மொழி மூலம்	விண்ணப்தாரிகளின் எண்ணிக்கை				
	பரீட்சைக்குத் தகைமை பெற்ற எண்ணிக்கை	பரீட்சைக்குத் தோற்றாத எண்ணிக்கை	எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றிய எண்ணிக்கை	சித்தியடைந்த எண்ணிக்கை	சித்தியடையாத எண்ணிக்கை
சிங்களம்	255	54	201	133	68
தமிழ்	51	7	44	28	16
மொத்தம்	**306**	**61**	**245**	**161**	**84**

அட்டவணை 9.4. ஆரம்ப தர ஊழியர் பதவியிலிருந்து முகாமைத்துவ உதவியாளர் தரம் III பதவியில் நியமித்தல்

9.5 முகாமைத்துவ உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர் (கணக்குப் பதிவு), முகாமைத்துவ உதவியாளர் (சிறாப்பர்), முகாமைத்துவ உதவியாளர் (களஞ்சியசாலை நிருவாகம்) ஆகிய பதவிகளின் தரம் - III இலிருந்து தரம் - II இற்கு பதவி உயர்த்தல்

ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் 2018.07.16 ஆம் திகதிய 06/2018 ஆம் இலக்க மற்றும் 2018.10.17 ஆம் திகதிய 12/2018 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட விடயம் கீழே குறிப்பிடப்பட்டவாறு பூர்த்தி செய்யப்பட்டது.

இணையவழி ஊடாக விண்ணப்பங்கள் கோரல்	-	12.01.2022
எழுத்து மூலப் பரீட்சையை நடாத்துதல்	-	04.03.2022
பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடல்	-	06.10.2022
பரீட்சைக்கு தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை	-	755
எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றியோரின் எண்ணிக்கை	-	545
சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை	-	446

9.6 பல்கலைக்கழகங்களிற்கு இடையிலான இடமாற்றங்கள் - 2022

பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 78ம் பிரிவின் பிரகாரம் 2022ம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மொத்த இடமாற்றங்களின் எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

- நிர்வாகத்துறை உத்தியோகத்தர்கள் - 13
- கல்விசாரா, நிர்வாகம் சாரா பதவி உத்தியோகத்தர்கள் - 128

9.7 தொழிற் சங்கக் கூட்டங்கள்

நிர்வாகத்துறை பதவிநிலை உத்தியோகத்தர்கள் சங்கத்தின் இரண்டு (02) மற்றும் கல்விசாரா ஆளணி சங்கத்தின் மூன்று (03) கூட்டங்கள் 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன.

9.8 முகாமைத்துவக் குழு

2022 ஆம் ஆண்டில் இருபத்து நான்கு (24) முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

9.9 சலுகை அடிப்படையிலான நிபந்தனைகளின் அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள்

2022ம் ஆண்டு ஜனவரி 01ம் திகதி முதல் 2022 டிசம்பர் 31ம் திகதி வரையிலான காலப் பகுதியில் சலுகை அடிப்படையிலான நிபந்தனைகளின் அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்களுக்காக பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவனங்களிடமிருந்து மொத்தம் 171 விண்ணப்பங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கிடைத்திருந்தது.

திருத்தப்பட்ட 2016.07.14ம் திகதிய 01/2016 ஆம் இலக்க வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைச் சுற்றறிக்கைக்கமைய இந்த விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இந்த விண்ணப்பங்கள் வருடம் பூராவும் உயர்கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இல.	பல்கலைக்கழகம் / நிறுவகம்	சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை
1	கொழும்புப் பல்கலைக்கழகம் மற்றும் இணைந்த நிறுவகங்கள்	14
2	பேராதனைப் பல்கலைக்கழகம்	23
3	களனிப் பல்கலைக்கழகம் மற்றும் இணைந்த நிறுவகங்கள்	14
4	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	14
5	மொரட்டுவை பல்கலைக்கழகம் மற்றும் இணைந்த நிறுவகங்கள்	9
6	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் இணைந்த நிறுவகங்கள்	4
7	றுகுணைப் பல்கலைக்கழகம்	7
8	இலங்கை திறந்த பல்கலைக்கழகம்	13
9	கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் இணைந்த நிறுவகங்கள்	2
10	இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம்	21
11	இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்	11
12	இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்	4
13	இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்	11
14	கட்புல ஆற்றுகைக் கலை பல்கலைக்கழகம்	6
15	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	14
16	கம்பஹா விக்கிரமராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்	1
17	வவுனியா பல்கலைக்கழகம்	0
18	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு	3
	மொத்தம்	**171**

அட்டவணை 9.9 மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை

9.10 கல்விசார் பதவிகளுடன் தொடர்பான தெரிவுக் குழுக்களுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பெயர் குறிப்பிடல்கள்

(அ) உஒகஉதவிப் பேராசிரியர் / பேராசிரியர் பதவிகளுக்காக திறமை அடிப்படையிலான பதவி உயர்வுகள்

இல.	பல்கலைக்கழகம் / நிறுவகம் / வளாகம்	தெரிவுக் குழுக்களின் எணிணக்கை
1.	கொழும்புப் பல்கலைக்கழகம்	29
2.	பேராதனைப் பல்கலைக்கழகம்	15
3.	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	20
4.	களனிப் பல்கலைக்கழகம்	23
5.	மொறட்டுவப் பல்கலைக்கழகம்	13
6.	யாழ்பாணப் பல்கலைக்கழகம்	12
7.	இலங்கை திறந்த பல்கலைக்கழகம்	5
8.	றுகுணைப் பல்கலைக்கழகம்	16
9.	இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்	14
10.	இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்	10
11.	இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம்	6
12.	இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்	9
13.	இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்	9
14.	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	4
15.	கட்புல ஆற்றுகைக் கலை பல்கலைக்கழகம்	5
16.	வவுனியாப் பல்கலைக்கழகம்	1
17.	ஸ்ரீ பாளி வளாகம்	3
18.	சுதேச மருத்துவ நிறுவகம்	4
19.	கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவகம்	1
20.	உயிரியல் இரசாயன விஞ்ஞானம், மூலக்கூற்று உயிரியல் விஞ்ஞானம் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவகம்.	2
21.	தொழில்நுட்பம் நிறுவகம், மொறட்டுவ பல்கலைக்கழகம்	2
22.	தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவகம்	1
	மொத்தம்	**204**

அட்டவணை 9.10 (அ) உதவிப் பேராசிரியர் / பேராசிரியர் பதவிகளுக்காக திறமை அடிப்படையிலான பதவி உயர்வுகள் தொடர்பான தெரிவுக் குழுக்களுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பெயர் குறிப்பிடல்கள்

(ஆ) அறிவித்தல்கள் ஊடாக வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட பேராசிரியர் பதவி (பிரதானி)

இல.	பல்கலைக்கழகம்	தெரிவுக் குழுக்களின் எணிணக்கை
1.	கொழும்புப் பல்கலைக்கழகம்	3
2.	பேராதனைப் பல்கலைக்கழகம்	1
3.	களனிப் பல்கலைக்கழகம்	2
4.	யாழ்பாணப் பல்கலைக்கழகம்	4
5.	றுகுணைப் பல்கலைக்கழகம்	2

இல.	பல்கலைக்கழகம்	தெரிவுக் குழுக்களின் எண்ணிக்கை
6.	இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்	1
7.	இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்	1
8.	இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்	1
9.	வவுனியாப் பல்கலைக்கழகம்	1
	மொத்தம்	**16**

அட்டவணை 9.10 (ஆ) அறிவித்தல்கள் ஊடாக வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட பேராசிரியர் பதவிகளுக்கான தெரிவுக்குழுக்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பெயர் குறிப்பிடல்கள்

(இ) பிரதி நூலகர் பதவிக்கு திறமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பதவி உயர்வுகள்

இல.	பல்கலைக்கழகம் / வளாகம்	தெரிவுக் குழுக்களின் எண்ணிக்கை
1.	யாழ்பாணப் பல்கலைக்கழகம்	1
2.	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	1
3.	றுகுணைப் பல்கலைக்கழகம்	2
4.	ஸ்ரீ பாளி வளாகம்	1
	மொத்தம்	**5**

அட்டவணை 9.10 (இ) பிரதி நூலகர் பதவிக்கு திறமை அடிப்படையில்மேற்கொள்ளப்படும் பதவி உயர்வுகள் தொடர்பான தெரிவுக் குழுக்களுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பெயர் குறிப்பிடல்கள்

(ஈ) அறிவித்தல்கள் ஊடாக வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட நூலகர் பதவி

இல.	பல்கலைக்கழகம்	தெரிவுக் குழுக்களின் எண்ணிக்கை
1.	இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்	1
2.	றுகுணைப் பல்கலைக்கழகம்	1
	மொத்தம்	2

அட்டவணை 9.10 (ஈ) அறிவித்தல்கள் ஊடாக வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட நூலகர் பதவி தொடர்பான தெரிவுக் குழுக்களுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பெயர் குறிப்பிடல்கள்

(உ) விரிவுரையாளர் (தகுதிகாண்) / விரிவுரையாளர் (உறுதி செய்யப்படாத), சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - II/I பதவிக்கான ஆட்சேர்ப்பு / பதவி உயர்வு

இல.	நிறுவகம்	தெரிவுக் குழுக்களின் எண்ணிக்கை
1.	சுவாமி விபுலானந்தா அழகியற்கலை கற்கை நிறுவகம்	12
2.	சுதேச மருத்துவ நிறுவகம்	6
3.	தொழில்நுட்ப நிறுவகம், மொரட்டுவைப் பல்கலைக்கழகம்	7
4.	மனித வளங்கள் மேம்பாட்டு நிறுவகம்	1
5.	கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவகம்	1
6.	தேசிய நூலகங்கள் மற்றும் தகவல் அறிவியல் நிறுவகம்	1
	மொத்தம்	**28**

அட்டவணை 9.10 (உ) விரிவுரையாளர் (தகுதிகாண்) / விரிவுரையாளர் (உறுதி செய்யப்படாத), சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - II/I பதவிக்கான ஆட்சேர்ப்பு / பதவி உயர்வு தொடர்பான தெரிவுக் குழுக்களுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பெயர் குறிப்பிடல்கள்

9.11 கல்விசார் ஆளணி பதவிகளுக்கான நியமனங்களுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல்

(அ) விரிவுரையாளர் பதவி (தகுதிகாண்)

இல.	பல்கலைக்கழகம் / நிறுவகம்	அங்கீகரிக்கப்பட்ட நியமனங்களின் எண்ணிக்கை	அங்கீகரிக்கப்படாத நியமனங்களின் எண்ணிக்கை
1.	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	01	01
2.	களனிப் பல்கலைக்கழகம்	02	-
3.	இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்	01	-
4.	இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்	-	01
5.	கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவகம்	-	01
	மொத்தம்	**04**	**03**

அட்டவணை 9.11(அ) விரிவுரையாளர் பதவி (தகுதிகாண்) பதவி நியமனத்திற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட எண்ணிக்கை

(ஆ) விரிவுரையாளர் பதவி (உறுதிப்படுத்தப்படாத)

இல.	பல்கலைக்கழகம்	அங்கீகரிக்கப்பட்ட நியமனங்களின் எண்ணிக்கை
1.	யாழ்பாணப் பல்கலைக்கழகம்	01
2.	இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்	01
	மொத்தம்	**02**

அட்டவணை 9.11 (ஆ) விரிவுரையாளர் பதவிக்கு அங்கீகாரம் எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கை (உறுதிப்படுத்தப்படாத)

(இ) சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - II/I பதவி

இல.	பல்கலைக்கழகம்	அங்கீகரிக்கப்பட்ட நியமனங்களின் எண்ணிக்கை	அங்கீகரிக்கப்படாத நியமனங்களின் எண்ணிக்கை
1.	மொரட்டுவைப் பல்கலைக்கழகம்	01	03
2.	இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்	01	-
3.	இலங்கை திறந்த பல்கலைக்கழகம்	01	-
	மொத்தம்	**03**	**03**

அட்டவணை 9.11 (இ) சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - II/I பதவிக்கு அங்கீகாரம் எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கை (உறுதிப்படுத்தப்படாத)

10. உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி

2022 ஆம் ஆண்டில் புதிய கட்டுமானங்கள் மற்றும் தொடந்து மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்றிட்டங்கள், புனரமைப்பு செயற்றிட்டங்கள், கையகப்படுத்தல்கள், மனித மூலதன அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்காக 4,700 மில்லியன் ரூபா தொகை ஒதுக்கப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 3,042 மில்லியன் ரூபா மொத்தத் தொகை திறைசேரியினால் பரிந்துரைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டது.

ஆண்டில் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிடமிருந்து 10 புதிய செயற்றிட்ட முன்மொழிவுகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அவற்றின் பரீட்சிப்பு மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாட்டின் பின்னர் 2022ம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் *8 முன்மொழிவுகள் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டன. நிரல் அமைச்சினால் 2022ம் ஆண்டில் 08 செயற்றிட்ட முன்மொழிவுகளும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் எந்தவொரு செயற்திட்டத்தின் பௌதிகப் பணிகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன்,

ஆண்டிறுதியாகும்போது பல்கலைக்கழக முறைமையில் 28,748 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வடிவமைத்தல் மற்றும் கட்டிட நிர்மாண நடவடிக்கைகளில் வெவ்வேறு மட்டங்களில் 56 நிர்மாண செயற்றிட்டங்கள் நிலவுவதுடன், மதிப்பீட்டுச் செலவு 99.1 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க 01 செயற்திட்டம் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழக முறைமையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

	2019		2020		2021		2022	
	செயற்திட்டங்களின் எண்ணக்கை	மொத்தப் பெறுமதி (ரூ.மி.)	செயற்திட்டங்களின் எண்ணக்கை	மொத்தப் பெறுமதி (ரூ.மி.)	செயற்திட்டங்களின் எண்ணக்கை	மொத்தப் பெறுமதி (ரூ.மி.)	செயற்திட்டங்களின் எண்ணக்கை	மொத்தப் பெறுமதி (ரூ.மி.)
ப.மா.ஆவினால் பெறப்பட்ட செயற்றிட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை	39	18,906.75	34	8,857.79	33	16,598.11	10	14,733.95
ப.மா.ஆவினால் அனுமதிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை	19	6,331.26	16	7,630.97	17	7,003.71	8	2,200.65
தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை	14	6,382.96	16	7,630.97	22	14,288.69	8	2,200.65
தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை	11	2,845.80	1	182.45	1	132.00	-	-
அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை	21	14,544.20	-	-	-	-	-	-
ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை	16	3,581.70	9	6,794.90	12	1,739.70	-	-
தற்போது செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களின் எண்ணிக்கை	179	28,323.00	91	30,865.00	80	62,202.00	56	28,748.00
நிறைவு செய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை	17	5,723.00	21	6,521.00	5	1,131.00	1	99.10

அட்டவணை 10.1 நிறைவு செய்யப்பட்டு பல்கலைக்கழக முறைமையிடம் ஒப்படைக்கப்பட்ட செயற்றிட்டங்கள்

11. தரப் பாதுகாப்பு சபையின் (கவுன்சில்) வகிபாகம் மற்றும் பணிகள் (QAC)

2022 ஆம் ஆண்டு தரப் பாதுகாப்பு சபைக்கு வேலைப்பளுமிக்க ஆண்டாக இருந்ததுடன், வருடாந்த செயற்பாடுகள் மூலம் அடைந்துகொள்ள வேண்டிய இலக்குகள் மற்றும் கொவிட் - 19 தொற்று நோய் காரணமாக கடந்த இரண்டு வருடங்களுக்குள் சேர்க்கப்பட்ட பணிகளையும் பூர்த்தி செய்ய வேண்டியேற்பட்டது.

தரப் பாதுகாப்பு சபையின் ஆளணியில் பணிப்பாளர் (ஒப்பந்த அடிப்படை), உதவிச் செயலாளர், இரண்டு முகாமைத்துவ உதவியாளர்கள், ஒரு பணி உதவியாளர் மற்றும் இரண்டு தொழில்நுட்ப உதவியாளர்கள் (ஒப்பந்த அடிப்படை) உள்ளடக்கப்படுகின்றனர். தரப் பாதுகாப்பு சபையின் செயல் திட்டம் - 2022 இனை செயற்படுத்தும்போது தரப் பாதுகாப்பு தொடர்பான நிலையியற் குழுவின் தலைவர் மற்றும் அங்கத்தவர்கள் தரப் பாதுகாப்பு சபைக்கு வழிகாட்டினர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலோபாயத் திட்டத்தின் இலக்கு இல 03: பூகோளச் சூழலொன்றில் வாழ்நாள் பூராவும் கல்வி கற்பவர்களாகுவதற்கு முடியுமான வகையில் நிகழ்ச்சித் திட்டங்கள், ஆராய்ச்சிகள் மற்றும் புத்தாக்கங்கள் ஊடாக அரச உயர் கல்வி நிறுவகங்களின் கல்விச் சிறப்பினை விருத்தி செய்தல்.

நோக்கம் இல.08 - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் நிலவும் உயர் கலவி நிறுவகங்கள் மற்றும் அவற்றினால் வழங்கப்படும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் உலகளாவிய மற்றும் உள்ளூர் ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கமைவாக இருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ச்சியான மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

11.1. பல்கலைக்கழகங்களில் உள்ளக தர உறுதிப்பாட்டு செயற்பாடுகளுக்கு உதவு புரிதல்

17 அரச பல்கலைக்கழகங்களின் அனைத்து உள்ளக தர உறுதிப்பாட்டு அலகுகளில் இருந்து வழமையான அடிப்படையில் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் கிடைக்கப்பெற்றன. 2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டாகும்போது, 14/15 CQAs, AHEAD செயற்றிட்ட இலக்கினை பூர்த்தி செய்தவாறு செயலாற்றுகை புள்ளி அட்டையின் புள்ளிகளில் குறைந்தது 85% புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிறுதியில் தரப் உறுதிப்பாட்டு சபையின் பணிப்பாளர் 04 பல்கலைக்கழகங்கள் அதாவது, வவுனியா, யாழ்ப்பாணம், தென்கிழக்கு மற்றும் கிழக்கு ஆகிய பல்கலைக்கழகங்களுக்குச் சென்று அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், மீளாய்வுகளின் செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றத்தை அவதானிப்பதற்காக பல்கலைக்கழகங்கள் - தரப் பாதுகாப்பு சபை ஆகியவற்றுக்கிடையில் ஒன்றிணைந்த கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

17 தரப் பாதுகாப்பு நிலையங்களின் வருடாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் 2022 நவம்பர் 29 ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதான மண்டபத்தில் நடாத்தப்பட்டது. பல்கலைக்கழகங்களின் முன்னேற்றம் மற்றும் தரப் பாதுகாப்பு செயற்பாடுகளின்போதான சவால்கள், வெளிவாரியான மற்றும் உள்ளக மீளாய்வுகளின் சிறந்த பயன்பாடுகள் மீது கவனம் ஈர்க்கப்பட்டு கூட்டத்தின்போது கலந்துரையாடப்பட்டது.

11.2. நிலவுகின்ற உள்ள பாட அடைவு மட்ட கூற்றுக்களை இற்றைப்படுத்தல் மற்றும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் புதிய கூற்றுக்களை உருவாக்குதல்

அண்மைய ஆண்டுகளில் தரப் பாதுகாப்பு கவுன்சிலினால் பாட அடைவு மட்டக் கூற்றுக்கள் மேம்பாட்டு செயற்பாடு மற்றும் புதிய பாட அடைவு மட்டக்

கூற்றுக்கள் உருவாக்கும் பொறிமுறை மற்றும் 2015 இலங்கை தகைமை வழிகாட்டல்களுடன் இயைந்திருப்பதற்காக நிலவும் பாட அடைவு மட்டக் கூற்றுக்களை மேம்படுத்தும் பொறிமுறை சம்பந்தமாக தெளிவுபடுத்துவதற்கு அதிக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் விளைவாக, 2022 இல் பாட அடைவு மட்டக் கூற்றுக்கள் மேம்பாட்டு செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில், திருத்தப்பட வேண்டிய 37 பாட அடைவு மட்டக் கூற்றுக்களில் ஆறு திருத்தப்பட்டு தரப் பாதுகாப்பு கவுன்சில் இணையதளத்தில் வெளியிடப்பட்டதுடன், திருத்தப்பட்ட பாட அடைவு மட்டக் கூற்றுக்களின் முதல் வரைவை மேம்படுத்துவதற்கு இரண்டு சபைகளுக்கு முடியுமாகியதுடன், தற்போது நிலவும் பாட அடைவு மட்டக் கூற்றுக்களைத் திருத்தியமைப்பதற்காக 12 சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த நடவடிக்கைகள் வெற்றிகரமாக நடந்து வருகின்றன. இது தவிர, 22 புதிய பாட அடைவு மட்டக் கூற்றுக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் இரண்டு பாட அடைவு மட்டக் கூற்றுக்கள் வரைவுகள் நிறைவு செய்யப்பட்டன.

11.3. நிறுவனம்சார் மீளாய்வுகளை நடாத்துதல் (IRs)

ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் களனி பல்கலைக்கழகம் மற்றும் றுகுணைப் பல்கலைக்கழகங்களின் ஒத்திவைக்கப்பட்ட நிறுவனம்சார் மீளாய்வுகள் நிறைவு செய்யப்பட்டு 2022 மீளாய்வு அறிக்கைகள் தரப் பாதுகாப்பு கவுன்சில் இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டன. இணையவழித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இரண்டு நாள் கள விஜயத்தினூடாக இந்த மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. நிறுவனம்சார் மீளாய்வுகளின் இரண்டாம் சுற்றுக்காக திட்டமிடப்பட்டுள்ள கால அட்டவணைக்கமைய பேராதனை பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் அகியவற்றின் மீளாய்வுகள் 2021 இற்கு திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும் செயற்பாட்டின் தவிர்க்க முடியாத தாமதங்கள் மற்றும் திருத்தப்பட்ட நிறுவனம்சார் மீளாய்வு கையேட்டின் தேவைப்பாடு காரணமாக மூன்று பல்கலைக்கழகங்களினதும் மீளாய்வுகள் 2023 வரை ஒத்திவைக்கப்பட்டதுடன், மீளாய்வை ஆரம்பிப்பதற்குத் தயாராகும் நடவடிக்கைகள் 2022 இன் நான்காம் காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டது. (2022 வரை மொத்த முன்னேற்றம் - 12/15 பல்கலைக்கழகங்கள் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டன.)

நிறுவனம்சார் மீளாய்வு கையேட்டைத் திருத்தும் அலுவல்கள் 2022 ஆம் ஆண்டின் இறுதியாகும்போது நிறைவு செய்யப்பட்டதுடன், திட்டமிடப்பட்ட பிரகாரம் கையேடு 2023 முதலாம் காலாண்டில் அச்சிடப்பட்டு உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும். நிறுவனம்சார் மீளாய்வுக்கான மூன்றாவது மீளாய்வுச் சுற்றும் (2024 - 2028) திருத்தப்பட்ட கையேடு நடைமுறைப்படுத்தப்படுவதுடன் ஆரம்பிக்கும்.
2022 ஆம் ஆண்டின் இறுதியாகும்போது 04 பல்கலைக்கழகங்களில் 03 பல்கலைக்கழகங்கள் 2019 இல் நடாத்தப்பட்ட மீளாய்வுக்கான செயல் திட்டத்தை சமர்ப்பித்துள்ளன. தர உறுதிப்பாடு பற்றிய நிலையான குழுவின் பரிந்துரைப் பிரகாரம் செயல் திட்டங்களின் காலாண்டு ரீதியிலான முன்னேற்றத்தை கண்காணித்தலை தர உறுதிப்பாட்டு நிருவாகக் குழுவின் முகாமைத்துவக் குழுவின் நிலையான நிகழ்ச்சி நிரலின் ஒரு அங்கமாக்குவதற்கும், வருடாந்த முன்னேற்றத்தை தர உறுதிப்பாடு பற்றிய நிலையான குழுவுக்கு அறிக்கைப்படுத்துவதற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

11.4. நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகளை நடாத்துதல் (PRs)

2020 இன் மீளாய்வின் கீழ் விஞ்ஞானம், பொறியியல், கட்டடகலை மற்றும் பூகற்பவியல் பீடங்களின் 59 நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகள் இன்னும் நிறைவு செய்யப்படவில்லை. கோவிட் 19 காரணமாக 2020 இன் மீளாய்வுகள் ஆணைக்குழுவின் அனுமதியுடன் 2021 க்கு பிற்போடப்பட்டன. மீண்டும் முன்வைக்கப்பட்ட தன்னிச்சை மதிப்பீட்டறிக்கைகளில் காணப்படும் சில சிக்கல்கள் காரணமாக மீளாய்வுகளின் அமைப்பு மாற்றியமைக்கப்பட்டதுடன் மீளாய்வுகளின் எண்ணிக்கை 74 வரை அதிகரிக்கப்பட்டது.

மீளாய்வுகளை இரண்டு கட்டங்களில் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. 1 ஆம் கட்டத்தில் 37 மீளர்வுகள் மற்றும் 2 ஆம் கட்டத்தில் 37 என்ற ரீதியிலாகும். மீளாய்வுகள் இணையவழி முறையில் நடாத்தப்பட்டதுடன், பீடத்திற்கான ஒரு நாள் விஜயமும் இதில் உள்ளடங்கும். 1 ஆம் கட்டத்தின் 37 மீளாய்வுகளில் பீடங்களுக்கான விஜயம் வரை 36 மீளாய்வுகள் நிறைவு செய்யப்பட்டன. அவற்றில் சில பல்கலைக்கழகங்கள் மீளாய்வு அறிக்கைகளை சமர்ப்பித்து நிறைவு செய்திருந்தன. 2 ஆம் கட்டத்திற்கான மீளாய்வுகளை 2023 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் பூரணப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர, 2022 நான்காம் காலாண்டில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 7 மீளாய்வுகளில் 3 மீளாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி கற்கை முறை நிகழ்ச்சித்திட்டத்திற்காக தனியான கையேடொன்று பயன்படுத்திக்கொள்ளப்படுவதனால் தனியான இணையவழி மீளாய்வு அமைப்பொன்று பயன்படுத்திக்கொள்ளப்பட்டது. பூரணப்படுத்தப்பட்ட மீளாய்வுகளுக்காக செயல் திட்டங்களை மேற்பார்வை செய்யும்போது நிறுவனம்சார் மீளாய்வுகளுக்காக மேம்படுத்தப்பட்ட அந்த மேற்பார்வை செயற்பாட்டையே பல்கலைக்கழகங்களுடன் பகிர்ந்துகொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகளின் இரண்டாம் சுற்றின் ஒரு பகுதியாக கீழ் 2022 இல் பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் மீளாய்வினை நடாத்துவதற்கு தர உறுதிப்பாட்டு சபை திட்டமிட்டது. எவ்வாறாயினும் அதிக எண்ணிக்கையான உள்ளக மற்றும் வெளிவாரியான நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகள் மற்றும் நிறுவனம்சார் மீளாய்வுகள் வழங்கப்பட்டமையினால் பட்டப்பின் படிப்பு மீளாய்வுகள் மூன்றாவது மீளாய்வு சுற்றில் உள்ளடக்கப்பட்டது. அதற்கமைய பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் மீளாய்விற்காக வழிகாட்டியொன்றை தயாரித்து தர உறுதிப்பாடு பற்றிய நிலையான குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது. இது தவிர, 2023 முதல் 2027 வரை தயாரிக்கப்பட்ட பட்டப்பின் படிப்பு கால அட்டவணைக்கமைய பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் பயிற்சியொன்று நடாத்தப்பட்டது.

கால அட்டவணைக்கமைய, 2022 இல் 20 வெளிவாரி நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.வெளிவாரி நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுக்கான கையேடு உள்ளக நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுக்காகப் பயன்படுத்திக்கொள்ளப்படும் கையேட்டைப் பார்க்கிலும் வித்தியாசமானதாக இருப்பதனால் வெளிவாரி நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுக்காக தனியான இணையவழி மீளாய்வு முறையொன்று மேம்படுத்தப்பட்டது. 20 வெளிவாரி நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகளில் 12 மீளாய்வுகள் 2022 இறுதியாகும்போது நிறைவு செய்யப்பட்டுள்ளன. உள்ளக மற்றும் வெளிவாரி நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகளை மேற்கொள்ளும் மீளாய்வாளர்களுக்காக 2022 இல் செயலமர்வுகள் மற்றும் தெளிவுபடுத்தல் அமர்வுகள் நடாத்தப்பட்டன.

11.5 இலங்கை தகைமை வழிகாட்டி - 2015 இற்கமைய தகைமைகளை அமைத்துக்கொள்வதற்கு பல்கலைக்கழகங்களுக்கு உதவி புரிதல்

பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் தகைமைகளை அமைத்துக்கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் தர உறுதிப்பாட்டு பேரவையால் இலங்கை தகைமைகள் வழிகாட்டியை சான்றுப்படுத்தும் சபையொன்று அமைக்கப்பட்டது. இலங்கை தகைமைகள் வழிகாட்டியை சான்றுப்படுத்தும் சபையின் பரிந்துரையின் அடிப்படையில் இலங்கை தகைமைகள் வழிகாட்டியை சான்றுப்படுத்தல் கையேடொன்றை தயாரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டதுடன், AHEAD கருத்திட்டத்தின் நிதியுதவியுடன் இந்தப் பணியை மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதற்கமைய, இந்தப் பணிக்கான நிதயுதவிக்கான அங்கீகாரம் AHEAD கருத்திட்டத்தினூடாகப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

11.6. பொதுவான கல்வி நாட்காட்டிக்கான நடவடிக்கையின்போது பல்கலைக்கழகங்களுக்கு உதவி புரிதல்

பொதுவான கல்வி நாட்காட்டியொன்றை மேம்படுத்தும் பணி 2020 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் கடந்த இரண்டு வருட காலப் பகுதியினுள் கல்வி நாட்காட்டிகளில் ஏற்பட்ட பாரிய மாற்றங்கள் காரணமாக செயற்பாட்டை மீண்டும் ஆரம்பித்தல் சிரமமாகவுள்ளது. எனவே குறைந்தது பீடங்களிலாவது பொதுவான கல்வி நாட்காட்டியொன்றை தயாரிப்பதற்கு பல்கலைக்கழகங்களுக்கு அதிக காலத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கும், பல்கலைக்கழகப் பட்டப் பாடநெறிகளுக்காக பொதுவான கால அட்டவணையுடன் இயைந்துசெல்லும் வேகத்திற்கமைய எதிர்காலத்தில் பொருத்தமான நாட்காட்டியொன்றை அறிமுகஞ் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

11.7. ப.மா.ஆ குழுவின் கீழ் தகைமைக்கான தேசிய அங்கீகாரம் மற்றும் தகவல் நிலையத்தினை தாபித்தல்

ப.மா.ஆ குழுவின் கீழ் தகைமைக்கான தேசிய அங்கீகாரம் மற்றும் தகவல் நிலையத்தினை தாபித்தல் தொடர்பான எண்ணக்கருப் பத்திரத்தில் இலங்கையிலுள்ள உயர் கல்விக்கான தேசிய அங்கீகாரம் மற்றும் தகவல் நிலையம் ஒன்றினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் தொடர்பான சுருக்க விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆணைக்குழுவானது 2021.03.25 ஆம் திகதியன்று நடைபெற்ற தனது 1051வது கூட்டத்தின்போது நாட்டிற்கான அதன் முக்கியத்துவம் ம்றறும் அவசரத் தேவைப்பாட்டை இனங்கண்டு இந்த எண்ணக்கருவுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. தேசிய மட்டத்திலான நிலையமொன்றை அமைக்கும் வரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் நிலையெமன்றை அமைப்பதற்கான ஆற்றல் தொடர்பாக தர உறுதிப்பாடு பற்றிய நிலையான குழுவினால் கவனத்திற்கொள்ளப்பட்டது.

கருத்திட்டத்தின் தன்மை மற்றும் முக்கியத்துவத்தை கவனத்திற்கொள்ளும்போது அதற்கு கல்வியமைச்சின் ஒத்துழைப்பும் அவசியமாகும். எவ்வாறாயினும் இந்தக் கருத்திட்டமானது கல்வியமைச்சின் ஒத்துழைப்பு தேவைப்படுகின்ற பாரிய எண்ணக்கருவொன்றாகும். ஐரோப்பிய சங்கத்தினால் நிதியுதவி வழங்கப்படும் Reco Asia கருத்திட்டத்தின் ஒரு பகுதியாக ஐரோப்பா சங்கத்திடமிருந்து அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக இந்த விடயத்துறையுடன் தொடர்புடைய அனுபவங்களை பரிமாறிக்கொள்வதற்கான சர்வதேச ஒன்றியமொன்று 2023 இல் நடாத்தப்படுவதாக அறியக் கிடைத்தது. அதற்கமைய உத்தேச நிலையத்தை அமைப்பதற்காக தர உறுதிப்பாட்டு கவுன்சில் எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய விதம் சம்பந்தமாக வழிகாட்டல்களை பெற்றுத்தருமாறு ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

2022 இல் தர உறுதிப்பாட்டு பேரவையினால் ஏனைய பிரிவுகளுடன் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பணிகளில் பின்வருவன அடங்குகின்றன :

- புதிய பட்டப் படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்பு பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள், கற்கை துறைகள் மற்றும் பீடங்களை அங்கீகரிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல் ;

- இபல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகைமைகள், இலங்கை பல்கலைக்கழகங்களாலும் அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களாலும் வழங்கப்படும் பட்டங்களின் SLQF தரநிலை, மற்றும் பொதுமக்களிடமிருந்து வருகின்ற கேள்விகள் என்பன தொடர்பான தெளிவுபடுத்தலை வழங்குதல்.

- பல்கலைக்கழகங்களில் தர உறுதிப்பாட்டு செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தல்;

இதற்கான இணையத்தளமொன்றினூடாக பயிற்சி செயலமர்வுகள், வெளிவாரியான மீளாய்வுகள் பற்றிய அறிக்கைகள், ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் மற்றும் தர உறுதிப்பாடு தொடர்பான வெளியீடுகள் மற்றும் ஏனைய தொடர்புடைய செய்திகள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய அறிக்கைகள் மூலம் நிதமும் இற்றைப்படுத்தப்படுகின்றது.

12. தகவல் தொழில்நுட்ப உதவி

ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளுக்கு ஏற்ப, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்பத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக முறையானதும் தொடர்ச்சியானதுமான கணனி அமைப்பொன்றை உறுதிசெய்து கொள்வதற்காக தகவல் தொழில்நுட்பப் பிரிவு முகாமைத்துவ ஒத்துழைப்பை வழங்கியது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் / உயர் கல்வி நிறுவனங்களின் ஒட்டுமொத்த நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான புதிய தகவல் தொடர்பாடல் அமைப்பு அபிவிருத்தி மற்றும் நிறுவுதல், தற்போதுள்ள அமைப்புகளை மேம்படுத்துதல், தேவைப்பாடுகள்/ விபரக்குறிப்புகளை உருவாக்குதல், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒலி ஒளிச் செயற்பாடுகளை முகாமை செய்தல், கணினி மற்றும் தகவல் தொடர்பாடல் அமைப்புகளின் ஒட்டுமொத்த நிர்வாகத்தைப் போன்றே தரவுச் செயலாக்க நடவடிக்கைகள் என்பன இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளில் உள்ளடக்கப்பட்டது.

2022ம் ஆண்டில் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளின் சுருக்கம் பின்வருமாறு:

- புதிய தகவல் தொடர்பாடல் அமைப்பு அபிவிருத்தி மற்றும் நிறுவுதல், தற்போதுள்ள அமைப்புகளை மேம்படுத்துதல், தேவைப்பாடுகள் மற்றும் விபரக்குறிப்புகளை உருவாக்குதல், மென்பொருள் உட்பட கணனி அமைப்பு மற்றும் வலையமைப்பின் நிர்வகிப்பு, தொடர்பாடல் அமைப்புகள், தரவுச் செயலாக்க நடவடிக்கைகள் மற்றும் நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பத் தேவைகளை வழங்குவதற்கு ஆரோக்கியமானதும் தடையற்றதுமான கணனி அமைப்புகளை முகாமைசெய்தல்.

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒலி ஒளிச் செயற்பாடுகளை முகாமை செய்தல்.

- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் (ICTA) மற்றும் அரச சார்புடைய, அரச சார்பற்ற அமைப்புகளான இலங்கை கல்வி மற்றும்

ஆராய்ச்சி வலையமைப்பு (LEARN), ஸ்ரீ லங்கா ரெலிகொம், LK Domain Registry போன்றவற்றுடன் ஒருங்கிணைதல்.

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த நிர்வாகத்தையும் மேம்படுத்துவதற்கான அதிநவீன தகவல் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தல்.
- இணையத்தளங்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு;

  - உத்தியோகபூர்வ இணையத்தளம்:https://www.ugc.ac.lk/
  - பல்கலைக்கழக மா.ஆ குழுவின் முகப்பு : https://www.eugc.ac.lk/

    e - ஒதுக்கீடு - கூட்ட மண்டபங்கள் ஒதுக்கீடுகளை முகாமை செய்தல்

    e-ஆவணங்கள் - ப.மா.ஆ குழுவில் பயன்தரும் உள்ளக ஆவணங்களின் தொகுப்பு

    e-கல்வி – கல்வி விவகாரங்களுடன் தொடர்புடைய தகவல்

    e-HRMS– ஊழியர் வரவு/ காப்புறுதி ஊளியர் நிர்வாகம் என்பவற்றுடன் தொடர்புடைய தகவல்

    e-களஞ்சியசாலை – களஞ்சியத்திலிருந்து பொருட்களை கோருவதற்கான மூலப்பொருட் கோரல் அப்பிளிகேசன்

- சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக கீழ் குறிப்பிடப்படும் துறைகளின் கீழ் உள்ளடக்குவதற்கு, அப்பிளிகேசன் மேம்பாட்டு குழு மற்றும் சேவை வழங்குநர்களுடன் ஒருங்கிணைத்தல்.

  - 2021/2022 கல்வியாண்டுக்கான ஆகக்குறைந்த வெட்டுப்புள்ளிகள் இணையத்தளம் ஊடாக வெளியிடல்.

  - பல்கலைக்கழக அனுமதிகளுடன் தொடர்புடைய குறுந்தகவல் மற்றும் அரசாங்க தகவல் நிலைய (1919 அழைப்பு நிலையம்) செயற்பாடுகள்.

  - முகாமைத்துவ உதவியாளர் மற்றும் ஆரம்ப தர பதவிகளின் பதவியுயர்வுகளுடன் தொடர்புடைய இணையவழி விண்ணப்பங்களுக்கான அரசாங்கத்தின் குறுஞ் செய்திகள் (GovSMS)

  - 2021/2022 கல்வியாண்டு - பல்கலைக்கழகங்களுகான இணையவழி மாணவர் பதிவு

  - 2021/2022 கல்வியாண்டு - இணையவழி விண்ணப்பம் கோரல் செயன்முறை

- ICTA உடன் இணைந்து இணையவழி கட்டணம் செலுத்தல் செயன்முறையின் நிர்வாகம் மற்றும் ஒருங்கிணைப்பு:

  - வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் மற்றும் உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான அங்கீகரித்தல் சான்றிதழ்களை வழங்குதல்

- இணைய முகப்பு, கூட்ட மண்டப ஒதுக்கீட்டு முறைமை, ஆளணிப் பிரிவுக்கான ஊழியர்களின் வரவினைக் குறித்துக் கொள்வதற்கான eHRM முறைமை, ஊழியர் பதவியுயர்வுக்கான இணையவழி விண்ணப்பங் கோரல் முறைமை, இ - இருப்புக்கள் மற்றும் இணையவழியில் வாகனங்களை ஒதுக்கிக்கொள்வதற்கான விண்ணப்பம் போன்ற வணிக அப்பிளிகேசன்களின் அமுலாக்கமும் பராமரிப்பும்.

- இலங்கையில் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கல்வியின் நூற்றாண்டு விழா இணையத்தளம் (1921-2021) அதில் முன்னர் நிலவிய

உள்ளடக்கத்துடன் மீண்டும் தயாரித்து அதனை நிலவும் சர்வரிலேயே (https://eugc.ac.lk/hss/) உள்ளடக்குதல்.

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் புதிய அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

மேற்குறிப்பிடப்பட்ட விடயப் பரப்பிற்கிணங்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சார்பாக உரிய செயற்பாட்டுடனான தகவல் தொழில்நுட்ப சூழலை முகாமைப்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்ப பிரிவானது பல்வேறு வழக்கமான செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் இவ் அறிக்கையானது 2022 இல் நடத்தப்பட்ட விசேட செயற்பாடுகளின் சுருக்கம் மாத்திரமாகும்.

12.1 மென்பொருள் மேம்பாடுகள்

i. **முகாமைத்துவ உதவியாளர் தரம் - III இலிருந்து தரம் - II இற்கு பதவி உயர்த்துவதற்காக இணையவழி மூலம் விண்ணப்பங்களைக் கோரல் மற்றும் அந்த அலுவல்களை கையாளும் அமைப்பு**

இந்த முறை ஊடாக ஊழியர்களுக்கு இணையத்தளத்தின் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை பதவி உயர் தொடர்பான அலுவல்கள் நிறைவடையும் வரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மனித வளங்கள் பிரிவினால் இணையத்தளத்தினூடாக கையாளப்படும்.

ii. முகாமைத்துவ உதவியாளர் தரம் - III பதவிக்கு அரம்ப தர ஊழியர்களை நியமிப்பதற்கு இணையவழி ஊடாக விண்ணப்பங்களைக் கோருகின்ற மற்றும் அந்தப் பணிகளை கையாளும் அமைப்பு

முகாமைத்துவ உதவியாளர் தரம் - III பதவிக்கு அரம்ப தர ஊழியர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களை இணையவழி ஊடாக சமர்ப்பிப்பதற்கு இந்த முறை ஊடாக வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பரீட்சைகளை நடாத்துதல், வினாத்தாள்களை மதிப்பீடு செய்தல், நேர்முகப் பரீட்சையை நடாத்துதல் மற்றும் நிமனங்களை வழங்கும் நடவடிக்கைகள் வரை விண்ணப்பங்கள் ஆணைக்குழுவின் மனித வளங்கள் பிரிவினால் இணையத்தளத்தினூடா கையாளப்படும்.

iii. **சிரேஷ்ட உதவிச் செயலாளர் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர் மற்றும் சிரேஷ்ட உதவிக் கணக்காளர் /சிரேஷ்ட உதவி நிதி நிர்வாகி / சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் பதவிகளுக்கு இணையவழி ஊடாக விண்ணப்பங்களைக் கோருதல் மற்றும் அந்த அலுவல்களைக் கையாளும் அமைப்பு**

இந்த முறை ஊடாக ஊழியர்களுக்கு இணையத்தளத்தின் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மனித வளங்கள் பிரிவினால் நேர்முகப் பரீட்சைக்காக கால அட்டவணைப்படுத்தப்படும்.

iv. **ஊக்குவிப்பு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை கையாளும் அமைப்பு**

பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் நிதிப் பிரிவுகளின் உத்தியோகத்தர்களுடன் தொடர்புடைய தகவல்களைச் சேகரித்தல் மற்றும் ஊக்குவிப்பு பயிற்சித் திட்டங்களை கையாளுவதற்கான இணையவழி விண்ணப்பதை தயாரித்தல்.

v. **களஞ்சியசாலை முகாமைத்துவ அமைப்பு**

களஞ்சியசாலை முகாமைத்துவ அமைப்பு ஊடாக களஞ்சியங்களிலுள்ள அனைத்து உருப்படிகள் தொடர்பான தகவல்களும் தரவுகள் களஞ்சியசாலையொன்றுக்கு சேகரிக்கப்படுவதுடன் அனைத்துப் பிரிவுகளும் அவர்களுடைய பொருட் கோரல் படிவத்தை இலகுவாக சமர்ப்பிப்பதற்காக இடையிணைப்பியொன்றினூடாக இந்த தரவுகள் களஞ்சியசாலைக்குள் பிரவேசிக்க முடியும்.

vi. சட்ட மற்றும் ஆவணப் பிரிவுகளுக்கான கோப்பு விநியோக அமைப்பு

இந்தப் பிரிவுக்கு கிடைக்கப்பெறும் கடிதங்களை கையாளவதற்கு மற்றும் பிரிவின் அதிக பாதுகாப்புக்கும் மிருதுவான செயற்பாட்டிற்கும் கடிதங்களின் ஸ்கான் பிரதிகளை பேணுவதற்காகவும் இந்தப் பயன்பாடு (அப்ளிகேசன்) பயன்படுத்தப்படுகின்றது.

vii. வாகனங்களை ஒதுக்கிக்கொள்வதற்கான இணையவழி விண்ணப்பம்

இந்த அப்ளிகேஷின் பிரிவு /அலகுகளிடமிருந்து வாகனங்களை ஒதுக்கிக்கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் இணையவழிக் கோரிக்கைகளை கையாளவதற்காக மேம்படுத்தப்பட்டுள்ளதுடன் குறித்த தரப்புக்களினால் அதற்காக இணையவழி ஊடாக அங்கீகாரம் வழங்கப்படுகின்றது. இந்தப் பயன்பாடு தற்போது பரிசோதனை மட்டத்தில் நிலவுகின்றது.

viii. **பல்கலைக்கழகத்திற்கு இணையவழி மூலமாக இடமாற்றல் கோரிக்கைகளை முன்வைக்கும் விண்ணப்பம்**

ஏனைய பல்கலைக்கழகங்களின் ஊழியர் இடமாற்றல் செயற்பாட்டை கணனி மயப்படுத்திய நிகழ்ச்சித் திட்டமொன்றாக மாற்றியமைப்பதே இந்தப் பயன்பாட்டை (அப்ளிகேஷனை) மேம்படுத்துவதற்கான நோக்கமாகும். இந்தப் பயன்பாடு தற்போது மேம்படுத்தல் மட்டத்தில் நிலவுகின்றது.

ix. **ஊழியர் எண்ணிக்கையுடன் தொடர்புடைய அறிக்கைகளை உருவாக்குவதற்கான கணனிப் பயன்பாடு**

ஊழியர் எண்ணிக்கை தொடர்பான அறிக்கைகளை இலகுவாக உருவாக்குவதற்காக மனித வளங்கள் பிரிவின் கோரிக்கைக்கமைய இந்தப் பயன்பாடு மேம்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இதனைப் பரிசோதிப்பதற்காக மனித வளங்கள் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

12.2 வலையமைப்பு மற்றும் வன்பொருள் மேம்பாடு

தகவல் தொழில்நுட்ப பிரிவினால் மிருதுவான தகவல் தொழில்நுட்ப சூழலை உறுதிசெய்வதற்கான வன்பொருள் மற்றும் வலையமைப்புடன் தொடர்புடைய செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

- நடைமுறையிலுள்ள தொலைபேசி முறைமையிலுள்ள சிக்கல்களை இனங்கண்டு அவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வேண்டுகோல்களுக்கு அமைவாக தொழில்நுட்ப விபரக்குறிப்புகளை வழங்குதல்.

- பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் பிரதேச வலையமைப்பு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.
- பிரிவுகளின் உள்ளக வலையமைப்பை (local area network) புதுப்பித்தலும் புதுப்பித்தலின் பின்னர் வருகின்ற சிக்கல்களை சரிசெய்தல்.

i. டிஜிட்டல் தொலைபேசி முறைமையை (PABX) மறுசீரமைத்தல்

பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு ஆளணிக்கிடையில் தொடர்பாடலை மேம்படுத்தல் மற்றும் பயன்மிக்க அரச சேவையை வழங்குவதற்கும் அவர்களுடைய உள்ளக தொலைபேசி இணைப்புகளுக்கான தனித்துவ அம்சங்களைக் கொண்ட மலிவான மாற்று வழிகளை வழங்குகின்ற PBX முறையொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

பொது மக்களால் வழங்கப்படும் அழைப்புக்களை மேம்படுத்துவதற்கு தகவல் மையத்தில் நிலவிய இணையத்தள போட்ரொகோல் தொலைபேசிக்குப் (IP Phones) பதிலாக அழைப்பு மையங்கள் வசதிகளுக்கு உதவி வழங்கும் மேலதிக சிறப்பம்சங்களுடனான புதிய தொலைபேசிகள் மீளமைக்கப்பட்டதுடன் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவில் தொடர்பாடல்களை மேம்படுத்திக்கொள்வதற்காக ஏனைய சில மூன்றாம் தரப்பு இணையத்தள போட்ரொகோல் தொலைபேசிகள் மீளமைக்கப்பட்டன.

ii. பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு மற்றும் புஞ்சி பொறளை வளாகத்தில் பயர்வோலை (Firewalls) அமுல்படுத்தல்

முன்வரையறுக்கப்பட்ட பாதுகாப்பு விதிகளை அடிப்படையாகக்கொண்டு உள்வருகின்ற மற்றும் வெளிச் செல்கின்ற இணைய நெரிசலை கண்காணித்து கட்டுப்படுத்துகின்ற இணைய பாதுகாப்பினை பயர்வோல் உறுதிசெய்கின்றது. ப.மா.ஆ குழு வளாகம் மற்றும் புஞ்சி பொரளை வளாகத்திலுள்ள இரண்டு பயர்வோல்களும் தளத்திற்குத் தள Site to Site VPN மூலமாக இணைக்கப்படுகின்றன.

iii. வலையமைப்பு உட்கட்டமைப்பு வசதிகள் நிருவாகம் மற்றும் கண்காணிப்பு

- Lanka Education & Research Network (LEARN) இனால் முகாமைப்படுத்தப்படும் Eduroam கம்பியற்ற சேவையை பராமரித்துப் பேணிவரல்.
- Kaspersky Antivirus Guard இன் நிருவாகம் மற்றும் கண்காணிப்பு
- அனுமதிப் பத்திரங்கள் கண்காணிப்பு மற்றும் புதுப்பித்தல் (பயர்வோல், SSL ஆகியன)
- பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவில் காணப்படும் கம்பியற்ற துணைக்கருவிகளை பராமரித்தல்.
- இன்டர்கொம் முறைமையை முகாமைப்படுத்தல்.
- CCTV கெமரா அமைப்பை பராமரித்தல்.

iv. இணையவழி ஒத்துழைப்பு வசதிகளை மேம்படுத்தல்

புதிய தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட வீடியோ கருத்தரங்குத் துணைக் கருவியொன்றை அறிமுகப்படுத்துவதனூடாக பல்கலைக்கழக

மானியங்கள் ஆணைக்குழுவின் பேரவை அறையில் நடாத்தப்படும் கூட்டங்கள் மற்றும் முன்னிலைப்படுத்தல் வசதிகளை மேம்படுத்தல்.

v. வலையமைப்பு மறுசீரமைப்பு

சில பிரிவுகள் / அலகுகளின் வலையமைப்புக்களின் மிருதுவான செயற்பாட்டிற்காக பல்வேறு இணையத்தள பொட்ரொகோல் முகவரிகள் (IP Addresses) ஒதுக்கப்பட்டுள்ளன.

vi. கம்பியற்ற தீர்வுகள்

பழைய இணையத்தள அணுகல் புள்ளிகள் காலங்கடந்த மற்றும் புதிய தொழில்நுட்பத்துடன் பொருந்தாமையினால் புதிய கம்பியற்ற தீர்வொன்று ஆரம்பிக்கப்பட்டது. அத்தோடு, இந்த பழைய துணைக்கருவிகளுடன் எதிர்பார்த்த இணையத்தள வேகத்தை பெற்றுக்கொள்ள முடியாது.

13. சட்ட அலுவல்கள்

13.1 புதிய சட்டங்கள்

மீளாய்வாண்டில் கீழ் குறிப்பிடப்படும் 27 கட்டளைகள் மற்றும் 02 ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- **2022 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கட்டளைகள்**

i. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.02.11 ஆம் திகதிய 2266/73 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் இணை மருத்துவ பீடத்தின் கீழ் கண் பார்வை பரிசோதனை கற்கைப் பிரிவை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

ii. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.02.17 ஆம் திகதிய 2267/35 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நகர மற்றும் நீர் உயிரியல் வளங்கள் பீடத்தை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

iii. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.03.03 ஆம் திகதிய 2269/53 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் பேராதனை பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் கீழ் குடும்ப மருத்துவ விஞ்ஞான கற்கைப் பிரிவை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

iv. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.04.06 ஆம் திகதிய 2274/15 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் களனிப் பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான

பீடத்தின் கீழ் தகவல் தொழில்நுட்ப கற்கைப் பிரிவை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

v. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.04.06 ஆம் திகதிய 2274/15 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தின் கீழ் தகவல் தொழில்நுட்ப கற்கைப் பிரிவை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

vi. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.04.06 ஆம் திகதிய 2274/15 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் றுஹுணு பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானம் மற்றும் மானிடவியல் பீடத்தின் கீழ் தகவல் தொழில்நுட்ப கற்கைப் பிரிவை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

vii. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.04.06 ஆம் திகதிய 2274/15 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானம் மற்றும் மானியடவியல் பீடத்தின் கீழ் தகவல் தொழில்நுட்ப கற்கைப் பிரிவை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

viii. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.04.06 ஆம் திகதிய 2274/15 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானம் மற்றும் மொழிகள் பீடத்தின் கீழ் தகவல் தொழில்நுட்ப கற்கைப் பிரிவை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

ix. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.04.06 ஆம் திகதிய 2274/15 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் கம்பஹா விக்கரமாரச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தின் சுதேச சமூக விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தின் கீழ் தகவல் தொழில்நுட்ப கற்கைப் பிரிவை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

x. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.04.06 ஆம் திகதிய 2274/15 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தின் கீழ் தகவல் தொழில்நுட்ப கற்கைப் பிரிவை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

xi. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.04.18 ஆம் திகதிய 2276/04 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தின் கீழ் தகவல் தொழில்நுட்ப கற்கைப் பிரிவை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

xii. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.06.22 ஆம் திகதிய 2285/09 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கணனிப் பீடத்தை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

xiii. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.07.26 ஆம் திகதிய 2290/13 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாசார அலுவல்கள் பீடத்தின் கீழ் தகவல் தொழில்நுட்ப கற்கைப் பிரிவை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

xiv. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.08.09 ஆம் திகதிய 2292/30 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் கீழ் இயந்திரவியல் பொறியியல் கற்கைப் பிரிவை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

xv. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.07.28 ஆம் திகதிய 2290/30 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் கட்டிடக்கலை பீடத்தின் கீழ் வசதிகள் முகாமைத்துவக் கற்கைப் பிரிவை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

xvi. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.08.19 ஆம் திகதிய 2293/63 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கட்புல ஆற்றுகை கலைகள் பல்கலைக்கழகத்தின் நடனம் மற்றும் நாடகக் கலை பீடத்தின் கீழ் தகவல் தொழில்நுட்ப கற்கைப் பிரிவை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

xvii. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.08.25 ஆம் திகதிய 2294/43 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின்

தொழில்நுட்பக் கற்கைப் பீடத்தின் கீழ் தகவல் தொழில்நுட்ப கற்கைப் பிரிவை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

xviii. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.04.18 ஆம் திகதிய 2276/04 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சேர் பொன்னம்பலம் இராமநாதன் கட்புல மற்றும் ஆற்றுகைக் கலைகள் பீடத்தை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

xix. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.09.30 ஆம் திகதிய 2299/67 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் கீழ் ''குடும்ப மருத்துவ விஞ்ஞான கற்கைப் பிரிவு'' இற்குப் பதிலாக ''முதனிலை சுகாதாரக் காப்புறுதி மற்றும் குடும்ப மருத்துவ கற்கைப் பிரிவு'' என பதிலீடு செய்யப்பட்டது.

xx. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.10.11 ஆம் திகதிய 2301/31 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் றுஹுணு பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் கீழுள்ள ''விவசாயப் பொருளியல் விஞ்ஞான கற்கைப் பிரிவு'' இற்குப் பதிலாக ''விவசாயப் பொருளியல் விஞ்ஞானம் மற்றும் விவசாய வணிகக் கற்கைப் பிரிவு'' என பதிலீடு செய்யப்பட்டது.

xxi. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.10.27 ஆம் திகதிய 2303/24 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் கீழ் கணனிக் கற்கைகள் பீடத்தை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

xxii. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.09.30 ஆம் திகதிய 2299/66 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் றுஹுணு பல்கலைக்கழகத்தின் விவசாயப் பீடத்தின் கீழ் நிலவும் ''விவசாயப் பொறியியல் கற்கைப் பிரிவு'' இற்குப் பதிலாக ''விவசாய பொறியியல் மற்றும் சுற்றாடல் தொழில்நுட்பவியல் கற்கைகள் பிரிவு'' எனப் பதிலீடு செய்யப்பட்டது.

xxiii. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.11.09 ஆம் திகதிய 2305/16 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் கால்நடை

விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாய பீடத்தின் கீழ் உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப கற்கைப் பிரிவை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

xxiv. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.12.13 ஆம் திகதிய 2310/13 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் றுஹுணு பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் கீழ் கடல்சார் பொறியியல் மற்றும் கப்பல் நிர்மாணக் கற்கை பீடத்தை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

xxv. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.12.12 ஆம் திகதிய 2310/06 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தின் கீழ் தொடர்பாடல் மற்றும் ஆக்கத்திறன்கள் கலைகள் கற்கைப் பிரிவை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

xxvi. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.12.19 ஆம் திகதிய 2311/12 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் கீழ் நிலவும் ‘‘போக்குவரத்து மற்றும் கணிப்பியல் முகாமைத்துவக் கற்கைப் பிரிவு’’ இற்குப் பதிலாக ‘‘போக்குவரத்து முகாமைத்துவம் மற்றும் கணிப்பியல் பொறியியல் கற்கை பிரிவு’’ எனப் பதிலீடு செய்யப்பட்டது.

xxvii. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வரையப்பட்டு 2022.12.27 ஆம் திகதிய 2312/14 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையின் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் கணனிப் பீடத்தை நிறுவுதல் தொடர்பான கட்டளை.

- **2002 இல் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள்**

i. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட 2022.05.27 ஆம் திகதிய 2281/33 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 2008 இன் 02 ஆம் இலக்க கொழும்புப் பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகம் தொடர்பான ஒழுங்குவிதிகள்

ii. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட 2022.12.29 ஆம் திகதிய 2312/38 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 2022 இன்

01 ஆம் இலக்க மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் தொடர்பான ஒழுங்குவிதிகள்.

13.1 நீதிமன்ற வழக்குகள்

2022 காலப்பகுதியில் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவுக்கு எதிராக நீதிமன்றங்கள் மற்றும் நியாயாதிக்க சபைகளில் தாக்கல் செய்யப்பட்ட பின்வரும் வழக்குகள் ஆணைக்குழுவின் சட்டப்பிரிவினால் வழிநடாத்தப்பட்டது.

உயர் நீதிமன்றம்	-	38 வழக்குகள்
மேன்முறையீட்டு நீதிமன்றம்	-	35 வழக்குகள்
பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீட்டு சபை	-	36 வழக்குகள்
மாவட்ட நீதிமன்றம்	-	04 வழக்குகள்
தொழிலாளர் நியாயாதிக்க சபை	-	02 வழக்குகள்
மத்தியஸ்தம்	-	01 வழக்குகள்
மேல் நீதிமன்றம்	-	02 வழக்குகள்

13.2 ஏனைய செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட பங்களிப்புக்கள்

- **பல்கலைக்ககழக மாணியங்கள் ஆணைக்குழுவினுள் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்**

  i. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாடுகளுக்கு எதிரான விசாரணைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் கூட்டங்கள் மற்றும் அந்தக் குழுவின் செயற்பாட்டிற்குத் தேவையான உதவியைப் பெற்றுக்கொடுத்தல்

  ii. உயர்கல்வி நிறுவகங்களின் அனைத்து ஒழுங்குவிதிகள் தொடர்பாக மீளப் பரீட்சிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆலோசகர்களுக்கு உதவி வழங்குதல்.

- **பல்கலைக்ககழக மாணியங்கள் ஆணைக்குழுவுக்கு வெளியே மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்**

  i. தேசிய கல்வி நிறுவக சட்டத்தை திருத்தியமைப்பதற்கான முன்மொழிவுகளை முன்வைப்பதற்கான குழு அங்கத்துவம்

  ii. தாதியியல் பல்கலைக்கழகத்தின் தாபித்தலுக்கான சட்ட ரீதியான ஆவணங்களை தயாரிப்பதற்கான அலுவல்களுக்கு உதவி வழங்கியமை.

14. பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீடுகள் சபை (USAB)

பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீடுகள் சபையானது 2022.01.01 முதல் 2022.12.31 வரையிலான காலப் பகுதியினுள் 26 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. 2022ஆம் ஆண்டில் பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீடுகள் சபையில் 30 மேன்முறையீடுகள் பதிவு செய்யப்பட்டது. 01 மேன்முறையீடு தொடர்பாக ஆரம்பநிலை உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளது. 10 மேன்முறையீடுகள் தொடர்பாக கட்டளைகள் வெளியிடப்பட்டுள்ளதுடன், அதில் 03 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதுடன், 01 ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதில் 06 முறைப்பாடுகள் தள்ளுபடி செய்யப்படவோ ஏற்றுக்கொள்ளப்படவோ இல்லை. மத்தியஸ்தம் மற்றும் மேன்முறையீட்டாளரின் விருப்பம் காரணமாக 05 மேன்முறையீடுகள் தொடர்பான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டன. எந்தவொரு இடைக்கால உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. 2022

ஆம் ஆண்டிறுதியாகும்போது 07 உத்தரவுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. எந்தவொரு மேன்முறையீடும் ஒத்திவைக்கப்படவில்லை. 2022 ஆம் ஆண்டிறுதியாகும்போது 41 மேன்முறையீடுகள் விசாரிக்கப்பட்டு வருகின்றது.

பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீடுகள் சபையால் வழங்கப்பட்ட உத்தரவுகளுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மூன்று (03) வழக்குகள் மேன்முறையீடு செய்யப்பட்டதுடன் எந்தவொரு உத்தரவுக்கும் எதிராக உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடுகள் செய்யப்படவில்லை.

15. மத்திய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அலுவல்கள்

மத்திய உள்ளகக் கணக்காய்வு பிரிவானது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுக்கான தாபனவிதிக் கோவையின் 1$^{வது}$ அத்தியாயத்தின் 3$^{வது}$ பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் தாபிக்கப்பட்டது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் ஏனைய அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் உள்ளக கணக்காய்வு தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதாகும்.

15.1 கணக்காய்வுத் திட்டம்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட இலக்கம்: F.R.133 மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல.: DMA/2009(1) இன் இணைப்பு 2 இற்கமைய ஆண்டிற்கான கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்படுகிறது.

15.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள்

ஆணைக்குழுவின் திறைசேரிப் பிரதிநிதிகள் கணக்காய்வுக் குழுவின் தலைமைப் பதவியை வகித்ததுடன் அது ஆணைக்குழுவின் உபகுழுவாக முறைப்படி அமைக்கப்பட்ட மேலும் மூன்று ஆணைக்குழு உறுப்பினர்களைக் கொண்டதாகும். தேசிய கணக்காய்வு ஆணைக்குழுவின் கணக்காய்வு அத்தியட்சகர் மேற்பார்வையாளராக பங்குபற்றியிருந்ததுடன் ப.மா.ஆ குழுச் செயலாளர், ப.மா.ஆ குழு கணக்காளர் மற்றும் ஏனைய அலுவலர்கள் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

2022 ஆம் ஆண்டில் ஆறு கணக்காய்வுக் கூட்டங்களும் இரண்டு விசேட கணக்காய்வு குழுக் கூட்டங்களும் நடாத்தப்பட்டன.

வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தை மீளாய்வுக்குட்படுத்தல், பல்கலைக்கழக முறைமையில் பரப்பப்பட வேண்டியுள்ள கொள்கைத் தீர்மானங்கள் சம்பந்தமாக கணக்காய்வுக்குழு முகாமைத்துவ குழுவுக்கு அல்லது ஆணைக் குழுவுக்கு பரிந்துரைகளை முன்வைக்கின்றது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் மற்றும் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் கலந்துரையாடலுக்குட்படுத்தப்படுகின்றது.

15.3 நடாத்தப்பட்ட முன்கூட்டிய கணக்காய்வுகள்

ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் பிழையற்ற தன்மையை உறுதி செய்வதற்காக பின்வரும் பகுதிகளில் முன்கூட்டிய கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

- சேமலாப நிதியத்தின் விடுவிப்பு
- பணிக்கொடைக் கொடுப்பனவு
- ஓய்வு+தியத்தின் விடுவிப்பு

15.4 முன்னேற்ற அறிக்கை – உள்ளக கணக்காய்வு பிரிவு 2022

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உள்ளக கணக்காய்வு பிரிவின் ஊழியர்கள் 2022 ஜனவரி முதல் டிசெம்பர் வரையான காலப்பகுதியில் கணக்காய்வு விசாரணைகளுக்காக உயர்கல்வி நிறுவகங்கள் மற்றும் நிறுவகங்களுக்கு சென்றனர். விசாரணை அறிக்கைகளை அவர்களுடைய கணக்காய்வுக் குழுக்களுக்கு சமர்ப்பிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஊடாக குறித்த உயர்கல்வி நிறுவகங்கள் / நிறுவகங்களுக்கு பொறுப்பான துணைவேந்தர்கள் / வளாக அதிபதிகள் / பணிப்பாளர்களுக்கு அந்த அறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டன.

உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பொழிப்பு - 2022

இல.	விடயம்	குறிப்பு.இல	அறிக்கை சமர்ப்பித்த திகதி
01	கணக்காய்வறிக்கை - கையிருப்புத் தொகை பற்றிய பௌதிக சரிபார்ப்பு	UGC/CIA/F/IAR/22-01	12/01/2022
02	கணக்காய்வறிக்கை - மடிக்கணனி கொள்வனவு 2020	UGC/CIA/IAR/22-02	13/01/2022
03	கணக்காய்வறிக்கை -2021 ஆண்டிற்காக NCAS இன் கொடுப்பனவு வவுச்சர்கள்	UGC/CIA/IAR/22-03	13/01/2022
04	கணக்காய்வறிக்கை - பற்றுச்சீட்டுக்கள், வங்கி மற்றும் வங்கி சமரசங்கள் NCAS	UGC/CIA/IAR/22-03-1	13/01/2022
05	கணக்காய்வறிக்கை - முற்பணம் மற்றும் தீர்த்தல் NCAS	UGC/CIA/IAR/22-03-2	20/01/2022
06	NCAS இன் தனிப்பட்ட கோப்புக்கள் பற்றிய கணக்காய்வறிக்கை	UGC/CIA/F/IAR/22-03-3	07/02/2022
07	மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் பற்றிய உயர்கல்விக்கான தேசிய நிலையத்தின் கணக்காய்வறிக்கை - 2021 - மூலதன மானியம்	UGC/CIA/F/IAR/22-03-4	07/02/2022
08	மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் பற்றிய உயர்கல்விக்கான தேசிய நிலையத்தின் கணக்காய்வறிக்கை - பெறுகைகள் மற்றும் ஒப்பந்தப்பணி முகாமைத்துவம்	UGC/CIA/F/IAR/22-03-5	08/02/2022

இல.	விடயம்	குறிப்பு.இல	அறிக்கை சமர்ப்பித்த திகதி
09	மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் பற்றிய உயர்கல்விக்கான தேசிய நிலையத்தின் கணக்காய்வறிக்கை - கருத்தரங்கு, செயலமர்வு மற்றும் கருத்தரங்கு	UGC/CIA/F/IAR/22-03-6	04/03/2022
10	வருகை, விடுமுறை அறிக்கைகள், சம்பளம் மற்றும் ஆராய்ச்சிக் கொடுப்பனவுகள் பற்றிய கணக்காய்வறிக்கை -NCAS	UGC/CIA/IAR/22-03-7	10/03/2022
11	தனிப்பட்ட கோப்புக்கள் பற்றிய உள்ளகக் கணக்காய்வறிக்கை - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு	UGC/CIA/IAR/22-04	14/03/2022
12	நிதி அதிகாரங்களை ஒப்படைத்தல் பற்றிய உள்ளக கணக்காய்வு அறிக்கை 2022 - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு	UGC/CIA/IAR/22-05	26/04/2022
13	களஞ்சியசாலை மற்றும் களஞ்சியசாலை நடைமுறை பற்றிய உள்ளக கணக்காய்வு அறிக்கை - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு	UGC/CIA/IAR/22-06	26/04/2022
14	விசேட அறிக்கை - தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் எம் எச் எம் நஜீம் அவர்கள் கணக்கீட்டு அலுவலராக அவருடைய நிர்வாக அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசாங்க நிதி 1.47 மில்லியன் ரூபா மோசடி செய்துள்ளதுடன் அந்தப் பல்கலைக்கழகத்தில் அவ்வாறான செயற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொள்ளல்.	UGC/CIA/IAR/22-07	21/06/2022
15	உள்ளக கணக்காய்வு அறிக்கை - 2021/ 2022 பாளி மற்றும் பௌத்த பட்டப்பின் படிப்பு நிறுவகம்	UGC/CIA/F/IAR/22-08	/06/2220 22
16	கணக்காய்வு அறிக்கை -UGC இன் கொடுப்பனவு வவுச்சர்கள்	UGC/CIA/IAR/22-09	08/08/2022
17	பல்கலைக்கழக மானியங்கள் ஆஆணைக்குழுவின் பல்கலைக்கழக சேமலாப நிதியம் மற்றும் பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் முதலீடுகள் பற்றிய கணக்காய்வறிக்கை	UGC/CIA/IAR/22-10	09/08/2022
18	கணக்காய்வறிக்கை - மனித வளங்கள் முன்னேற்றம் தொடர்பான நிறுவகம்	UGC/CIA/F/IAR/22-11	16/08/2022
19	கணக்காய்வறிக்கை - தேசிய நூலகங்கள் மற்றும் தகவலறிவியல் நிறுவகத்தின் (NILIS)	UGC/CIA/F/IAR/22-12	30/09/2022

இல.	விடயம்	குறிப்பு.இல	அறிக்கை சமர்ப்பித்த திகதி
20	இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் திருமதி D.L.C.J. மல்லிக்கா அவர்களின் மாதாந்த ஓய்வூதியத்தை செலுத்துவதற்கான விண்ணப்பம் பற்றிய கணக்காய்வறிக்கை	UGC/CIA/F/IAR/22-13	18/10/2022
21	களஞ்சியசாலை மற்றும் களஞ்சியசாலை நடைமுறை பற்றிய உள்ளக கணக்காய்வு அறிக்கை	UGC/CIA/F/IAR/22-14	31/10/2022
22	வங்கியியல், வங்கி இணக்கப்பாடு, வவுச்சர்கள் மற்றும் சம்பளத்துடன் தொடர்புடைய செலவுகள் -NCAS	UGC/CIA/F/IAR/22-15-1	21/11/2022
23	பொருட்கள் மற்றும் சேவைகள் பெறுகை மற்றும் எரிபொருள் கொடுப்பனவு -NCAS	UGC/CIA/F/IAR/22-15-2	21/11/2022
24	தனிப்பட்ட கோப்புக்கள் பற்றிய கணக்காய்வறிக்கை -NCAS	UGC/CIA/F/IAR/22-15-3	21/11/2022
25	ஓய்வூதிய நிதியம்	UGC/CIA/F/IAR/22-15-16	14/12/2022

அட்டவணை : 15.4 முன்னேற்ற அறிக்கை – உள்ளக கணக்காய்வுப் பிரிவு

15.5 வெளியிடப்பட்ட உள்ளக கணக்காய்வுச் சுற்றறிக்கைகள் மற்றும் தாபன சுற்றறிக்கைகள்

கீழ் குறிப்பிடப்படும் துறைகளுக்காக ஆணைக்குழுவின் அங்கீகாரத்தடன் மூன்று (03) சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டன.

சுற்றறிக்கை இல.		விடயம்	திகதி
01	உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கை இல.: 01/2022	நிலுவை பிணைமுறித் தொகை செலுத்த வேண்டியுள்ள பிணைமுறி மீறியவர்களின் பெயர்ப் பட்டியல்	19/01/2022
02	உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கை இல.: 02/2022	நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் பிணைமுறியின் பெறுமதியை அறவிட்டுக்கொள்ளல்	22/06/2022
03	உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கை இல.: 03/2022	உயர்கல்வி நிறுவகங்களின் பிணைமுறி மீளாய்வுக் குழுவுக்கான நிபந்தனைகள் (TOR)	12/12/2022

அட்டவணை : 15.5 வெளியிடப்பட்ட உள்ளக கணக்காய்வுச் சுற்றறிக்கைகள் மற்றும் தாபன சுற்றறிக்கைகள்

16. வெளியீடுகள் மற்றும் அறிக்கைகள் / அபிவிருத்தி நடவடிக்கைகள் / சிறப்புப் பணி ஒப்படைகள்

16.1 வெளியீடுகள் மற்றும் அறிக்கைகள்

2022 ஆம் ஆண்டில்,பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழுவின் தகவல் தொடர்பாடல் முகாமைத்துவ முறைமைகள் பிரிவானது பின்வரும் முக்கியமான வெளியீடுகள் மற்றும் அறிக்கைகள் மூலமாக அமைப்புக்கு நிர்வாகம்சார் ஒத்துழைப்பை வழங்கியது;

- "இலங்கை பல்கலைக்கழக புள்ளிவிவரங்கள் 2021" எனும் வெளயீட்டுத் தொடரின் 20 ஆவது இதழ் 2022 ஆகஸ்ட் மாதத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டது.

16.2 அபிவிருத்தி நடவடிக்கைகள்

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வலைத்தளத்தில் வெப்போமெற்ரிக்ஸ் (webometrics) மற்றும் QS உலக பல்கலைக்கழகங்கள் தரப்படுத்தலில் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் இற்றைப்படுத்தப்பட்ட தரப்படுத்தல்கள் வெளியிடப்பட்டன.
- Science Land IT (PVT) Ltd இனால் உருவாக்கப்பட்ட இணைய அடிப்படையிலான தகவல் தொடர்பாடல் முகாமைத்துவ முறைமையானது அதன் அறிக்கைகள் உருவாக்கத்தினை சோதிக்கும் கட்டத்தில் நிலவுகின்றது. அதற்கமைய அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் தரவுகள் பதியப்பட்டு அறிக்கைகள் பரீட்சிக்கப்பட்டன.

16.3 விசேட பணி ஒப்படைகள்

2022 ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்படும் விசேட பணி ஒப்படைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் (R&D) கணக்கெடுப்பு - 2021 இற்காக பல்கலைக்கழகங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள் பரீட்சிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டது.
2. உயர் கல்வி நிறுவகங்களில் பிணைமுறி உடன்படிக்கையை மீறியமையுடன் தொடர்புடைய (2022 யூன் 31ம் திகதியிலுள்ளவாறு) ஆளணியிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள தொகையை அறவிட்டுக்கொள்வதற்காக எடுக்கப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் ஒன்றுதிரட்டப்பட்டு உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டது.
3. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இறுதி எம்.பி.பி.எஸ் (பிரதான) பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு எம்.பி.பி.எஸ் பட்டதாரிகளின் பொதுவான திறமை வரிசைக்கிரமப் பட்டியல் தொகுக்கப்படல் மற்றும் வதிவிடப் பயிற்சியின் நோக்கத்திற்காக சுகாதார அமைச்சிடம் சமர்ப்பித்தல்.
   - 2014/15 பிரதான பரீட்சைக்கான திறமை வரிசைக்கிரமப் பட்டியல்
   - 2013/14 மீள் பரீட்சைக்கான திறமை வரிசைக்கிரமப் பட்டியல்
4. கல்வி அமைச்சின் செயலாளரால் கோரிக்கைக்கிணங்க தரவுத் தளமொன்றினை பேணி வருவதற்காக பல்கலைக்கழகங்கள் / உயர்

கல்வி நிறுவகங்களின் அனைத்து காணிகள் / காணி கையகப்படுத்தல்கள் மற்றும் அறுதி உறுதிகள் தொடர்பான தரவு சேகரிப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

5. மத்திய வங்கியின் ஆண்டறிக்கை மற்றும் 2022 இன் அண்மைக்கால பொருளாதார வளர்ச்சி சிறப்பம்சங்கள் மற்றும் 2023 இற்காக பூர்த்தி செய்துகொள்வதற்கான எதிர்பார்ப்புக்கள் பூர்த்திசெய்யப்பட்டு மத்திய வங்கியிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

6. 2021 ஆம் ஆண்டிற்காக பீடத்தினால் பட்டத் தேர்வுநாடிகளின் அலகுக்கான மீண்டெழும் செலவு அறிக்கை பகுப்பாய்வு செய்யப்பட்டு தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

7. 2022 செப்தெம்பர் 30 ஆம் திகதியன்று பல்கலைக்கழக மாணவர்களுக்கான விடுதி வசதிகள் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டு உயர்கல்வி அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

8. பின்வரும் தரப்புக்களின் தரவுக் கோரிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டு முழுமையான தரவுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

    - யுனெஸ்கோ
    - மத்திய வங்கி
    - தொகை மதிப்புத் திணைக்களம்
    - AHEAD செயற்றிட்டம்
    - ஏனைய அரசாங்க நிறுவனங்கள்

9. சகல மாதங்களினதும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பட்டப் பாடநெறிகளின் முன்னேற்றம் தயாரிக்கப்பட்டு தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

17. பாலின நிலை ஒப்புரவு / சமத்துவம்

பாலின நிலை ஒப்பரவு மற்றும் சமத்துவத்தை மேம்படுத்துவதற்காக இலங்கையிலுள்ள அரச பல்கலைக்கழகங்களில் பன்முகத்தன்மை மற்றும் உள்வாங்குதல் உணர்திறன் கொண்ட இணக்கமான கற்றல் / பணிச்சூழலை மேம்படுத்துவதற்கும் பராமரிப்பதற்றும் இந்த நிலையம் நிறுவப்பட்டுள்ளது. அதற்கமைய, பால்நிலை ஒப்பரவு மற்றும் சமத்துவம் தொடர்பான நிலையான குழுவின் வழிகாட்டுதலின் கீழ் செயற்படும் இந்த நிலையமானது பல்கலைக்கழக சமூகங்களில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதில் கவனம் செலுத்துகின்ற பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. பேராசிரியர் ஹேமமாலி குணதிலக்க (பெண்கள் மற்றும் பாலின நிலை துறையில் கலாநிதிப் பட்டம், வோர்விக் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம்) 2022 மே மாதம் வரை இந்த நிலையத்தின் பணிப்பாளராக ஓய்வு விடுமுறை காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நியமனமொன்றாக நடவடிக்கை மேற்கொண்டார். அவருடைய ஒரு வருட சேவைக் காலம் நிறைவடைந்ததன் பின்னர் அந்த நிலையத்தின் பதில் கடமை பணிப்பாளராக மீண்டும் நியமிக்கப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டில் அந்த நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

17.1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மையப்படுத்தப்பட்ட குறை தீர்த்தல் பொறிமுறை

2022 ஆம் ஆண்டில் புதிய மாணவர்களிடமிருந்து அல்லது அவர்களின் பெற்றோர்களிடமிருந்து மற்றும் பல்கலைக்கழக சமூக உறுப்பினர்களிடமிருந்து பகிடிவதை மற்றும் பாலியலும் பால்நிலை சார்ந்த வன்செயல்கள் (SGBV) தொடர்பான முறைப்பாடுகள், 2016 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் தாபிக்கப்பட்ட குறை தீர்த்தல் பொறிமுறையின் கீழ் பின்வரும் வழிகள் மூலமாக பல்கலைக்கழக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெற்றன.

- பகிடிவதை தொடர்பான முறைப்பாடுகளை முன்வைப்பதற்கான இணையவழி வலைதள நுழைவாயில் www.ugc.ac.lk/rag /அல்லது https://www.eugc.ac.lk/rag/
- 0112123700 தொலைபேசி இலக்கம்
- மின்னஞ்சல் முகவரி: raggінghelp@ugc.ac.lk மற்றும் helpme@ugc.ac.lk
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு தொலைபேசி மூலம் அறிவித்தல், தனிப்பட்ட அல்லது எழுத்து மூலமாக முறைப்பாடுகளை சமர்ப்பித்தல், மின்னஞ்சல் முகவரி ஊடாக அறிவித்தல்.

17.2 முறைப்பாடுகள் வலைதள நுழைவாயில்

அரச பல்கலைக்கழக சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் முறைப்பாடுகள் வலைதள நுழைவாயிலை அணுக முடியுமென்பதோடு பகிடிவதையுடன் தொடர்பான ஆனால் பிரதானமாக பாலியல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறையென (SGBV) வகைப்படுத்தக்கூடிய சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளையும் பதிவு செய்ய முடியும். 2022 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை வழக்கத்தைவிட குறைவாக இருக்கின்றது. அதற்கான காரணம், பல்கலைக்கழகங்கள் இணையவழி மூலம் நடாத்தப்பட்டமையும் மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தினுள் இருக்காமையுமாகும். எவ்வாறாயினும் கிடைக்கப்பெற்ற சில முறைப்பாடுகள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அந்தந்த பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பப்பட்டதுடன் நிலவும் சில முறைப்பாடுகள் சம்பந்தமாக விசாரிக்கப்பட்டு தீர்க்கப்பட்டன. (கிடைக்கப்பெற்ற மற்றும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 71 ஆக இருந்ததுடன் 18 முறைப்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.)

17.3 ஆராய்ச்சி முயற்சிகள்

இலங்கை அரச பல்கலைக்கழகங்களில் பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறைகள் நிலவுதல் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் பகிடிவதையை எதிர்த்துப் போராடுவதற்குரிய உத்திகளை முன்மொழிதல் மற்றும் குறைத்தல் சம்பந்தமாக UNICEF நிதியுதவி வழங்கப்படும் பாலியல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறை தொடர்பான அறிக்கை 2022 மார்ச் மாதம் வெளியிடப்பட்டது. செயலாளர் / கல்வி அமைச்சு, யுனிசெப் அலுவலர்கள், துணைவேந்தர்கள், பாலின நிலை ஒப்புரவு / சமத்துவம் பற்றிய நிலையியற் குழுவின அங்கத்தவர்கள், பல்கலைக்கழகங்களின் பாலின நிலை பற்றிய நிலையங்களின் பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய அதிதிகளின் பங்கேற்புடன் ஆராய்ச்சி அறிக்கையை வெளியிடுவதற்காக

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் எளிமையான வைபவமொன்று நடாத்தப்பட்டது.





17.4 2022 இல் எடுக்கப்பட்ட முயற்சிகள்

இலங்கை அரச பல்கலைக்கழகங்களில் பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பாலின நிலையை அடிப்படையாகக்கொண்ட வன்முறைகள் அதிகமாகுவதற்கான காரணங்களை இனங்கண்டுகொள்ளல் மற்றும் அவ்வாறான நிகழ்வுகளைக் குறைத்துக்கொள்வதற்கான உபாயவழிகளை முன்மொழிவதற்காக முக்கியமாக பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பாலின நிலையை அடிப்படையாகக்கொண்ட வன்முறை தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்களில் பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பாலின நிலையை அடிப்படையாகக்கொண்ட வன்முறைகள் பரவுவதற்கான பிரதான காரணம் பன்முகத்தன்மை மற்றும் சமமான அணுகல் தொடர்பான சிக்கல்களை தீர்ப்பதற்கு முடியாமை என்பது ஆய்வுகளின்போது கண்டறியப்பட்டது. அவ்வாறான கண்டறிதல்களின் அடிப்படையில் தற்போது பாலின நிலை ஒப்புரவு / சமத்துவம் பற்றிய நிலையத்தின் வளவாளர்களின் உதவியுடன் "பன்முகத்தன்மையுடன் வாழ்வதற்கு கற்றுக்கொள்ளல்" எனும் பெயரில் பாடநெறியொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடநெறியானது கீழ் குறிப்பிடப்படும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளுடன் இணையானதாக இருக்கின்றது:

இலக்கு 4: தரமான கல்வி
இலக்கு 5: பால்நிலை சமத்துவம்
இலக்கு 10: குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள்
இலக்கு 11: பேண்தகு நகரங்கள் மற்றும் சமூகங்கள்
இலக்கு 16: சமாதானம், நீதி மற்றும் உறுதியான நிறுவகங்கள்

கருத்துக்கள், பதிலளிப்புக்கள் மற்றும் அங்கீகாரத்திற்காக வரைவு பாடநெறிகள் கீழ் குறிப்பிடப்படும் மன்றங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்
2. துணைவேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்கள் குழு (CVCD)
3. பாலின நிலை பற்றிய நிலையியற் குழுவின் அங்கத்தவர்கள்
4. அரச பல்கலைக்கழகங்களின் தர உத்தரவாத அலகுகளின் பணிப்பாளர்கள்

பாடநெறிகள் அபிவிருத்தி 2022 மார்ச் மாதத்தில் நிறைவு செய்யப்பட்டது.

"பன்முகத்தன்மையுடன் வாழ்வதற்கு கற்றுக்கொள்ளல்" எனும் தலைப்பின் கீழ், இந்தப் பாடநெறியை நடாத்துவதற்கு கல்விசார் ஆளணியைப்

பயிற்றுவிப்பதற்கான பயிற்சி (ToT) நிகழ்ச்சித் திட்டங்கள் 2022 இல் கீழ் குறிப்பிடப்படும் பல்கலைக்கழகங்களில் நடாத்தப்பட்டன.

- கொழும்புப் பல்கலைக்கழகம்
- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- றுஹுணு பல்கலைக்கழகம்
- களனி பல்கலைக்கழகம்
- கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம்
- கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம்
- இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்
- இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
- இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்
- இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

பயிற்றுவிப்பதற்கான பயிற்சி (ToT) நிகழ்ச்சித் திட்டங்கள் 2023 இல் கீழ் குறிப்பிடப்படும் பல்கலைக்கழகங்களில் நடாத்தப்படும்.

- மொரட்டுவைப் பல்கலைக்கழகம்
- பேராதனைப் பல்கலைக்கழகம்
- இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
- இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம்
- இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- வவுனியா பல்கலைக்கழகம்

17.5 சர்வதேச மகளிர் தின வைபவம்

2022 சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடுமுகமாக இணையவழி வைபவமொன்று நடாத்தப்பட்டது. இந்த நிகழ்வில் பல்வேறு பல்கலைக்கழகங்களிலிருந்து 800 இற்கும் அதிகமானோர் பங்குபற்றினர்.



இந்த நிகழ்வு கீழ் குறிப்பிடப்படும் முன்னிலைப்படுத்தல்களின் பின்னர் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களை உள்ளடக்கியதாகும்.

1. பேராசிரியர் வசந்தி அரசரத்னம்/ பாலின நிலை ஒப்புரவு / சமத்துவம் பற்றிய நிலையியற் குழுவின் இணைத் தலைவர் - பல்கலைக்கழக சமூகத்தின் பாலின நிலை

2. பேராசிரியர் தீபிக்கா உடகம / பேராதனைப் பல்கலைக்கழகம் - இலங்கையின் பெண்கள் மற்றும் சட்ட வரையறை பற்றிய உரை

3. கலாநிதி பிரபா மனுரத்ன / களனிப் பல்கலைக்கழகம் - பாலின நிலை, சமூக ஆக்கப் படைப்பொன்றாக - உரை

17.6 பாலின நிலை பற்றிய உலகளாவிய மாநாடு

பாலின நிலை பற்றிய உலகளாவிய மாநாட்டினை ஏற்பாடு செய்வதற்கும் 2024 இல் அதனை நடாத்துவதற்கும் நிலையியற் குழுவினால் முன்மொழியப்பட்டது. மாநாட்டை ஏற்பாடு செய்வதற்காக உப குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அது நிலையியற் குழுவின் தன்னார்வ அங்கத்தவர்கள் மற்றும் அனைத்துப் பல்கலைக்கழகங்களின் பாலின நிலை பற்றிய நிலையங்களின் பணிப்பாளர்களை உள்ளடக்கியுள்ளது.

17.7 பாலின நிலை ஒப்புரவு / சமத்துவம் பற்றிய நிலையத்தின் ஆளணிக்கான பயிற்சியளிப்பு

பாலின நிலை ஒப்புரவு / சமத்துவம் பற்றிய நிலையத்தின் ஆளணியின் பணிப்பாளரால் அதன் ஆளணிக்கான பயிற்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது. இந்தப் பயிற்சியானது பாலின நிலை மற்றும் அசமத்துவத்தின் வேறு விதங்கள், தனிநபர் விருத்தி, தொழில்சார் முன்னேற்றம் மற்றும் நபர்களுக்கிடையில் மற்றும் சமூக திறன்கள் போன்ற துறைகள் உள்ளடக்கப்பட்டது.

18. பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதியுதவி வழங்குதல்

புலமைப்பரிசில்கள் என்பது நன்கொடையாளர்கள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) இணக்கம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் தனிநபர்கள் அல்லது அமைப்புக்களால் நிறுவப்பட்ட மற்றும் எதிர்காலத்தில் நிறுவப்படக்கூடியவை ஆகும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கல்விசார் அலுவல்கள் பிரிவு, தற்போது நிதிப் பிரிவின் மற்றும் பல்கலைக்கழக அனுமதிகள் பிரிவின் உதவியுடன் பின்வரும் புலமைப்பரிசில் திட்டங்களை ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றது

18.1 2022 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் முகாமைப்படுத்தப்படும் மற்றும் வசதிகள் வழங்கும் புலமைப்பரிசில் திட்டங்களின் தற்போதைய நிலை

புலமைப்பரிசிலின் பெயர்	மிட்சுபிசி கம்பனியின் சர்வதேச புலமைப்பரிசில்
புலமைப்பரிசிலின் காலம்	2021 செப்தெம்பர் 1 முதல் 2022 ஆகஸ்ட் 31 வரையான காலப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட புலமைப்பரிசில் தொகையை ஒரே தடவையில் செலுத்தப்படும் கொடுப்பனவாக வழங்கப்படும்.
புலமைப்பரிசில் தொகை	ஒரு புலமைப்பரிசில் பெறுநருக்கு ரூ. 59,500/- வீதம்
தகைமை அளவுகோல்கள்	கொழும்புக் பல்கலைக்கழகத்திலுள்ள நிதி முகாமைத்துவ பீடத்தில் அல்லது ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் வர்த்தக பீடத்தில் கற்கைநெறியை தொடர்வதற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்கள்
புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ள மாணவர்கள் எண்ணிக்கை	கொழும்புக் பல்கலைக்கழகம் - 15 ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் - 15

அட்டவணை 18.1.1 மிட்சுபிசி கம்பனியின் சர்வதேச புலமைப்பரிசில்

புலமைப்பரிசிலின் பெயர்	**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புலமைப்பரிசில் திட்டம்**
புலமைப்பரிசிலின் காலம்	2017/2018 கல்வியாண்டில் புலமைப்பரிசில் பெறுநர் ஒருவருக்கு ஒரு வருடத்திற்கு 10 தவணைத் தொகைகள் வீதம் செலுத்தப்படுவதுடன் இந்தத் தொகை புலமைப்பரிசில் பெறுநரின் கல்வி நடவடிக்கை காலம் பூராவும் செலுத்தப்படும்.
புலமைப்பரிசில் தொகை	புலமைப்பரிசிலின் வருடாந்த பெறுமதி ரூ. 25,000/- ஆகுமென்பதோடு புலமைப்பரிசில் பெறுநர் ஒருவருக்கு ஒரு வருடத்திற்கு 10 தவணைத் தொகைகள் வீதம் செலுத்தப்படுவதுடன் இந்தத் தொகை புலமைப்பரிசில் பெறுநரின் கல்வி நடவடிக்கை காலம் பூராவும் செலுத்தப்படும்.
தகைமை அளவுகோல்கள்	2016 பெப்ருவரி 11 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 934 ஆவது கூட்டத்தின்போது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புலமைப்பரிசிலுக்கு புள்ளிகள் வழங்கப்படும் அளவுகோல்களின் அடிப்படையில் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டது.
புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ள மாணவர்கள் எண்ணிக்கை	2017/2018 கல்வியாண்டில் பல்கலைக்கழக முறைமையில் 41 மாணவர்கள்

அட்டவணை 18.1.2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புலமைப்பரிசில் திட்டம்

புலமைப்பரிசிலின் பெயர்	**சிறந்த பல்கலைக்கழக மாணவருக்கான புலமைப்பரிசில்**
புலமைப்பரிசிலின் காலம்	2019/2020 கல்வியாண்டுடன் தொடர்பாக ஆறு புலமைப்பரிசில்கள் பல்வேறு விடயப் பரப்புக்களுக்காக தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு ஒரே தடவையில் செலுத்தப்படுகின்றது.
புலமைப்பரிசில் தொகை	ஒரே தடவையில் ரூ. 25,000/-
தகைமை அளவுகோல்கள்	க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் முதல் தடவையிலேயே கீழ் குறிப்பிடப்படும் பாடத் துறைகளில் இலங்கையில் உயர் திறமையை காண்பிக்கும் மாணவர்களுக்கு, 1. கலை 2. வர்த்தகம் 3. உயிரியல் விஞ்ஞானம் 4. பௌதிக விஞ்ஞானம் 5. பொறியியல் தொழில்நுட்பம்

நாட்டின் கல்வியின் சிறப்பான இருப்புக்காக பங்களிப்புச் செலுத்திய தேசிய புகழ்மிக்க இலங்கையர்களின் பெயர்களில் பல்வேறு பாடத்துறைகள் ஊடாக புலமைப்பரிசில் வழங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	**ஆறு (06) புலமைப்பரிசில்கள் தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.** 1. சங்கைக்குரிய ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கல தேரர் (வித்யோதய பிரிவெணாவின் ஸ்தாபகர்) - கலைப் பாடத்துறை 2. சங்கைக்குரிய ரத்மலானே ஸ்ரீ தர்மாலோக்க தேரர் (வித்யாலங்கார பிரிவெணாவின் ஸ்தாபகர்) - வர்த்தகப் பாடத்துறை 3. கலாநிதி சீ.டப்ளியு.டப்ளியு.கன்னங்கர (இலவசக் கல்வியின் தந்தை) - உயிரியல் விஞ்ஞான பாடத்துறை 4. சேர் நிக்கலஸ் ஆட்டிகல (முதலாவது இலங்கை துணைவேந்தர்) - உயிரியல் முறைமை தொழில்நுட்ப பாடத்துறை 5. திரு.லலித் அத்துலத்முதலி (மகாபொல ஸ்தாபகர்) - பௌதிக விஞ்ஞானப் பாடத்துறை 6. கலாநிதி ஸ்டேன்லி கல்பகே (ஆரம்ப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு) - பொறியியல் தொழில்நுட்ப பாடத்துறை

அட்டவணை 18.1.3. சிறந்த பல்கலைக்கழக மாணவருக்கான புலமைப்பரிசில்கள்

புலமைப்பரிசிலின் பெயர்	டப்ளியூ பீ ஹென்திரிக் அப்பு அபேதீர புலமைப்பரிசில் திட்டம்
புலமைப்பரிசிலின் காலம்	ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் தெரிவு செய்யப்படுகின்ற ஒரு மாணவருக்கு ஒரு கல்வியாண்டிற்காக ஒரு புலமைப்பரிசில் மாத்திரம் ஒரே தடவையில் செலுத்தப்படுகனிறத.
புலமைப்பரிசில் தொகை	ரூபா 1,000,000/- வைப்பொன்றின் பின்னர் அதற்காக செலுத்தப்படும் வருடாந்த வட்டியின் (நிலவும் வங்கி வட்டி வீதங்களின் அடிப்படையில்) அடிப்படையில் புலமைப்பரிசில் செலுத்தப்படுகின்றது. அது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் உச்ச வரையறைக்குட்பட்டதாகும்.

தகைமை அளவுகோல்கள்	ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து பொறியியல் கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்படும் முதல் 10 மாணவர்களிலிருந்து ஒரு மாணவரை மாத்திரம் தெரிவு செய்தல், குறித் க.பொ.த. (உயர் தர) பரீட்சையின்போது அவர்கள் பெற்றுக்கொண்ட இஸெட் புள்ளிகளுக்கமைய மற்றும் அவர்களுடைய பெற்றோரின் வருடாந்த வருமானம் என்பவற்றை குறித்த பல்கலைக்கழகத்தினால் உறுதிசெய்துகொள்ளப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்படுகின்றது.
புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ள மாணவர்கள் எண்ணிக்கை	2023 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அட்டவணை 18.1.4. டப்ளியூ பீ ஹென்திரிக் அப்பு அபேதீர புலமைப்பரிசில் திட்டம்

மேற்குறிப்பிடப்பட்ட புலமைப்பரிசில்கள் தவிர, குறித்த நிறுவனங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து உதவி கோரும்போது கீழ் குறிப்பிடப்படும் புலமைப்பரிசில்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நிதியக் கணக்குகளை பேணி வருவதில்லை.

- சுஜாதா குருகே புலமைப்பரிசில் திட்டம்
- டயலொக் தொழில்நுட்ப திறன்கள் புலமைப்பரிசில் திட்டம்

19. பல்கலைக்கழக கல்விசார் ஆளணிக்கு உயர் கல்விக்கான உதவி வழங்குதல்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கொள்கைளுக்கு அமைவாக, கல்விசார் உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதற்கென விஷேடமாக இளம் கல்வியாளர்களை தமது உயர் கல்வியினை தொடர்வதற்கும் பல்கலைக்கழக முறைமையினுள் ஆராய்ச்சிக் கலாச்சாரத்தை ஊக்குவித்து பலப்படுத்துவதற்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது ஆய்வு மற்றும் சர்வதேசக் கூட்டுத் தாபனத்தின் ஊடாக 2022 ஆம் ஆண்டில் கடும் முயற்சியினை மேற்கொண்டது. மேற்குறிப்பிட்ட இலக்கை அடைவதற்காக முன்னெடுக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு காணப்படுகின்றன;

19.1 உயர் கல்விக்காக மானியங்களை வழங்குதல்

- **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பட்டப்பின் படிப்பு மானியத் திட்டம் - 2022**

  பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் அரச பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சி திறனை பலப்படுத்துவதனூடாக விரிவுரையாளர் குழாமின் நிரந்தர உறுப்பினர்கள் தங்களுடைய தொழில் முன்னேற்றத்திற்கு தேவைப்படுகின்ற பட்டப்பின் படிப்பு தகமைகளை பெற்றுக் கொள்வதற்கு நிதிசார்ந்த உதவியினை வழங்குவதே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பட்டப்பின் படிப்பு மானியத் திட்டத்தின் நோக்கமாகும்.

உள்நாட்டு / வெளிநாட்டு கலாநிதி பட்டங்கள், மற்றும் கலாநிதிப் பட்டம் வரையான தத்துவமாணி மற்றும் அதற்கு இணையான கற்கைநெறிகளுக்கு மாத்திரமே மானியங்கள் கிடைக்கும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பட்டப்பின் படிப்பு மானியத் திட்டத்தினூடாக கலாநிதி (PhD) படிப்புகளுக்கு அதிகபட்சமாக 03 ஆண்டுகளுக்கு மட்டுமான நிதியுதவியினையும் MPhil /முதுமாணி பட்டத்திற்கு 02 ஆண்டுகளுக்கு மட்டுமான நிதியுதவிகளை வழங்குகின்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பட்டப்பின் படிப்பு மானியத் திட்டத்தின் மொத்த மானிய வரையறை நிறுவனம்சார் மற்றும் வாழக்கைச் செலவுகள் இரண்டிற்கும் ஒரு விண்ணப்பதாரிக்கு வருடமொன்றுக்கு 2 மில்லியன் இலங்கை ரூபா ஆகும். வெளிநாடுகளில் பட்டப்பின் படிப்பினை மேற்கொள்கின்ற விண்ணப்பதாரி ஒருவருக்கு வருடமொன்றுக்கான வாழ்க்கைச் செலவிற்கான அதிகபட்ச அளவு 1.5 மில்லியன் இலங்கை ரூபாய் ஆகும். தனியான விண்ணப்பதாரிக்கு பொருத்தமான அளவு மற்றும் மேலே குறிப்பிட்ட அதிகபட்ச அளவிற்குள் இருக்கும் நாட்டினை பொறுத்து வாழ்க்கைச் செலவுகள் மாறுபடும்.

2022 இல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பட்டப்பின் படிப்பு மானியத் திட்டத்தை பலப்படுத்தல் மற்றும் முறைப்படுத்துவதற்காக வழிகாட்டிகள் திருத்தியமைக்கப்பட்டன. எவ்வாறாயினும் நிப் பற்றாக்குறை காரணமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பட்டப்பின் படிப்பு மானியத் திட்டத்தின் கீழ் 2022 இல் மானிங்கள் வழங்கப்படவில்லை.

- **வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் புலமைப்பரிசில் திட்டங்கள் - 2022**

  i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு - கிறிபித் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா (GU) முழுநேர / ஒன்றிணைந்த கலாநிதி புலமைப்பரிசில் திட்டம்

  அவுஸ்திரேலியாவின் கிறிபித் பல்கலைக்கழகம் (GU) மற்றும் இலங்கையின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) ஆகியவை அறிவார்ந்த தொடர்பு, கலாச்சார பரிமாற்றம், பங்கேற்பு ஆராய்ச்சி மற்றும் பிற கல்வி ஒத்துழைப்பு ஆகியவற்றிலிருந்து பரஸ்பர நன்மைகளை பெறும் பொருட்டு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக்கொண்டன.

  அவுஸ்திரேலியாவின் கிறிபித் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கையின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் கிறிபித் பல்கலைக்கழகமானது 03 ஆண்டுகள் வரையான காலப் பகுதிக்கான முழுக் கல்விக் கட்டணத்தையும் ஏற்றுக்கொள்வதுடன், அவுஸ்திரேலியாவுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் விண்ணப்பதாரிகளுக்கு 03 ஆண்டுகளுக்காக வாழ்வாதார உதவித் தொகை மற்றும் வெளிநாட்டு மாணவர் சுகாதாரக் காப்பீட்டையும் (OSHC) வழங்கும். கிறிபித்

பல்கலைக்கழகத்தினால் ஒரு வருடத்தில் 12 சர்வதேச பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சி புலமைப்பரிசில்கள் வரை வழங்கப்படும்.

இணைந்த கலாநிதிப் பட்ட மாதிரி

அனைத்து தரப்பினரதும் இறுதி அங்கீகாரத்தின் கீழ் பின்வரும் நான்கு பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற இலங்கை பல்கலைக்கழகளில் ஏதேனும் ஒன்றில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் உதவி வழங்கப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கான இணைந்த கலாநிதிப் பட்ட நிகழ்ச்சி திட்ட ஏற்பாடுகள் ஊக்குவிக்கப்படுகின்றன :

- கொழும்புப் பல்கலைக்கழகம்
- களனிப் பல்கலைக்கழகம்
- பேராதனைப் பல்கலைக்கழகம்
- ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்

இந்த திட்டத்தின் கீழ் 2022 இல் நான்கு (04) புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

ii. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு - அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழக (QUT)இணைந்த / தனித்தனியான கலாநிதிப் பட்ட நிகழ்ச்சித் திட்டம்

அவுஸ்திரேலியா குயின்ஸ்லாந்து தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் (QUT), இலங்கையின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் (UGC) இணைந்து இலங்கையின் ஆரம்பம் முதல் இடைப் பகுதி வரையான தொழிற் கல்வியாளர்களுக்கு உயர் பட்ட ஆராய்ச்சித் திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சி பயிற்சிகளை ஆரம்பிப்பதற்காக உள்ளது. இந்த ஏற்பாட்டில் இலங்கை பல்கலைக்கழக உள்ளுர் கல்வி மேற்பார்வையாளர்களுடன் முனைவர் பட்ட மேற்பார்வை, ஆராய்ச்சிப் பயிற்சி மற்றும் பங்கீட்டு மேற்பார்வை ஆகியவற்றின்கூட்டு மாதிரியான கூட்டு ஆராய்ச்சி முயற்சிகள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

குயின்ஸ்லாந்து தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் கலாநிதிப் பட்ட விண்ணப்பதாரிகளுக்கு (03 வருடங்கள் வரை) மொத்த உதவிக் கட்டண அனுசரணையாக (அண்ணளவாக AUD 100, 000) வழங்கப்படும்.

ஒரு வருடத்திற்கு குயின்ஸ்லாந்து தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதற்கிடையில் செலவுகளை ஈடுசெய்துகொள்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மற்றும் குயின்ஸ்லாந்து தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் தகைமைகள் தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும் இலங்கை அறிஞர்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிதியுதவி வழங்கப்படும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டல்களுக்கமைய தேவைப் பிரகாரம் வாழ்வாதாரக் கொடுப்பனவு, வெளிநாட்டு மாணவர்

சுகாதாரக் காப்பீட்டையும் (OSHC) மற்றும் அதனுடன் தொடர்புடைய செலவுகள் இந்த உதவியில் உள்ளடங்கும். கொடுப்பனவுக்கான அதிகபட்ச வரையறை 03 வருடங்களுக்கு ஒரு மாணவருக்கு 3.5 மில். ரூபாவாகும்.

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பல்வேறு விடயத்துறைகளுக்காக 10-12 விண்ணப்பதாரிகள் குயின்ஸ்லாந்து தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் வளாகங்களில் குறைந்தபட்சம் 12 மாத கால கலாநிதிப் பட்டத்திற்கான கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், குயின்ஸ்லாந்து தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினூடாக கலாநிதிப் பட்டத்திற்கான மேற்பார்வை கூட்டு மாதிரிக்கு உதவி வழங்கப்படும்.

கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் இலங்கையின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு - அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் புலமைப்பரிசில் திட்டங்களின் 02 மாதிரிகள் உண்டு;

i. இணைந்த கலாநிதிப் பட்ட மாதிரி

- குயின்ஸ்லாந்து தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் (QUT) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC)- கூட்டிணைவு கலாநிதிப் பட்ட நிகழ்ச்சித் திட்டமானது கொழும்புப பல்கலைகலைக்கழகம் (CMB), பேராதனைப் பல்கலைக்கழகம் (PDN) மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் (SJP) என்பவற்றுடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்ட இணைந்த பிஎச்டி மாதிரியை உள்ளடக்குகின்றது.

- இணைந்த கலாநிதிப் பட்டப் படிப்பு மாணவர்கள் குயின்ஸ்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் குழாமின் இருவர், கொழும்பு, பேராதனை அல்லது ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களிலிருந்து விரிவுரையாளர் குழாமின் ஒருவர் மற்றும் முடியுமாயின் குறித்த தேர்வுநாடியின் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் குழாமின் ஒருவரும் இணை மேற்பார்வை செய்வார்கள்.

ii. தனியான / வெளிவாரி கலாநிதிப் பட்ட மாதிரி

தனியான கலாநிதிப் பட்ட மாணவர்கள் குயின்ஸ்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் இரண்டு கல்விசார் மேற்பார்வையாளர்களையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள ஏதாவது பல்கலைக்கழகத்திலிருந்து உள்ளூர் மேற்பார்வையாளர் ஒருவரையும் கொண்டிருப்பர்.

இந்த திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டில் இரண்டு (02) புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

iii. முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு புலமைப்பரில் திட்டம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சர்வதேச ஜப்பான் பல்கலைக்கழகத்துடன் (IJU) இணைந்து,சர்வதேச ஜப்பான் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பை முடிக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் உள்ள பல்கலைக்கழகங்களின் கல்வியாளர்கள் மற்றும் நிர்வாக ஊழியர்களின் நலன்களுக்காக இணை அனுசரணை நிதியுதவித் தொகைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. அதன்படி UGC மற்றும் IUJ யுடன் உள்ள விருப்ப கடிதத்தின் படி IUJ கல்விக் கட்டணத்தின் 50% ஐ செலுத்தும் அத்துடன் UGC மீதமுள்ள கல்விக் கட்டணத்தின் 50% யும் (இது IUJ யினால் அறிவிக்கப்படும்) 90,000 ஜப்பானிய யென்னில் மாதாந்த வாழ்க்கை உதவித்தொகையையும் செலுத்தும். கல்வி விடுமுறையில் வெளிநாடு செல்லும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் விமானப் பயணச் சீட்டை பெறுவதற்கு மானியம் பெறுவோருக்கு உரிமையுள்ளது.

19.2 வெளிநாட்டு பங்காளித் தரப்புக்களுடன் அரச பல்கலைக்கழகங்களால் ஏற்படுத்திக்கொள்ளப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoU) / ஒப்பந்தங்கள்

i. வெளிநாட்டு பங்காளித் தரப்புக்களுடன் அரச பல்கலைக்கழகங்களால் ஏற்படுத்திக்கொள்ளப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoU) / ஒப்பந்தங்களுக்கான முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல்

இது 2018.06.05 ஆம் திகதிய கடித இல.: UGC/CH/7/1, 2018.08.03 ஆம் திகதிய கடித இல.: UGC/S/PA/111, 2019.01.22 ஆம் திகதிய கடித இல.: UGC/S/PA/111 மற்றும் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட 2019.12.19 ஆம் திகதிய சுற்றிக்கை இல.: PS/SP/SB/Circular/06/2019 கொண்ட சுற்றறிக்கையுடன் சம்பந்தப்பட்டதாகும்.

அதற்கமைய, வெளிநாட்டு நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoU) / ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்வதற்கு முன்னர் ப.மா.ஆ குழுவின் பரிந்துரையுடன் நிரல் அமைச்சின் முன் அங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டுமென்று அனைத்து உப வேந்தர்களுக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பல்கலைக்கழகங்களால் ஏற்படுத்திக்கொள்ளப்படும் அனைத்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் / ஒப்பந்தங்கள் அமைச்சரவை ஊடாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென 2018.07.03 இல் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டது.

அரச பல்கலைக்கழகங்களால் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) / ஒப்பந்தங்களில் பெரும்பாலானவை எமது நாட்டுக்கு பயனுள்ளவையாக காணப்படுவதுடன் எமது கல்விசார் ஊழியர்கள்

தமது துறையிலும் உயர் கல்வியிலும் நிபுணத்துவத்தை மேம்படுத்தவும் அல்லது வெளிநாடுகளில் ஆராய்ச்சி செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகவும் புலமைப்பரிசில்கள், ஆராய்ச்சி மானியங்கள் அல்லது கற்பித்தல் வாய்ப்புகள் மூலமாக பல்கலைக்கழக அமைப்பிற்கு அதிகளவிலான நிதி வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. சிறந்த பல்கலைக்கழக தரவரிசை ஊடாக பிரதிபலிக்கப்பட்டு அறிவு மற்றும் திறனை கட்டியெழுப்புதலின் மேம்பாட்டுக்கு வழி கோலுகின்ற நற்பெயரைப் பெற்றுள்ள வெளிநாட்டு நிறுவனங்களுடன் பெரும்பாலான அரச பல்கலைக்கழகங்கள் சர்வதேச ரீதியிலான ஆழமான ஒத்துழைப்பை செயற்படுத்தி வருகின்றன. துரதிஸ்டவசமாக புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடும் போது ஒப்புதல்களை பெறுவதற்கான நீண்ட நடைமுறை காரணமாக பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் இத்தகைய நீண்ட கால ஆராய்ச்சி ஒத்துழைப்புகளை பெறுவதற்கு தவறிவிட்டன. ஒப்புதலைப் பெறுவதற்கும் கையொப்பமிடுவதற்கும் தற்போதைய நடைமுறையானது குறைந்தபட்சம் 5 முதல் 6 மாதங்கள் வரை எடுக்கும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளிநாட்டு தரப்பினர் மற்றும் அரச பல்கலைக்கழகங்களுடன் மேற்கொள்ளப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoU) / ஒப்பந்தங்களை கைச்சாத்திடும்போது ஏனைய பொருத்தமான தரப்புக்கள் / பங்காளித் தரப்புக்களுடன் ஒருங்கிணைப்பதற்கும் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதில் நிலவும் செயன்முறையை இலகுபடுத்துவதற்கும் ஆரம்பகட்ட நடடிவக்கைகளை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, தங்களால் எழுப்பப்பட்ட தேவையற்ற தாமதங்கள் சம்பந்தமான சிக்கல்களைக் கவனத்திற்கொண்டு இலங்கை அரசாங்கத்தினால்நிதிசார் அல்லது ஏனைய கடப்பாடு இன்றிய மற்றும் குறித்த கல்வி நிறுவகங்களிடையே மாத்திரம் ஒத்துழைப்பு நிலவும் இலங்கை மற்றும் வெளிநாட்டு உயர்கல்வி நிறுவகங்களுக்கிடையில் கைச்சாத்திடப்படவிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் / இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு உங்களுக்கு முடியுமென அதிமேதகு ஜனாதிபதியவர்களால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது, எனக் குறிப்பிட்டு "அரச பல்கலைக்கழகங்களினால் ஏற்படுத்திக்கொள்ளப்படவிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoU) / இணக்கப்பாடுகளில் கைச்சாத்திடுவதற்கு முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல்" என 2022 மே 27 ஆம் திகதிய, PS/M&E – 3/04/04 ஆம் இலக்க கடிதம் ஜனாதிபதியின் மேலதிக செயலாளரால் வெளியிடப்பட்டது. மேலும், மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையை அதற்கிணங்க திருத்தியமைப்பதற்கு இந்த அலுவலகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதற்கமைய, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விடயப் பரப்பின் கீழ் நிலவும் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

20. பல்கலைக்கழக ஓய்வுதிய நிதியம்

அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டதன் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பல்கலைக்கழக ஓய்வு+தியத் திட்டம் உருவாக்கப்பட்டது. அதற்கமைய 1999 செப்தெம்பர் 01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பல்கலைக்கழக முறைமையில் ஊழியர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்றாக பல்கலைக்கழக ஓய்வூதிய முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் நிருவாகம், பொதுவாக பயன்படுத்தப்படும் அரச நிதி முகாமைத்துவ வரையறைக்கு மேலதிகமாக முதலீட்டுக் குழு, மேற்பார்வை சபை மற்றும் ஆணைக்குழுவினால் பலப்படுத்தப்பட்டுள்ளது.

20 வருடங்கள் அல்லது அதனிலும் அதிக காலம் பணயாற்றியுள்ள மற்றும் கட்டாய ஓய்வு பெறும் வயது வரை பணியாற்றிய ஊழியர்கள், வாழ்நாள் பூராவும் மாதாந்த ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்கின்றனர். ஓய்வூதியம் பெறுபவர் மரணித்தால் ஓய்வூதியத்தின் 50% விதவைகள் / தபுதாரருக்கு செலுத்தப்படுவதுடன் அடுத்த 50% இனை சமமாகப் பிரித்து பிள்ளைகளுக்கு 18 வயது வரை செலுத்தப்படும். 20 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்யாத ஊழியரின் ஓய்வூதியத் தொகை மற்றும் வட்டியை அவர் ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் மீளச் செலுத்தப்படும்.


20.1. பிரதான நிதிசார் தகவல்கள்

		2018	2019	2020	2021	2022
1	உறுப்பினர்கள்					
	செயற்படும் உறுப்பினர்கள்	13,945	14,922	15,211	16,062	16,191
	செயற்படாத உறுப்பினர்கள்	1,928	2,025	2,023	2,139	2,420
	மொத்த உறுப்பினர்கள்	15,873	16,947	17,234	18,201	18,611
2	மொத்த உறுப்புரிமை	19,733	21,275	21,951	23,449	24,467
3	ஓய்வூதியம் பெறும் உறுப்பினர்கள் எண்	279	314	351	402	449
4	மொத்த தொகை மீளப்பெற்ற உறுப்பினர் எண்	965	1,082	1,186	1 ,287	1,469
3	நிதியத்தின் மீதி (ரூ.மில்லியன்)					
	பங்களிப்பாளர் நிதி	8,722	10,906	13,473	16,238	19,559
	ஓய்வூதிய நிதியம் மற்றும் ஒதுக்கீடு	744	815	855	914	1,189
	மொத்த நிதியம் (ரூ.மி.)	9,466	11,721	14,328	17,152	20,748
	நிதியத்தின் வளர்ச்சி %	22%	24%	22%	19.71%	21%
4	மொத்த முதலீடு (ரூ.மில்லியன்)	9,078	11,060	13,347	15,967	19,059
5	மொத்த முதலீட்டு வருமானம் (ரூ.மில்.)	924	1,168	1,333	1,444	2,300


		2018	2019	2020	2021	2022
6	வருமான வரி (ரூ.மில்)	138	166	190	206	320
7	முதலீடு மீதான அனுகூலம் (%)	10.18%	10.56%	9.98%	9.05%	12.07%
8	உறுப்பினர்களுக்கான வட்டி	10%	10%	9.6%	8.4%	10%
9	ஓய்வூதியக் கொடுப்பனவு (ரூ.மில்)	58	75	93	107	145
10	ஓய்வூதியக் கொடுப்பனவின் வளர்ச்சி%	14%	29%	24%	15%	21%
11	நிலையான வைப்புக்கள், திறைசேரி பிணைப் பத்திரங்கள், கடன்களின் 05 வருட சாதாரண வ்டி வீதம் (வரிகளின் பின்னரான)	-	-	-	-	9.57%

அட்டவணை 20.1 ஓய்வூதிய நிதியத்தின் பிரதான நிதிசார் தகவல்கள்


2018 முதல் 2022 வரையான காலப் பகுதியில் நிதியத்தின் வளர்ச்சி




2018 முதல் 2022 வரையான காலப் பகுதியில் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு



2022.12.31 ஆம் திகதியன்று மொத்த முதலீடு







20.2 2022.12.31 ஆம் திகதியன்று முதலீடுகள் பற்றிய பொழிப்பு - பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்

	2021/12/31		2022/12/31	
	முதிர்சியின் போது பெறுமதி (மி.ரூ.)	பங்கு (%)	முதிர்சியின் போது பெறுமதி (மி.ரூ.)	பங்கு (%)
திறைசேரி பிணைப் பத்திரம் / திறைசேரி உண்டியல்	7,112.14	44.54	11,899.45	59.51
நிலையான வைப்புக்கள்	4,911.36	30.76	3,830.00	19.16
கடன்	3,900.00	24.42	4,230.00	21.16
குறுகிய கால மற்றும் இரவு நேர	43.95	0.28	34.73	0.17
மொத்தம்	**15,967.45**	**100.00**	**19,994 .18**	**100.00**

அட்டவணை 20.2 2022.12.31 ஆம் திகதியன்று முதலீடுகள் பற்றிய பொழிப்பு - பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்





20.3 ஓய்வூதிய நிதியத்தினால் வெளியிடப்பட்ட வீதங்கள்

	காலம்	ஓய்வூதிய நிதியத்தினால் வெளியிடப்பட்ட வீதங்கள் (வரிகளின் பின்னரான) (%)	கடந்த 05 வருடங்களுக்கான சாதாரண வட்டி (வரிகளின் பின்னரான)
2018	ஜனவரி - திசெம்பர்	10.00%	8.58%
2019	ஜனவரி - யூன்	10.30%	8.34%
	யூலை - திசெம்பர்	10.00%	
2020	ஜனவரி - யூன்	10.00%	8.51%
	யூலை - திசெம்பர்	9.60%	
2021	ஜனவரி - திசெம்பர்	8.40%	8.25%
2022	ஜனவரி - யூன்	9.00%	7.58%
	யூலை - திசெம்பர்	10.00%	

அட்டவணை 20.3 ஓய்வூதிய நிதியத்தினால் வெளியிடப்பட்ட வீதங்கள்

மூலம்:

- https://www.cbsl.lk/eResearch/Modules/RD/SearchPages/CMB_LendingAndDeposit.aspx.
- https://www.cbsl.lk/eResearch/Modules/RD/SearchPages/Indicators_GovernmentSecurities.aspx

21. பல்கலைக்கழக சேமலாப நிதியம்


1966 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க உயர்கல்வி சட்டத்தின் கீழ் "பல்கலைக்கழக சேமலாப நிதியம்" நிறுவப்பட்டதுடன் ஒவ்வொரு பல்கலைக்கழமும் தமது ஊழியர்களுக்காக தனித் தனியாக சேமலாப நிதியத்தை பேணி வந்தன. 1972 இல் 1972 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தினூடாக "பல்கலைக்கழக சேமலாப நிதியம்" மையப்படுத்தப்பட்டது. அதற்கமைய, மூதவையினால் ஒருங்கிணைக்கப்பட்ட "பல்கலைக்கழக சேமலாப நிதியம்" பேணி வரப்பட்டது. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 1978 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டதுடன் அதற்கமைய "பல்கலைக்கழக சேமலாப நிதியம்" நிறுவப்பட்டது.


21.1 நிதிக் கூற்றுக்களின் பொழிப்பு - பல்கலைக்கழக சேமலாப நிதியம்


	திகதியன்று	2018	2019	2020	2021	2022
1.	**அங்கத்தவர்கள்**					
	செயற்பாட்டு அங்கத்துவக் கணக்கு	திசெ.31	21,363	22,172	22,318	23,046	23,349
	செயற்பாடற்ற அங்கத்துவக் கணக்கு	திசெ.31	20,690	21,866	22,980	24,498	24,784
2.	**மீளச் செலுத்தல்**					
	மீளச் செலுத்திய எண்ணிக்கை	திசெ.31	2,798	3,143	2,717	2,872	3,771
	மீளச் செலுத்திய தொகை (மி.ரூ.)	திசெ.31	2,141	2,456	2,712	3,293	3,746
3.	நிதியத்தின் மீதி (மி.ரூ.)	திசெ.31	42,254	48,729	56,059	63,026	71,096
4.	கடன் நிலுவை (மி.ரூ.)	திசெ.31	6,304	7,047	7,432	7,715	10,825
5.	பொதுவான இருப்பு (மி.ரூ.)	திசெ.31	6	121	65	145	695
7.	ஆண்டினுள் வழங்கப்பட்ட கடன் (மி.ரூ.)	திசெ.31	1,963	1,897	1,471	1,678	4,505
8.	மொத்த முதலீடு (மி.ரூ.)	திசெ.31	34,651	38,275	45,585	51,991	56,441
9.9.	முதலீட்டு வருமானம் (மி.ரூ.)	திசெ.31	3,653	4,393	4,741	4,932	7,004
10.	வருமான வர (மி.ரூ.)	திசெ.31	690	622	674	703	983
11.	முதலீடு மீதான அனுகூலம் (வரிக்கு முன்னரான)	திசெ.31	10.54%	11.48%	10.40%	9.49%	12.41%
12.	வட்டி - ஆரம்ப மீதிக்காக	ஜன.01	10.00%	10.00%	9.60%	8.40%	10.00%
13.	நிலையான வைப்புக்கள், திறைசேரி பிணைப் பத்திரங்கள், கடன்களின் 05 வருட சாதாரண வ்டி வீதம் (வரிகளின் பின்னரான)	ஜன.01	-	-	-	-	9.57%


அட்டவணை 21.1 நிதிக் கூற்றுக்களின் பொழிப்பு - பல்கலைக்கழக சேமலாப நிதியம்


குறிப்பு I - 2022 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக சேமலாப நிதியம் பற்றி தெளிவொன்றை வழங்குவதற்காக அங்கத்தவர்கள் பற்றிய தகவல் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய ஒப்பீட்டு ரீதியிலான தரவுகள் மீளக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய, 2018 முதல் 2021 வரை ஒப்பீட்டு ரீதியிலான தரவுகள் மீளக் குறிப்பிடப்பட்டுள்ளது.






பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் மொத்த வருடாந்த முதலீட்டு வருமானம் (2018 - 2022)
மில்.ரூபா
8,000.0
7,000.0
6,000.0
5,000.0
4,000.0
3,000.0
2,000.0
1,000.0
-
2018
2019
2020
2021
2022
மொத்த முதலீட்டு வருமானம்



2022 திசெ. 31 ஆம் திகதியன்று முதலீடுகள் பற்றிய விபரம்
0.53% குறுகிய கால மற்றும் இரவு நேர
32.46% கடன்
48.17% திறைசேரி பிணைப் பத்திரங்கள்
18.84% நிலையான வைப்புக்கள்


பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் வருமானம் பறறிய விபரம்
ஏனைய
0.81%
கடன் வருமானம் 33.76%
திறைசேரிப் பிணைப் பத்திரம் 42.31%
நிலையான வைப்புக்கள் 23.13%

21.2 2022.12.31 ஆம் திகதியன்று முதலீடுகளின் பொழிப்பு - பல்கலைக்கழக சேமலாப நிதியம்

	2021/12/31		2022/12/31	
	முதிர்சியின் போது பெறுமதி (மி.ரூ.)	பங்கு (%)	முதிர்சியின் போது பெறுமதி (மி.ரூ.)	பங்கு (%)
திறைசேரி பிணைப் பத்திரம் /திறைசேரி உண்டியல்	18,163.83	34.31	27,412.43	48.17
நிலையான வைப்புக்கள்	16,394.88	30.97	10,720.00	18.84
கடன்	18,300.00	34.57	18,470.00	32.46
குறுகிய கால மற்றும் இரவு நேர	74.15	0.14	300.06	0.53
மொத்தம்	**52,932.86**	**100.00**	**56,902.49**	**100.00**

அட்டவணை 21.2 2022.12.31 ஆம் திகதியன்று முதலீடுகளின் பொழிப்பு - பல்கலைக்கழக சேமலாப நிதியம்



21.3 நிலையான வைப்புக்கள், திறைசேரிப் பிணைப் பத்திரங்கள் / உண்டியல்கள் மற்றும் கடன்களின் 05 வருட சாதாரண வட்டி வீதங்கள்

வருடம்	காலம்	பல்கலைக்கழக சேமலாப நிதியத்தினால் வெளியிடப்பட்ட வீதங்கள் (வரிகளின் பின்னரான) (%)	கடந்த 05 வருடங்களுக்கான பிரதான முதலீட்டு நடவடிக்கைகளின் சாதாரண வட்டி (வரிகளின் பின்னரான)
2018	ஜனவரி - திசெம்பர்	10.00%	8.58%
2019	ஜனவரி - யூன்	10.30%	8.34%
	யூலை - திசெம்பர்	10.00%	
2020	ஜனவரி - யூன்	10.00%	8.51%
	யூலை - திசெம்பர்	9.60%	
2021	ஜனவரி - திசெம்பர்	8.40%	8.25%
2022	ஜனவரி - யூன்	9.00%	7.58%
	யூலை - திசெம்பர்	10.00%	

அட்டவணை 21.3 நிலையான வைப்புக்கள், திறைசேரிப் பிணைப் பத்திரங்கள் / உண்டியல்கள் மற்றும் கடன்களின் 05 வருட சாதாரண வட்டி வீதங்கள்

22. 2022 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஆணைக்குழு சுற்றறிக்கைகள் மற்றும் தாபன சுற்றறிக்கைக் கடிதங்கள்

திருத்தப்பட்ட 1978ம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கமைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு குறித்த அரசாங்க அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்ட கட்டளைகளுடன் மீளாய்வுக் காலப் பகுதியினுள் ப.மா.ஆணைக்குழுவின் மற்றும் உயர்கல்விசார் நிறுவனங்களின் இலகு செயற்பாட்டிற்காக ஆணைக்குழுவின் தீர்மானங்கள் மற்றும் கொள்கைகள் தொடர்பாக அறிவுறுத்தல்களையும் அவசியமான வழிகாட்டல்களையும் வழங்குவதற்காக ப.மா.ஆ.குழுவினால் 18 ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் மற்றும் 13 தாபன சுற்றறிக்கை கடிதங்களை வெளியிடப்பட்டுள்ளது.

22.1. ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள்

இல.	சுற்றறிக்கை இல.	விடயம்	சுற்றறிக்கையின் திகதி
01	01/2022	பல்கலைக்கழக நூலகங்களில் இருப்புக்கள் சரிபார்ப்பு செயல்முறை	03.01.2022
02	02/2022	வர்த்தக கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களில் உள்ள ஊழியர்களுக்கு மாதாந்த உதவித் தொகையாக ரூ. 5000/- வழங்குதல்.	21.01.2022
03	03/2022	பல்கலைக்கழக சேமலாப நிதியம் (UPF) மற்றும் பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியங்களின் (UPS) பங்களிப்புத் தொகைகளை மீளப் பெறுதல்	07.02.2022
04	04/2022	அரச துறை இணை சுகாதார அறிவியலுக்கான பக்கவாட்டு நுழைவுக்கான பொதுவான அளவுகோல்கள்	08.02.2022
05	05/2022	தொழில்நுட்ப அலுவலர் (ICT), தொழில்நுட்ப அலுவலர் (சிவில்), தொழில்நுட்ப அலுவலர் (மின்சாரம்), தொழில்நுட்ப அலுவலர் (இயந்திரவியல்), தொழில்நுட்ப அலுவலர் (இரசாயனம்) மற்றும் தொழில்நுட்ப அலுவலர் (செவிப்புல கட்புல) பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள்	22.02.2022
06	06/2022	சிரேஷ்ட பேராசிரியர் பதவிக்கான தேர்வுக் குழுவின் அமைப்பு	28.02.2022
07	07/2022	பல்கலைக்கழக முறைமையில் விரிவுரையாளர்களைத் தவிர மற்ற ஊழியர்களின் ஓய்வு வயது	31.03.2022
08	18/2016 (i)	விரிவுரையாளர்களுக்கான கற்கை விடுமுறை	22.04.2022
09	08/2022	சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II மற்றும் தரம் I - (மருத்துவம்/ பல் மருத்துவம்) பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டங்களில் திருத்தம் மேற்கொள்ளல்	04.05.2022

இல.	சுற்றறிக்கை இல.	விடயம்	சுற்றறிக்கையின் திகதி
10	09/2022	நிலையான சொத்துக்களின் தேய்மானத்திற்கான ஏற்பாடுகள்	05.05.2022
11	10/2022	நிறுவகமொன்றின் பணிப்பாளர் பதவிக்கான நியமனம்	23.05.2022
12	11/2022	வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் வெளிநாட்டில் உள்ள இலங்கை தூதரகங்களில் பணியாற்றுவதற்கு அல்லது வெளிநாட்டில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு கடமைக்காக அனுப்பப்பட்ட ஒரு அரசாங்க / பகுதி அரசு ஊழியரின் மனைவியுடன் சேர்ந்து வாழ்வதற்காக ஊழியர்களுக்கு சம்பளமற்ற விடுமுறையை வழங்குதல்.	23.06.2022
13	12/2022	பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கக் குழுக்களினால் வணிகப் பங்காளர்களைத் தெரிவு செய்தல் மற்றும் AHEAD செயற்பாடு	12.07.2022
14	13/2022	பல்கலைக்கழக முறைமையில் ஆசிரியர்களைத் தவிர மற்ற ஊழியர்களின் ஓய்வு வயது	16.09.2022
15	14/2022	உயர் கல்வி நிறுவகங்கள்/ நிறுவகங்களில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் திறந்த மற்றும் நியாயமான உள்வாங்குதல் கொள்கை	04.10.2022
16	15/2022	பிரதிச் செயலாளர் / பிரதிப் பதிவாளர் மற்றும் பிரதிக் கணக்காளர்/ பிரதி நிதி நிர்வாகி / பிரதி உள்ளக கணக்காய்வாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டங்கள்	01.11.2022
17	16/2022	முழுப் பதவிக் காலத்தை நிறைவு செய்யும் துணைவேந்தர்களுக்கு மூன்று மாத விடுமுறை	13.12.2022
18	17/2022	கணக்காய்வு உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு திட்டம்	22.12.2022

அட்டவணை 22.1 2022 இல் வெளியிடப்பட்ட ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள்

22.2 தாபன சுற்றறிக்கைகள்

இல.	சுற்றறிக்கை இல.	விடயம்	சுற்றறிக்கையின் திகதி
01	06/2021 (i)	விரிவுரையாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு ஓய்வு விடுமுறை வழங்குதல்	03.01.2022
02	01/2022	2022 ரமழான் (ரம்சான்) காலத்தில் விசேட விடுமுறை வழங்குதல்	01.04.2022
03	02/2022	கற்கை விடுமுறை அல்லது நிதி வழங்கப்பட்ட பட்டப்பின் படிப்பின் அடிப்படையில் கல்விசார் ஆளணியை உறுதிப்படுத்தல் /பதவி உயர்த்தல்	04.05.2022
04	03/2022	அரச சேவையின் பதவிகளில் பணியாற்றுவதற்கு /கடமைகளில் ஈடுபடுவதற்கு அலுவலர்களை நியமித்தல் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு பெற்ற அலுவலர்களை மீள சேவையில் அமர்த்தல்	10.06.2022
05	04/2022	அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் அரச கம்பனிகளுக்கு அலுவலர்களை அழைத்தலை வரையறுத்தல்	24.06.2022
06	05/2014 (iii)	ஆராய்ச்சிக் கொடுப்பனவு செலுத்தல்	29.06.2022
07	05/2022	அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் அரச கம்பனிகளுக்கு அலுவலர்களை அழைத்தலை வரையறுத்தல்	25.07.2022
08	06/2022	முழுப் பதவிக் காலத்தை நிறைவு செய்யும் துணைவேந்தர்களுக்கு மூன்று மாத விடுமுறை	01.08.2022
09	07/2022	அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் அரச கம்பனிகளுக்கு அலுவலர்களை அழைத்தலை வரையறுத்தல்	08.08.2022
10	08/2022	அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் அரச கம்பனிகளுக்கு அலுவலர்களை அழைத்தலை வரையறுத்தல்	24.08.2022
11	09/2022	சேவை மூப்புக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் அரச நிறுவனங்களின் அலுவலர்களுக்கு நாட்டுக்கு வெளியே செல்வதற்கு சம்பளமற்ற விடுமுறையை வழங்குதல்	25.08.2022

இல.	சுற்றறிக்கை இல.	விடயம்	சுற்றறிக்கையின் திகதி
12	10/2022	பரீட்சைகளில் தோற்றுவதற்காக ஊழியர்களுக்கு சம்பளத்துடனான விடுமுறை வழங்குதல்	16.11.2022
13	11/2022	30/2022 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையை ஏற்புடையதாக்கிக்கொள்ளல் - 2023 ஆம் ஆண்டின் கடமைகளை ஆரம்பித்தல்	22.12.2022

அட்டவணை 22.2 - 2022 இல் வெளியிடப்பட்ட தாபன சுற்றறிக்கைகள்

23. மாணவர் அலுவல்கள் மற்றும் நலனோம்புகை பிரிவு

2022.11.17 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 1090 ஆம் கூட்டத்தின்போது மாணவர் அலுவல்கள் / குறைகளை கையாள்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் தனியான பிரிவொன்றை நிறுவுவதற்கான தேவைப்பாட்டை இனங்கண்டு அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு ''மாணவர் அலுவல்கள் மற்றும் நலனோம்புகை பிரிவு'' எனும் பெயரில் புதிய பிரிவொன்றை உருவாக்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

24. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

2022.11.17 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 1090 ஆம் கூட்டத்தின்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் ''ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு'' எனும் பெயரில் புதிய பிரிவொன்றை உருவாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள்

நிதி நிலைமைக் கூற்று

2022 டிசம்பர் 31 திகதியன்று

	குறிப்புக்கள்	2022 ரூ.	2021 மீள வெளியிடப்பட்ட ரூ.
சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்துக்கள்			
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	**04**	344,503,883	393,419,453
பெறப்பட வேண்டிய கணக்குகள்	**05**	80,934,531	77,890,969
இருப்புக்கள்		14,225,056	11,957,389
முன்னோக்கிய கொடுப்பனவுகள்/வைப்புக்கள்	**06**	7,627,570	7,859,778
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**447,291,039**	**491,127,589**
நடைமுறையல்லாத சொத்துக்கள்			
உட்கட்டமைப்பு, பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்	**07**	137,241,384	166,660,926
காணிகள் மற்றும் கட்டிடங்கள்	**07**	581,319,302	591,988,833
புலப்படாச் சொத்துக்கள் - கணனி மென்பொருள்	**08**	6,721,075	10,342,433
மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள் - கணனி மென்பொருள்	**09**	1,413,500	1,413,500
முதலீடுகள்	**10**	54,146,873	53,094,860
பிணை முறிகள் மிகை மதிப்பு	**11**	3,572,735	4,139,060
அன்பளிப்புக்கள்/புலமைப்பரிசில் நிதிய முதலீடு	**12**	39,722,417	38,689,500
மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்		**824,137,287**	**866,329,113**
மொத்தச் சொத்துக்கள்		**1,271,428,326**	**1,357,456,702**
பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்			
நடைமுறைப் பொறுப்புக்கள்			
செலுத்த வேண்டிய கணக்குகள்	**13**	405,561,607	171,597,373
முற்பணமாக கிடைத்த கொடுப்பனவுகள்/வைப்புக்கள்	**14**	32,854,887	36,384,939
செலவிடப்படாத மூலதன அளிப்புக்கள் - ஏனையவை	**15**	40,956,121	80,600,195
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		479,372,616	288,582,507

2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று

2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று

	குறிப்புக்கள்	2022 ரூ.	2021 மீள வெளியிடப்பட்ட ரூ.
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்			
ஓய்வூதிய அனுகூலங்களுக்கான ஒதுக்கீடுகள்	**16**	96,195,231	89,544,559
அன்பளிப்புக்கள் நிதியம்	**17**	41,789,019	40,603,952
மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்கள்		137,984,250	130,148,511
மொத்தப் பொறுப்புக்கள்		617,356,866	418,731,018
தேறிய சொத்துக்கள்		**654,071,460**	**938,725,684**
பல்கலைக்கழக நிதியம் மற்றும் ஒதுக்குகள்			
விசேட நிதியங்கள்	**18**	2,002,844	1,795,825
செலவிடப்படாத மூலதன அளிப்புக்கள்- UGC	**15**	12,728,859	-
ஆளணி மேம்பாட்டு நிதியம்		25,233,454	25,233,454
UGC அபிவிருத்தி நிதியம்		36,154,376	36,154,376
மீள்மதிப்பீட்டு உபரி - நிலம் மற்றும் கட்டடம்		509,313,767	509,313,767
மீள்மதிப்பீட்டு உபரி - மோட்டார் வாகனம்		44,903,164	44,903,164
திரட்டிய மேலதிகம் / (குறைவு)		23,734,997	321,325,097
மொத்த தேறிய சொத்துக்கள் / பங்குகள்		**654,071,460**	**938,725,684**

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பொறுப்புடையவர்களாக இருக்கின்றனர். இந்த நிதிக் கூற்றுக்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அங்கீகரித்துள்ளதுடன் ஆணைக்குழு சார்பில் கையொப்பமிட்டுள்ளனர்.

ஆர்.ஏ.யூ.ரணவீர
கணக்காளர்

சிரே.பேரா.சம்பத் அமரதுங்க
தலைவர்

பேரா.ஏ.கே.டபிள்யூ.ஜெயவர்த்தன
ஆணைக்குழு உறுப்பினர்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

	குறிப்புக்கள்	2022 ரூ.	2021 மீள வெளியிடப்பட்ட ரூ.
தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்			
மேலதிகம் / (குறைவு)		(282,613,533)	47,293,185
தேய்மானம்		59,023,671	43,492,802
அபிவிருத்தி நிதியத்திற்கு மாற்றல்		(14,976,567)	(9,518,666)
பெறுமானத்தேய்வு			
பணிக்கொடைக்கான ஒதுக்கீடு		12,743,561	(7,877,502)
புறத்தொதுக்குதல் இலாபம்		-	(11,096,164)
SLPSAS 11 இற்கான சீர்படுத்தல்கள்		-	(190,324,193)
தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்		**(225,822,868)**	**(128,030,538)**
தொழிற்பாட்டு மூலதனத்தில் மாற்றங்கள்			
இருப்புக்கள் (அதிகரிப்பு) / குறைவு		(2,267,666)	(493,942)
கொடுப்பனவுகள் (அதிகரிப்பு) / குறைவு		190,790,109	39,325,127
பணிக்கொடைக்கான வட்டி		3,568,817	3,569,217
முற் கொடுப்பனவுகள் / வைப்புக்கள் (அதிகரிப்பு) / குறைவு		232,208	(5,033,942)
பெறுவனவுகள் (அதிகரிப்பு) / குறைவு		(3,043,563)	6,461,986
பணிக்கொடை கொடுப்பனவுகள்		(9,095,381)	(5,848,436)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்		**(45,638,345)**	**(90,050,528)**
முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல			
சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு		(15,313,240)	(41,046,328)
நிலையான வைப்புக்கள் / திறைசேரிப் பிணைப்பத்திரங்களில் முதலீடு		(2,084,930)	(5,295,445)
மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள் (அதிகரிப்பு) / குறைவு		-	10,858,250
முதலீட்டு செயற்பாடுகளில் பயன்படுத்திய தேறிய காசு		**(17,398,170)**	**(35,483,523)**

	குறிப்புக்கள்	2022 ரூ.	2021 மீள வெளியிடப்பட்ட ரூ.
நிதிசார் செயற்பாடுகள் மூலமான காசுப் பாய்ச்சல்			
குறிப்பிட்ட செயற்பாடுகளுக்காகப் பெறப்பட்ட நிதி		207,019	86,985
கையகப்படுத்தல்கள் மற்றும் புனரமைப்புக்களுக்காக பெறப்பட்டுள்ள அரசாங்க அளிப்புக்கள்		12,728,859	
புலமைப் பரிசில் நிதியப் பெறுவனவுகள் / (கொடுப்பனவுகள்)		1,185,067	1,689,038
ஆளணி மேம்பாட்டு நிதியத்தின் (குறைவு) / அதிகரிப்பு		-	(168,783)
முதலீட்டு செயற்பாடுகளுக்காக பயன்படுத்திய தேறிய காசு		**14,120,945**	**1,607,241**
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் அதிகரிப்பு / (குறைவு)		(48,915,570)	(123,926,810)
ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவை		393,419,453	517,346,263
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை		**344,503,883**	**393,419,453**
2022/12/31 ஆம் திகதியன்று குறிப்புக்கள் - வங்கி மீதி			
UGC A/C 2323284 - இலங்கை வங்கி		(6,169,223)	(56,924,186)
இலங்கை வங்கி - பல்கலைக்கழக புலமைப் பரிசில் நிதியம்		8,257,368	6,027,364
நள்ளிரவு வைப்புக்கள்		275,000,000	444,000,000
நிதிய முகாமைத்துவக் கணக்கு		66,554,588	-
மக்கள் வங்கி - சேகரிப்புக் கணக்கு		861,150	316,275
மொத்தம்		**344,503,883**	**393,419,453**

காசுப் பாய்ச்சல் கூற்று

2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான பங்கு உரிமை மாற்றம் பற்றிய கூற்று

விபரம்	தக்கவைக்கப்பட்ட உபரி/ (குறைவு)	UGC அபிவிருத்தி நிதியம்	மீள்மதிப்பீட்டு மேலதிகம்	மீள்மதிப்பீட்டு மேலதிகம் மோட்டார் வாகனம	ஆளணி மேம்பாட்டு நிதியம்	செலவிடப்படாத மூலதன அளிப்பு - UGC	மொத்த தேறிய சொத்துப் பங்குகள்
2021 ஜனவர 1 ஆம் திகதியன்று மீதி	**61,547,695**	**36,154,376**	**509,313,767**	-	**25,402,237**		**632,418,075**
முன்னைய ஆண்டின் சீர்படுத்தல்கள்	(321,309)	-	-	-	-		**(321,309)**
பெறப்பட்ட அரசாங்க மானியம்	-	-	-	-	-	46,500,000	46,500,000
KS 5078 இலக்க வாகனத்தின் மீள் மதிப்பீடு	-	-	-	3,528,164	-		**3,528,164**
CAF6096 இலக்க வாகனத்தின் மீள் மதிப்பீடு	-	-	-	32,000,000	-		**32,000,000**
CAF 6096 இலக்க வாகனத்தை புறத்தொதுக்கியமையின் காரணமாக மீள் மதிப்பீட்டு மேலதிகத்தை நீக்குதல்	32,000,000	-	-	(32,000,000)	-		-
UGC இன் இருப்பு மோட்டார் வாகனங்களின் மீள் மதிப்பீடு	-	-	-	41,375,000	-		**41,375,000**
ஆண்டின் மேலதிகம் / பற்றாக்குறை	47,293,185	-	-	-	-		**47,293,185**
ஆளணி அபிவிருத்தி நிதியத்திற்கு நிதி மாற்றல்	(9,518,666)	-	-	-	9,518,666		-
முதல் தடவையாக SLPSAS 11 பதிலீடு தொடர்பான சீர்படுத்தல்கள்	190,324,193	-	-	-	-		**190,324,193**
முதலீடுகளுக்கான வட்டி	-	-	-	-	2,205,946		**2,205,946**
ஆண்டின் மூலதன செலவுகள்	-	-	-	-	-	(46,500,000)	(46,500,000)
ஆளணி மேம்பாட்டு நிதியம் தொடர்பான செலவுகள்	-	-	-	-	(11,893,395)		**(11,893,395)**
2021 திசெம்பர் 31 திகதியன்று மீதி	**321,325,097**	**36,154,376**	**509,313,767**	**44,903,164**	**25,233,454**		**936,929,859**
ஆண்டின் மேலதிகம் / பற்றாக்குறை	(282,613,533)	-	-	-	-		**(282,613,533)**
கிடைத்த அரசாங்க உதவி	-	-	-	-	-	26,000,000	26,000,000
முதலீடுகளுக்கான வட்டி	-	-	-	-	678,892		**678,892**
ஆளணி மேம்பாட்டு நிதியத்தின் செலவுகள்	-	-	-	-	(15,655,459)		**(15,655,459)**
ஆண்டின் மூலதன செலவுகள்	-	-	-	-	-	(13,271,141)	(13,271,141)
ஆளணி அபிவிருத்தி நிதியத்திற்கு நிதி மாற்றல்	(14,976,567)	-	-	-	14,976,567		-
2022 திசெம்பர் 31 திகதியன்று மீதி	**23,734,997**	**36,154,376**	**509,313,767**	**44,903,164**	**25,233,454**	**12,728,859**	**652,068,617**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள்

2022 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

	குறிப்புக்கள்	2022 ரூ.	2021 மீள வெளியிடப்பட்ட ரூ.
வருமானம்			
பரிவர்த்தனை அல்லாத கொடுக்கல்வாங்கல் மூலமான வருமானம் - நடைமுறை			
அரசாங்க மானியம் - மீண்டெழும்	**19**	2,372,945,200	2,622,707,703
		2,372,945,200	2,622,707,703
பரிவர்த்தனை கொடுக்கல்வாங்கல் மூலமான வருமானம் - நடைமுறை			
ஏனைய வருமானங்கள்	**20**	36,901,756	51,718,903
		36,901,756	51,718,903
மொத்த வருமானம் நடைமுறை		**2,409,846,956**	**2,674,426,606**
பரிவர்த்தனை அல்லாத கொடுக்கல்வாங்கல் மூலமான வருமானம் - மூலதனம்			
மூலதன அளிப்புக்கள்	**21**	537,854,905	1,286,241,483
மொத்த மூலதன வருமானம்		**537,854,905**	**1,286,241,483**
மொத்த வருமானம்		**2,947,701,861**	**3,960,668,089**
செயற்பாட்டு செலவுகள் - நடைமுறை			
ஆளுக்கான வேதனாதிகள்	**22**	343,894,679	312,709,418
பயன்படுத்திய வழங்கல்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள்	**23**	131,562,968	122,583,270
படிகள் மற்றும் ஏனைய இடமாற்றல் கொடுப்பனவுகள்	**24**	2,037,249,423	2,129,523,787
ஏனைய மீண்டெழும் செலவுகள்	**25**	136,042,988	59,887,472
		2,648,750,058	2,624,730,947
செயற்பாடல்லாத செலவுகள் - மூலதனம்			
மானிட மூலதன மேம்பாடு	**26.1**	117,930,161	225,920,985
வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள்	**26.2**	403,713,913	1,008,286,087
மீண்டெழும் செலவுகள்	**26.3**	897,591	10,971,083
தேய்மானம் மற்றும் பெறுமானத் தேய்வு	**26.4**	59,023,671	43,492,802
		581,565,336	1,288,670,957
மொத்த செலவுகள்		**3,230,315,394**	**3,913,374,904**
காலப் பகுதிக்கான மொத்த மேலதிகம் /(குறைபாடு)		**(282,613,533)**	**47,293,185**

காலப் பகுதிக்கான நடைமுறை மற்றும் மூலதன மேலதிகம் / (குறைபாடு) உள்ளடக்கப்பட்ட காலப் பகுதிக்கான மொத்த மேலதிகம்/ (குறைபாடு) கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

காலப் பகுதிக்கான நடைமுறை மேலதிகம்/ (குறைபாடு)	(238,903,102)	49,722,659
காலப் பகுதிக்கான மூலதன மேலதிகம் / (குறைபாடு)	(43,710,431)	(2,429,474)
	(282,613,533)	**47,293,185**

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள இந்த நிதிக் கூற்றுக்களில் கட்டாய அங்கமாகும்.

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இலக்கம் : HED/A/UGC/FA/2022 2023 மே 31 ஆம் திகதி

தவிசாளர்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 ஆம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேற்குறிப்பிடப்பட்ட அறிக்கை இத்துடன் அனுப்பிவைக்கப்படுகின்றது.

டப்ளியு.எம்.பீ.ஏ.பொன்சேக்கா

பிரதிக் ககணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதி சார்பாக.

பிரதிகள்:

1. செயலாளர், கல்வி அமைச்சு
2. செயலாளர், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இலக்கம் : HED/A/UGC/FA/2022 2023 மே 31 ஆம் திகதி

தவிசாளர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 ஆம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1.1 கருத்துரை

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று, அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றல் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்கள், பொழிப்புச் செய்யப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 12 (4) மற்றும் (8) உப பிரிவுகளுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) உறுப்புரையு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) உறுப்புரைப் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மை மற்றும் நியாயமான நிலைமையை எடுத்தியம்புகின்றதென்பது எனது கருத்தாகும்.

1.2 கருத்துரைக்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன. இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நம்புகின்றேன்.

1.3 ஆணைக்குழுவின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வறிக்கைத் திகதியின் பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கும் ஆணைக்குழுவின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள, ஆனாலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது சம்பந்தமாக எனது கணக்காய்வறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதிலிருந்து கருதப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக் கூற வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான எனது கருத்துரையில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாதிருப்பதுடன் நான் அது சம்பந்தமாக எந்த விதமான சான்றுப்படுத்தலையோ கருத்தையோ வெளியிடவில்லை.

நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான எனது கணக்காய்வுடன் தொடர்பாக, மேலே இனங்கண்டு கொள்ளப்பட்ட ஏனைய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமானபோது வாசித்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்ளும்போது ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமானபோது வாசித்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்ளும்போது ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின்போது அல்லது வேறு விதமாகப் பெற்றுக்கொண்ட அறிவிற்கமைய அளவு ரீதியாக பொருந்தவில்லையாவென்பதனை கவனத்திற்கொள்ளுதல் எனது பொறுப்பாகும்.

ஆணைக்குழுவின் 2022 ஆண்டறிக்கையை வாசிக்கும்போது அதில் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இருப்பதாக நான் தீர்மானித்தால் அதனை சரி செய்வதற்காக நிர்வகிக்கும் தரப்புக்கு அந்த விடயங்களைத் தெரிவித்தல் வேண்டும். மேலும் சரி செய்யப்படாத பிழையாகக் குறிப்பிடப்படடடிருத்தல்கள் இருப்பின் அவை அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) உறுப்புரைக்கமைய உரிய காலப் பகுதியினுள் என்னால் பாராளுமன்றத்தில் சபையில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வகிக்கும் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரித்தல் மற்றும் நியாயமான வகையில் சமர்ப்பித்தல் மற்றும் ஊழல் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களை தயாரிக்க முடியுமாக இருப்பதற்குத் தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது ஆணைக்குழுவை தொடந்தும் நடாத்துவதற்கான ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதுடன் முகாமைத்துவம், ஆணைக்குழுவை கலைத்துவிடுவதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாதவிடத்து செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டாலே தவிர தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் கணக்குப் பதிதல் மற்றும் ஆணைக்குழுவின் தொடர்ச்சியான இருப்புடன் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்திக்கொள்வதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கைப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பாக சோதனையிடும் பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் ஆணைக்குழுவின் வருமானங்கள், செலவுகள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக உரிய பிரகாரம் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிவரல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மொத்தமாக, நிதிக் கூற்று ஊழல் மற்றும் தவறுகளால் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை கொண்டிராதவை என நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கான உறுதிப்பாடாக இல்லாதிருக்கும். ஊழல் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்பட முடியுமாக இருப்பதுடன், அதன் அளவானது இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு பயனர்களால் எடுக்கப்படும் பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில் நியாயம் மற்றும் தொழில் ஐயுறவுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வுக்குக் கருத்துரைக்கான அடிப்படையைப் பெற்றுக்கொள்ளும்போது ஊழல் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக்கூடிய ஆபத்தை இனங்கண்டுகொள்ளல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. பிழையாகக் குறிப்பிடப்பட்டதன் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினைப் பார்க்கிலும் ஊழல் காரணமாக ஏற்படும் தாக்கம் பலமானதாக இருப்பதுடன் கெட்ட கூட்டணி, பொய் ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் ஊழல் இடம்பெறுவதற்கான காரணங்களாகும்.

- உள்ளக நிர்வாகத்தின் பயன்தருதன்மை சம்பந்தமாக கருத்தை தெரிவிக்கும் நோக்கில் இல்லாவிட்டாலும், சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக நிர்வாகம் சம்பந்தமான தெளிவு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்களின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக ஆணைக்குழுவின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமான அடிப்படையை பயன்படுத்திக்கொள்ளும் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதுமான நிச்சயமற்ற தன்மை நிலவுவதாக நான் தீர்மானித்தால் நிதிக் கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு

அறிக்கையில் கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது கருத்தை திருத்தியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவுறுத்தப்படலாம்.

- நிதிக் கூற்றுக்களில் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் மொத்த முன்னிலைப்படுத்தல்கள் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்கண்டுகொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு வினைத்திறனின்மை மற்றும் ஏனைய பொதுவான விடயங்கள் சம்பந்தமாக ஆளும் தரப்புக்களுக்கு அறிவுறுத்துகின்றேன்.

2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழ் குறிப்பிடப்படும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களை நான் பெற்றுக்கொண்டதுடன், எனது சோதனையின்போது நிறுவகம் உரிய நிதி அறிக்கைகளை பேணி வந்துள்ளமையை காண முடியுமாக இருக்கின்றது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (றை) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இயைந்துள்ளது.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (ஸை) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் மற்றும் அளவு சார்ந்த விடயங்களுக்குள் வரையறுக்கப்பட்ட வகையில் கீழ் குறிப்பிடப்படும் கூற்றுக்களை வெளியிடுமளவிற்கான எதுவும் எனது கவனத்திற்குட்படவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய ஆணைக்குழுவினது நிர்வாக சபையின் எவரேனுமொரு அங்கத்தவருக்கு ஆணைக்குழுவுடன் தொடர்புடைய ஏதேனுமொரு உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது வேறு விதத்தில் பொதுவான வர்த்தக நிலைமைக்குப் புறம்பான வகையில் தொடர்பு இருத்தல்.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய ஏதேனுமொரு ஏறபுடைத்தாகும் எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது ஆணைக்குழுவின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இயைந்து செல்லாத வகையில் செயற்பட்டிருத்தல்.

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள்	அவதானிப்புக்கள்
(அ)	1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2019 யூலை 29 ஆம் திகதிய 04.∴2019 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கைக் கடிதம்	நிதி அமைச்சரின் அங்கீகாரமின்றி 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூ. 2,084,930 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.
(ஆ)	உயர் கல்விக்கான தாபன விதிக் கோவையின் 5 ஆம் அத்தியாயத்தின் 07 ஆம் பிரிவு மற்றும் 2018 திசெம்பர் 17 ஆம் திகதிய 2.∴2018 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை	21 பல்கலைக்கழகங்களின் கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணியின் 514 அங்கத்தவர்களிடமிருந்து பிணை முறி மீறல் அடிப்படையில் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று 1,317 மில்லியன் ரூபா தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய ஆணைக்குழுவின் அதிகாரங்கள், அலுவல்கள் மற்றும் கடமைகளுடன் இயைந்து செல்லாத வகையில் அலுவல் மேற்கொண்டிருந்தமை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய ஆணைக்குழுவின் வளங்களை சிக்கனமாக, வினைத்திறனுடன் மற்றும் பயன்மிக்க வகையில் உரிய காலப் பகுதிக்குள் ஏற்புடைத்தாகும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்க பெற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தாதிருந்தமை.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) பாலின நிலை ஒப்புரவு ∴ சமத்துவம் பற்றிய திட்டத்தின் செலவினத்திற்காக 2017 ம்றறும் 2018 ஆம் ஆண்டுகளில் கிடைத்திருந்த ரூ. 9,127,804 தொகை 03 வருடங்களிலும் அதிக காலமாக குறைப் பயன்பாட்டில் காணப்பட்டது.

(ஆ) 2017 ஆம் ஆண்டு முதல் நிலவி வரும் தீர்க்கப்படாத பணி ஒப்பந்தங்களின் பிடிமானத் தொகைகளில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூ. 1,291,916 மீதமாகியிருந்தது.

(இ) 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மென்பொருள்களின் மேம்பாட்டிற்காக ரூ. 1,413,500 செலவிடப்பட்டிருந்தாலும் குறித்த அலுவலை நிறைவு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையீலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014, 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் சுகாதரத்துறை ஊழியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக சுகாதார அமைச்சினால் ரூ.12,681,589 வழங்கப்பட்டிருந்ததுடன், குறித்த அலுவலை நிறைவு செய்ததன் பின்னர்

மீதமாகியிருந்த ரூ. 4,918,087 தொகை 2 வருட காலமாக தீர்க்கப்படாமல் ஆணைக்குழுவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கல்விசார் ஆளணிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் அறிக்கைத் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2020 ∴ 2021 கல்வியாண்டிற்காக பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்துக்கொண்டதன் பின்னர் நிலவும் 3,008 வெற்றிடங்களைப் பூர்த்தி செய்யாமையின் காரணமாக மாணவர்களால் இழக்கப்பட்ட பல்கலைக்கழக அனுமதியை குறைப்பதற்கான புதிய முறையொன்று ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2021 ஆம் ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த பல்கலைக்கழக அனுமதிக் கொள்கைக்குப் புறம்பாக அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களில் 38 பாடநெறிகளுக்கு மாணவர்களை உள்வாங்குவதற்காக மீண்டும் தகைமைச் சோதனைகள் நடாத்தப்பட்டிருந்தன. 2021 திசெம்பர் 08 ஆம் திகதிய பொது முயற்சிகள் குழுவின் தீர்மானத்திற்கமைய தகைமைச் சோதனை நடாத்துதல் நியாயமில்லையெனத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 38 பாடநெறிகளில் 18 பாடநெறிகளுக்கு தொடர்ந்தும் தகைமைச் சோதனையின் அடிப்படையில் மாணவர்களை உள்வாங்கிக் கொள்வதற்கு 2021 ∴ 2022 கல்வியாண்டின்போது திட்டமிடப்பட்டிருந்தது.

(ஏ) ஆணைக்குழுவினால் 2017 ஆம் ஆண்டில் ரூ.350,000 மாதாந்த வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 3,337 சதுர அடி பரப்பளவைக் கொண்ட கட்டிடத்தின் இடவசதி போதாமை மற்றும் போக்குவரத்து சிரமங்கள் நிலவியமையின் அடிப்படையில் அந்தக் குத்தகை ஒப்பந்தத்தை இரத்துச்செய்து 7,000 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டிடமொன்றை ரூ.950,000 மாதாந்த வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்காக தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ரூ.350,000 மாதாந்த வாடகைக்கான ஒப்பந்தத்தை இரத்துச் செய்யாமல் புதிய கட்டிடத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்தமையின் காரணமாக 2021 ஜனவரி முதல் 2022 திசெம்பர் வரையான காலப் பகுதியினுள் ரூ.4,200,000 மேலதிக தொகையொன்றை கட்டிட வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) 2017 ஆம் ஆண்டில் 07 கணனிகளைக் கொள்வனவு செய்வதற்கான தீர்மானத்தை இரத்துச்செய்து 04 கணனிகளை வாடகைக்குப் பெற்றுக்கொண்டமையின் காரணமாக நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை விசாரணையின் அடிப்படையில் நி.பி. 104 இன் பிரகாரம் விசாரணையொன்றை மேற்கொள்ளுதல் பொருத்தமென 2022 பெப்ருவரி 03 ஆம் திகதிய அமைச்சு செயலாளரின் கடிதம் மூலமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்திருந்த போதிலும் அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

டப்ளியூ.பீ.சீ.விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 ஆம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ஊடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

2.2.2

(அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2019 யூலை 29 ஆம் திகதிய 04/2019 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கைக் கடிதம் - நிதி அமைச்சரின் அங்கீகாரமின்றி 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூ. 2,084,930 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

பதில் :

2022 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேலதிக தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படவில்லை.

ஆனாலும் சட்ட ரீதியாக ஏற்படுத்தப்பட்ட ஊழியர் மேம்பாட்டு நிதியம் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க (பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 8 (1) (d) பிரிவு) ஊழியர் பாதுகாப்பு வைப்பு (நிதிப் பிரமாணம் 466) நிலையான வைப்பாக பேணி வரப்படும்.

(ஆ) உயர் கல்விக்கான தாபன விதிக் கோவையின் 5 ஆம் அத்தியாயத்தின் 07 ஆம் பிரிவு மற்றும் 2018 திசெம்பர் 17 ஆம் திகதிய 2/2018 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை - 21 பல்கலைக்கழகங்களின் கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணியின் 514 அங்கத்தவர்களிடமிருந்து பிணை முறி மீறல் அடிப்படையில் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று 1,317 மில்லியன் ரூபா தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

பதில் :

2010 இற்கு முன்னர் பிணைமுறி ஒப்பந்தங்களில் நிலவிய குறைபாடுகள் காரணமாக 2010 இற்கு முன்னர் பிணைமுறிகளை மீறிய விரிவுரையாளர் குழாம் அங்கத்தவர்களின் குறித்த தொகையை அறவிடுதல் தாமதமாகியுள்ளது.

ஆனாலும் 2010.02.05 ஆம் திகதிய 920 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை ஊடாக அறிமுகஞ் செய்யப்பட்ட புதிய பிணைமுறி ஒப்பந்தம் மற்றும் 02/2018 ஆம் இலக்க உள்ளக கணக்காய்வுச் சுற்றறிக்கை ஊடாக அறிமுகஞ் செய்யப்பட்ட பிணை முறித் தொகையை அறவிடுவதற்கான மீளாய்வுக் குழுவை அமைத்ததன் பின்னர் 2010 ஆம் ஆண்டின் பின்னர் மீறப்பட்ட பிணைமுறி மீறல் சந்தர்ப்பங்கள் ஒன்றைத் தவிர ஏனைய அனைத்து பிணைமுறி மீறல்களுடன் தொடர்புடைய தொகைகளை அறவிட்டுக்கொள்வதற்கு தேவையான சட்ட ரீதியிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது அல்லது அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2022.12.31 ஆம் திகதியன்று பிணைமுறி மீறல்கள் பற்றிய பொழிப்பு அறிக்கை.

விபரம்	920 ஆம் இலக்க சுற்றறிக்கையை வெளியிடுவதற்கு முன்னர் நிலைமை	920 ஆம் இலக்க சுற்றறிக்கையை வெளியிட்டதன் பின்னர் நிலைமை
ஆண்டினுள் மீள அறவீடுகள்	11	73
அறவிடப்பட்டு வருகின்ற	65	139
பல்கலைக்கழகங்களினால் ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள	89	42
வழக்குகள்	20	-
சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு	28	14

வருகின்ற		
பதில் கிடைத்திராத/ முகவரியை கண்டுபிடிக்க முடியாத	72	1
ஏனையவை	63	-
மொத்தம்	**348**	**269**

2022.12.31 ஆம் திகதியாகும்போது பிணைமுறிகளை மீறிய 84 விரிவுரையாளர்கள் / உத்தியோகத்தர்களிடமிருந்து 572 மில்லியன் ரூபா தொகை மீள அறவிடப்பட்டுள்ளது.

2.2 ஏனைய விடயங்கள்

(அ) பாலின நிலை ஒப்புரவு / சமத்துவம் பற்றிய திட்டத்தின் செலவினத்திற்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கிடைத்திருந்த ரூ. 9,127,804 தொகை 03 வருடங்களிலும் அதிக காலமாக குறைப் பயன்பாட்டில் காணப்பட்டது.

பதில் :

இந்த நிதி பாலின நிலை ஒப்புரவு / சமத்துவம் தொடர்பாக 05 வருட கால கருத்திட்டத் திட்டமிடல்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டது. அதற்கமைய இந்த நிதியை 2018 முதல் 2023 வரையான காலப் பகுதியினுள் பயன்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்பு நிலவுகின்றது.

(ஆ) 2017 ஆம் ஆண்டு முதல் நிலவி வரும் தீர்க்கப்படாத பணி ஒப்பந்தங்களின் பிடிமானத் தொகைகளில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூ. 1,291,916 மீதமாகியிருந்தது.

பதில் :

தற்போது இனங்காணப்பட்டுள்ள கடனாளிகளுக்கு அவர்களால் வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் அடிப்படையில் பிடிமானத் தொகை விடுவிக்கப்பட்டுள்ளத. மேலம், விடுவிப்பதற்கான தகவல்கள் இல்லாத பிடிமானத் தொகைகள் சம்பந்தமாக அவற்றை விடுவித்தல் அல்லது வருமானத்தில் வரவு வைத்தல் தொடர்பான அலுவல்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

(இ) 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மென்பொருள்களின் மேம்பாட்டிற்காக ரூ. 1,413,500 செலவிடப்பட்டிருந்தாலும் குறித்த அலுவலை நிறைவு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

பதில் :

மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு முறைமையை மேம்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டில் களனிப் பல்கலைக்கழகத்தினால் செலுத்தப்பட்ட ரூ. 265,000/- தொகை முகாமைத்துவ தகவல் முறைமை மேம்பாட்டிற்காக முறைமைகள் மேம்படுத்தல் நிறுவனமொன்றுக்கு செலுத்தப்பட்ட ரூ. 1,148,000/- கொடுப்பனவுக்குள் இந்தக் கொடுப்பனவும் உள்ளடங்குகின்றது.

இதுவரை முகாமைத்துவ தகவல் முறைமையுடன் தொடர்புடைய முறைமைகள் மேம்பாட்டு நடவடிக்கைகள் முழுமையாக நிறைவு செய்யப்படாதிருப்பதுடன் Pilot Run மட்டத்தில் நிலவுகின்றது. அந்த நடவடிக்கைகளை பூரணமாக நிறைவு செய்ததன் பின்னர் அந்தத் தொகையை மூலதனமயப்படுத்த முடியும்.

2019 முதல் மகாபொல கொடுப்பனவு நடவடிக்கைகள் மகாபொல நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் 2019 வரை மகாபொல கொடுப்பனவு நடவடிக்கைகள் பல்கலைக்கழகங்களினூடாக மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய, பல்கலைக்கழகங்கள் சார்பாக மகபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு முறைமைக்கு பங்களிப்புத் தொகையாக ரூ. 265,000/- பல்கைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் செலுத்தப்பட்டது.இதன் தற்போதைய நிலைமைக்கமைய மகாபொல கொடுப்பனவு முறைமை மகாபொல நிதியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க மேற்குறிப்பிடப்பட்ட கொடுப்பனவு சம்பந்தமாக மகாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்துடன் கலந்துரையாடி தீர்மானமொன்றை எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ஈ) 2014, 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் சுகாதரத்துறை ஊழியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக சுகாதார அமைச்சினால் ரூ.12,681,589 வழங்கப்பட்டிருந்ததுடன், குறித்த அலுவலை நிறைவு செய்ததன் பின்னர் மீதமாகியிருந்த ரூ. 4,918,087 தொகை 2 வருட காலமாக தீர்க்கப்படாமல் ஆணைக்குழுவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

பதில் :

2014, 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் சுகாதார உத்தியோகத்தர்களை [Registered Medical Officers (RMO) - பதிவு செய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள்] பயிற்றுவிப்பதற்காக அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்ற நிதியில் மீதியாகியிருந்த ரூ. 4,918,087 தொகை பற்றித் தீர்மானமொன்றை எடுப்பதற்கு 2023.02.23 ஆம் திகதி நடைபெற்ற 1095 ஆவது ஆணைக்குழுக் கூட்டத்தின்போது 2023.02.09 ஆம் திகதி நடைபெற்ற முகாமைத்துவக் குழு ஊடாக அறிக்கைப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க, 1095 ஆவது ஆணைக்குழுக் கூட்டத்தின்போது மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புடைய சகல செலவுகளையும் ஈடு செய்துகொள்ளப்பட்டதன் பின்னர் மீதித் தொகையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அந்த நிகழ்ச்சித் திட்டத்தை முகாமைப்படுத்துவதற்கான பெறுவனவாக அந்தத் தொகையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் தொடர்புடையதாக கணக்கில் பதியப்படும்.

(உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கல்விசார் ஆளணிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் அறிக்கைத் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

பதில் :

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தினூடாக தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களுக்குத் தேவையான பதவிகள் மற்றும் அந்தப் பதவிகளுடன் தொடர்புடைய ஆட்சேர்ப்பு நடைமுறைகள் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 8 (1) பிரிவின் அடிப்படையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கையின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பதவிகளுக்கான சம்பளம் மற்றும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் பொதுத் திறைசேரிச் சுற்றறிக்கைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன் மேலே "அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமை" பற்றியும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் மேலும் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

(ஊ) 2020 / 2021 கல்வியாண்டிற்காக பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்துக்கொண்டதன் பின்னர் நிலவும் 3,008 வெற்றிடங்களைப் பூர்த்தி செய்யாமையின் காரணமாக மாணவர்களால் இழக்கப்பட்ட பல்கலைக்கழக அனுமதியை குறைப்பதற்கான புதிய முறையொன்று ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

பதில் :

உடன்படவில்லை, தற்போது 2020/2021 கல்வியாண்டிற்காக சுமார் 4 சுற்று வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது. அது பற்றி கணக்காய்வு அத்தியட்சகருக்கு இலக்கம்: UGC/AD/AUDIT/2023 மற்றும் 2023.04.06 ஆம் திகதிய கடிதத்தினூடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ) 2021 ஆம் ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த பல்கலைக்கழக அனுமதிக் கொள்கைக்குப் புறம்பாக அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களில் 38 பாடநெறிகளுக்கு மாணவர்களை உள்வாங்குவதற்காக மீண்டும் தகைமைச் சோதனைகள் நடாத்தப்பட்டிருந்தன. 2021 திசெம்பர் 08 ஆம் திகதிய பொது முயற்சிகள் குழுவின் தீர்மானத்திற்கமைய தகைமைச் சோதனை நடாத்துதல் நியாயமில்லையெனத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 38 பாடநெறிகளில் 18 பாடநெறிகளுக்கு தொடர்ந்தும் தகைமைச் சோதனையின் அடிப்படையில் மாணவர்களை உள்வாங்கிக் கொள்வதற்கு 2021 / 2022 கல்வியாண்டின்போது திட்டமிடப்பட்டிருந்தது.

பதில் :

தற்போது பல பல்கலைக்கழகங்கள் / வளாகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களினால் நடாத்தப்படும் 39 கற்கைப் பாடநெறிகளுக்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக மாணவர்கள் தேவைப்படும் மிகக் குறைந்த Z- புள்ளியைப் பெற்றிருத்தலுக்கு மேலதிகமாக குறித்த நிறுவகங்களினால் நடாத்தப்படும் செய்முறை / தகுதிப் பரீட்சையில் சித்தியடைதல் கட்டாயத் தேவைப்பாடொன்றாகும். அவற்றில் 21 கற்கைப் பாடநெறிகளுக்கான செய்முறை / தகுதிப் பரீட்சையில் சித்தியடைதல் தேவைப்பாடு இன்றி ஆனாலும் அந்தப் பாடநெறிகளுக்கான பிரவேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய மிகக் குறைந்த தகைமைகளில் மாற்றத்துடன் 2023/2024 கல்வியாண்டு முதல் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். மேலும் செய்முறைப் / தகுதிப் பரீட்சை தேவைப்பாடொன்றான ஏனைய கற்கைப் பாடநெறிகளுக்கு தொடர்புடைய நிறுவகங்களினால் முன்மொழியப்படும் அளவுகோல்களை செயற்படுத்துவதற்கு பரீட்சைத் திணைக்களம் போன்ற சில நிறுவனங்களுடன் கலந்துரையாட வேண்டுமென்பதனால் அவை தொடர்பான கலந்துரையாடல்கள் தொடர்ந்தும் நடாத்தப்படுகின்றன.

(ஏ) ஆணைக்குழுவினால் 2017 ஆம் ஆண்டில் ரூ.350,000 மாதாந்த வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 3,337 சதுர அடி பரப்பளவைக் கொண்ட கட்டிடத்தின் இடவசதி போதாமை மற்றும் போக்குவரத்து சிரமங்கள் நிலவியமையின் அடிப்படையில் அந்தக் குத்தகை ஒப்பந்தத்தை இரத்துச்செய்து 7,000 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டிடமொன்றை ரூ.950,000 மாதாந்த வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்காக தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ரூ.350,000 மாதாந்த வாடகைக்கான ஒப்பந்தத்தை இரத்துச் செய்யாமல் புதிய கட்டிடத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்தமையின் காரணமாக 2021 ஜனவரி முதல் 2022 திசெம்பர் வரையான காலப் பகுதியினுள் ரூ.4,200,000 மேலதிக தொகையொன்றை கட்டிட வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது.

பதில் :

வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக்கொள்ளப்படுவதனால் 2017 வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடத்தின் குத்தகை (லீசிங்) ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கு முடியவில்லை.

(அ) தேசிய ரீதியிலான தேவைப்பாடொன்றாக மிகவும் முக்கியமான அலுவலொன்றான பல்கலைக்கழக அனுமதி தொடர்பான பொது மக்களின் விசாரிப்புக்களைத் தீர்ப்பதற்காக தகவல் நிலையம் எனும் பெயரில் புதிய பிரவொன்றை அமைத்தல்.

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தூர நோக்கு மற்றும் நடவடிக்கைகளுக்கிணங்கச் செயற்பட்டு காலத்தின் தேவைகளாகக் கருதி 2022 ஆம் ஆண்டில் மாணவர் விவகாரங்கள் மற்றும் நலனோம்புகை பிரிவு மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு எனும் பெயரில் 02 புதிய பிரிவுகளை ஆரம்பித்தல்.

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களைத் தெளிவுபடுத்தி நிரல் அமைச்சினால் அரச வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்கு 2023.03.14 ஆம் திகதி கடிதமொன்று அனுப்பப்பட்டது.

(ஐ) 2017 ஆம் ஆண்டில் 07 கணனிகளைக் கொள்வனவு செய்வதற்கான தீர்மானத்தை இரத்துச்செய்து 04 கணனிகளை வாடகைக்குப் பெற்றுக்கொண்டமையின் காரணமாக நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை விசாரணையின் அடிப்படையில் நி.பி. 104 இன் பிரகாரம் விசாரணையொன்றை மேற்கொள்ளுதல் பொருத்தமென 2022 பெப்ருவரி 03 ஆம் திகதிய அமைச்சு செயலாளரின் கடிதம் மூலமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்திருந்த போதிலும் அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

பதில் :

தற்போது நிதிப் பிரமாணம் 104 இன் கீழ் விசாரணைகளை நடாத்துவதற்கான விசாரணைக் குழுவுக்கான பெயர் முன்மொழிவுகள் கல்வி அமைச்சினால் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள்

2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று

நிதி நிலைமை பற்றிய கூற்று

	குறிப்புக்கள்	2022	2021
		ரூ.	ரூ.
சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்துக்கள்			
காசு மற்றும் காசுக்குச் சமமானவை	5	36,889,759	44,859,215
பெறப்பட வேண்டிய முதலீட்டு வருமானம்	6	1,983,751,837	530,170,681
பெறப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை	7	62,932,015	57,045,488
முதலீடுகள்	8	5,164,436,717	3,699,461,278
		7,248,010,328	4,331,536,662
நடைமுறையல்லாத சொத்துக்கள்			
முதலீடுகள்	8	13,860,103,993	12,224,038,623
பெறப்பட வேண்டிய முதலீட்டு வருமானம்	6	-	831,346,849
		13,860,103,993	13,055,385,473
மொத்தச் சொத்துக்கள்		21,108,114,321	17,386,922,134
பொறுப்புக்கள்			
நடைமுறைப் பொறுப்புக்கள்			
நானாவித கடன் வழங்குநர்கள்	9	976,633	1,143,138
அங்கத்தவர்களுக்குச் செலுத்த வேண்டிய தொகை	10	3,440,665	9,229,054
சேமலாப நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை	11	17,293,336	25,391
செலுத்த வேண்டிய வாழ்க்கைச் செலவுப் படிகள்	12	29,705	31,618
செலுத்த வேண்டிய வருமான வரி	13	338,150,944	224,338,404
		359,891,283	234,767,606
மொத்த தேறிய சொத்துக்கள்		**20,748,223,039**	17,152,154,529
அங்கத்துவ நிதியம் மற்றும் இருப்புக்கள			
பங்களிப்பு நிதியம்		19,559,253,506	16,238,158,170
ஓய்வூதிய நிதியம்		464,256,596	417,723,204
தக்கவைக்கப்பட்ட ஈட்டல்கள்		724,712,937	496,273,155
மொத்த தேறிய சொத்துக்கள்		**20,748,223,039**	17,152,154,529

05 முதல் 06 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் 07 முதல் 18 வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகள் இத்தகைய நிதிக் கூற்றின் ஒருங்கிணைந்த பகுதியொன்றாகும். இந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பு மற்றும் சமர்ப்பித்தல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களே பொறுப்பானவர்கள். 2023 பெப்ரவரி 27 இல் இடம்பெற்ற விசேட ஆணைக்குழுக் கூட்டத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களால் இத்தகைய நிதிக் கூற்றுக்கள் அங்கீகரிக்கப்பட்டன.

ஆர்.ஏ.யூ.ரணவீர
கணக்காளர்

டீ.எல்.எஸ்.ஜயந்த
செயலாளர் (பதில் கடமை)

சிரேஷ்ட பேரா.சம்பத் அமரதுங்க
தலைவர்

சிரே. பேரா.ஏ.கே.டபிள்யூ.ஜெயவர்த்தன
ஆணைக்குழு உறுப்பினர்

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள

2022 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

	2022	2021
	ரூ.	ரூ.
தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்		
வரி மற்றும் செலவுக்குப் பின்னரான தேறிய வருமானம்	**1,957,339,557**	**1,222,412,486**
காசு அல்லாத அலுவல்கள்		
திறைசேரி முறிகள் மீதான கழிவு / (தவணைத் தொகை)	(17,571,757)	24,863,911
ஓய்வூதிய நிதியத்தின் சீர்படுத்துகை	21,013,889	14,711,753
வருமான வரிக்கான ஒதுக்கீடு	319,538,749	206,023,853
	2,280,320,439	1,468,012,003
தொழிற்பாட்டு மூலதன மாற்றங்கள்		
முதலீட்டு வருமானம் (அதிகரிப்பு) / குறைவு	(622,234,307)	(258,873,035)
நானாவித கடன் வழங்குனர்களின்(அதிகரிப்பு) / குறைவு	(166,505)	5,924
தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசு உருவாக்கம்	**1,657,919,627**	**1,209,144,892**
கழிக்குக : செலுத்திய வருமான வரி	(205,726,210)	(164,540,233)
தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்	**1,452,193,417**	**1,044,604,659**
முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்		
நிலையான வைப்புக்களின் முதிர்ச்சி	4,981,355,837	2,304,032,556
நிலையான வைப்புக்களில் முதலீடு	(3,900,000,000)	(3,111,355,837)
கடன் பத்திரங்களின் முதிர்ச்சி	-	400,000,000
கடன் பத்திரங்கள் கொள்வனவு	(330,000,000)	(800,000,000)
திறைசேரி முறிகள் முதிர்ச்சி	453,508,997	50,000,000
திறைசேரி முறிகள் கொள்வனவு	(3,765,150,187)	(1,562,314,585)
திறைசேரி உண்டியல்கள் கொள்வனவு	(523,183,700)	-
முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்	**(3,083,469,053)**	**(2,719,637,866)**
நிதி நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்		
பங்களிப்புத் தொகை பெறுகை	1,901,758,489	1,788,428,306
மீளச் செலுத்தல்	(133,151,253)	(83,427,798)
COLA மீளச் செலுத்தல்	(1,913)	-
ஓய்வூதியம் செலுத்துதல்	(145,299,143)	(106,599,030)
நிதி நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்	**1,623,306,179**	**1,598,401,478**
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு	**(7,969,456)**	**(76,631,729)**
ஆரம்ப காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள	44,859,215	121,490,944
இறுதி காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	**36,889,759**	**44,859,215**
வங்கி மீதி		
இலங்கை வங்கி	150,022	(1,086,070)
மக்கள் வங்கி	2,000,000	2,000,000
கூட்டுக: **நிதிய முகாமைத்துவக் கணக்குகள்**		
நள்ளிரவு வைப்புக்கள்	7,000,000	-
ஸ்வீப்பர் வைப்புக்கள் - இலங்கை வங்கி	2,659,389	9,075,246
ஸ்வீப்பர் வைப்புக்கள் - மக்கள் வங்கி	25,080,348	34,870,040
	36,889,759	**44,859,215**

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள்

பங்குரிமை மாற்றல் கூற்றுக்கள்

2022 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக

	பங்களிப்பு நிதியம்	ஓய்வூதிய நிதியம்	நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம்	மொத்தம்
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
2021 ஜனவரி 01 ஆம் திகதியன்று மீதி	13,472,992,175	358,793,633	496,173,219	14,327,959,027
2021 ஆம் ஆண்டிற்கான மேலதிகம்	-	-	1,222,412,486	1,222,412,486
உறுப்பினர்களிடமிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி	(3,580,957)	-	3,584,904	3,947
பிழையான பங்களிப்புத் தொகையை சீர்செய்தல்	(115,293)	-	-	(115,293)
நிலுவை / கிடைக்கப்பெறாத பங்களிப்புத் தொகை	13,705,308	-	-	13,705,308
நடப்பு ஆண்டின் வருமானத்தின் ஊடான பரிமாற்றல்	-	14,711,753	-	14,711,753
ஓய்வூதியகாரர்களுக்காக பெற்ற பங்களிப்புத் தொகை	-	2,265	-	2,265
நடப்பு ஆண்டின் பங்களிப்பு நிதியம்	1,763,151,345	-	-	1,763,151,345
மொத்த பங்களிப்புத் தொகையை மீளப் பெற்றுக்கொடுத்தல்	(65,527,409)	-	-	(65,527,409)
ஓய்வூதிய நிதியத்திற்கு மாற்றுதல்	(123,944,405)	123,944,405	-	-
பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு மாற்றுதல்	(17,549,870)	-	-	(17,549,870)
2021 ஆம் ஆண்டில் ஓய்வூதியம் செலுத்துதல்	-	(106,599,030)	-	(106,599,030)
ஓய்வூதிய நிதியத்தின் / பங்களிப்பு நிதியத்தின் வட்டி	1,199,027,275	26,870,178	(1,225,897,453)	-
2021 டிசம்பர் 31 ஆம் திகதின்று மீதி	**16,238,158,170**	**417,723,204**	**496,273,155**	**17,152,154,529**
2022 ஆம் ஆண்டிற்கான மேலதிகம்	-	-	1,957,339,557	1,957,339,557
உறுப்பினர்களிடமிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி	(10,370,096)	-	10,370,096	-
பிழையான பங்களிப்புத் தொகையை சீர்செய்தல்	(192,298)	-	-	(192,298)
நிலுவை / கிடைக்கப்பெறாத பங்களிப்புத் தொகை	11,273,959	-	-	11,273,959
நடப்பு ஆண்டின் வருமானத்தின் ஊடான பரிமாற்றல்	-	21,013,889	-	21,013,889
ஓய்வூதியகாரர்களுக்காக பெற்ற பங்களிப்புத் தொகை	17,440	(17,440)	-	-
நடப்பு ஆண்டின் பங்களிப்பு நிதியம்	1,896,563,354	-	-	1,896,563,354
மொத்த பங்களிப்புத் தொகையை மீளப் பெற்றுக்கொடுத்தல	(138,718,914)	-	-	(138,718,914)
ஓய்வூதிய நிதியத்திற்கு மாற்றுதல்	(132,732,502)	132,732,502	-	-
பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு மாற்றுதல்	(5,911,895)	-	-	(5,911,895)
2022 ஆம் ஆண்டில் ஓய்வூதியம் செலுத்துதல்	-	(145,299,143)	-	(145,299,143)
ஓய்வூதிய நிதியத்தின் / பங்களிப்பு நிதியத்தின் வட்டி	1,701,166,288	38,103,584	(1,739,269,871)	-
	3,321,095,336	46,533,392	228,439,782	3,596,068,510
2022 டிசம்பர் 31 ஆம் திகதின்று மீதி	**19,559,253,506**	**464,256,596**	**724,712,937**	**20,748,223,039**

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள்

நிதிச் செயலாற்றுகை கூற்று

2022 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக

	குறிப்பு	2022	2021
		ரூ.	ரூ.
வருமானம்			
முதலீட்டு வருமானம்	14	2,299,989,277	1,444,990,138
கழிக்க: வருமான வரிக்கான ஒதுக்கீடு		(319,538,749)	(206,023,853)
செலவுகளை கழித்த பின்னர் தேறிய வருமானம்		**1,980,450,528**	**1,238,966,285**
கழிக்க: **செலவுகள்**			
ஓய்வூதிய நிதியத்தின் சீர்படுத்துகை	15	21,013,889	14,711,753
தொழிற்பாட்டுச் செலவுகள்	16	2,097,081	1,842,046
		23,110,971	**16,553,799**
செலவுகளை கழித்த பின்னர் தேறிய வருமானம்		**1,957,339,557**	**1,222,412,486**
கூட்டுக: வருமானத்துக்கான சீர்படுத்துகை		10,370,096	3,584,904
முன்கொணரப்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம்		496,273,155	496,173,219
பங்கிட முடியுமான தேறிய வருமானம்		**2,463,982,808**	**1,722,170,609**
கழிக்க: **அங்கத்துவர் வட்டி**			
பங்களிப்பு நிதியத்திற்கான வட்டி		1,701,166,288	1,199,027,275
ஓய்வூதிய நிதியம்		38,103,584	26,870,178
		1,739,269,871	**1,225,897,453**
முன்கொணரப்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம்		**724,712,937**	**496,273,155**

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இலக்கம் : HED/A/PNF/FA/2022 2023 மே 18 ஆம் திகதி

தவிசாளர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேற்குறிப்பிடப்பட்ட அறிக்கை இத்துடன் அனுப்பிவைக்கப்படுகின்றது.

டப்ளியு.எம்.பீ.ஏ.பொன்சேக்கா
பிரதிக் ககணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி சார்பாக.

பிரதிகள்:
1. செயலாளர், கல்வி அமைச்சு
2. செயலாளர், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. : HED/A/PNF/FA/2022 2023 மே 15 ஆம் திகதி

தலைவர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 கருத்துரை

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று, அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றல் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்கள், பொழிப்புச் செய்யப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(3) உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) உறுப்புரைப் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மை மற்றும் நியாயமான நிலைமையை எடுத்தியம்புகின்றதென்பது எனது கருத்தாகும்.

1.2 கருத்துரைக்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன. இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதுமாகுமென நான் நம்புகின்றேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வகிக்கும் தரப்பினர்களின் பொறுப்புக்கள்

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் முன்வைத்தல் மற்றும் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிக்க முடியுமாக இருப்பதற்குத் தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது நிதியத்தை தொடர்ந்தியங்கும் இயலுமையை (இருப்பை) தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதுடன், முகாமைத்துவமானது நிதியத்தை கலைத்துவிடுவதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டாலே தவிர தொடர்ந்தியங்குதல் எனும் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் நிதியத்தின் தொடர்ச்சியான இருப்புடன் (தொடர்ந்தியங்குதலுடன்) தொடர்பான விடயங்களை வெளிப்படுத்திக்கொள்வதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கைப்படுத்தல் செயற்பாடு தொடர்பான பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக உரிய பிரகாரம் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிவரல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக, நிதிக் கூற்று ஊழல் மற்றும் தவறுகளால் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும்போது எப்போதும் அது பொருண்மையான தவறான கூற்றுக்களை வெளிப்படுத்திக்கொள்வதற்கான உறுதிப்படுத்தலொன்று அல்ல. மோசடி மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க முடியுமாக இருப்பதுடன் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு பயனர்களால் எடுக்கப்படும் பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில் நியாயம் மற்றும் தொழில் ஐயுறவுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தை இனங்கண்டுகொள்ளும்போது மற்றும் மதிப்பீட்டின்போது சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடல் ஊடாக மோசடிகள் அல்லது தவறு காரணமாக ஏற்படும் ஆபத்துக்களை தவிர்த்துக்கொள்வதற்கு, போதுமானளவிலான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினைப் பார்க்கிலும் மோசடிகளால் ஏற்படும் தாக்கம் பலமானதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் மோசடி ஏற்படுவதற்கான காரணங்களாகும்.

- சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக நிறுவகத்தின் உள்ளக நிர்வாகம் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொண்டபோதிலும் உள்ளக நிர்வாகத்தின் பயன்தருதன்மை சம்பந்தமாக கருத்தை தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கப்படவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டிற்கான நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்பு (தொடர்ந்து இயங்குதல்) சம்பந்தமான அடிப்படையை பயன்படுத்திக்கொள்ளும் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை நிலவுவதாக நான் தீர்மானித்தால் நிதிக் கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயத்தை திருத்தியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவடைய நேரிடலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டதுடன் அதற்காக அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டமை தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்கண்டுகொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக நிர்வகிக்கும் (ஆளுகை) தரப்புக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழ் குறிப்பிடப்படும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (னை) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இயைந்துள்ளது.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (ை) (ஈ) (ைை) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், முன்வைக்கப்பட்டிருக்கும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இயைந்திராமை

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 95 ஆவது பிரிவு மற்றும் இலக்கம்: 03.்.2022 மற்றும் 2022 பெப்ருவரி 07 ஆம் திகதிய ஆணைக்குழுச் சுற்றறிக்கைக்கமைய பங்காளியின் கணக்கை முடிவுறுத்தி 03 மாதங்களுக்குள் அவருடைய ஓய்வூதிய நிதயக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள தொகையை செலுத்த வேண்டியிருந்த போதிலும் இரண்டு சந்தர்ப்பங்களில் 02 மாதங்கள் மற்றும் 07 மாதங்கள் தாமதித்து செலுத்தப்பட்டமையின் காரணமாக தாமதமான காலப் பகுதிக்காக ஓய்வூதிய நிதியத்திலிருந்து ரூ.27,260 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

டப்ளியு.பீ.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ஊடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இயைந்திராமை

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 95 ஆவது பிரிவு மற்றும் இலக்கம்: 03/2022 மற்றும் 2022 பெப்ருவரி 07 ஆம் திகதிய ஆணைக்குழுச் சுற்றறிக்கைக்கமைய பங்காளியின் கணக்கை முடிவுறுத்தி 03 மாதங்களுக்குள் அவருடைய ஓய்வூதிய நிதயக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள தொகையை செலுத்த வேண்டியிருந்த போதிலும் இரண்டு சந்தர்ப்பங்களில் 02 மாதங்கள் மற்றும் 07 மாதங்கள் தாமதித்து செலுத்தப்பட்டமையின் காரணமாக தாமதமான காலப் பகுதிக்காக ஓய்வூதிய நிதியத்திலிருந்து ரூ. 27,260 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

பதில்:-

அந்த ரூ. 27,260/- கொடுப்பனவானது மேலதிக கொடுப்பனவல்ல என்பதோடு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 92(3) ஆம் பிரிவு மற்றும் இலக்கம்: 03/2022 பெப்ருவரி 07 ஆம் திகதி ஆணைக்குழுச் சுற்றறிக்கைக்கமைவான கொடுப்பனவாகும்.

பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள்

நிதி நிலைமைக் கூற்றுக்கள்

திசெம்பர் 31 ஆம் திகதியன்று

	குறிப்பு இல.	2022 ரூபா	2021 ரூபா
சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்துக்கள்			
காசு மற்றும் காசுக்குச் சமமானவை	06	302,060,542	76,144,214
பெறப்பட வேண்டிய வட்டி	07	5,374,162,634	1,991,690,268
பெறப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை	08	212,477,601	211,190,152
பெறப்பட வேண்டிய கடன் தவணைத் தொகை	09	35,224,961	30,860,266
கடன்களின் தற்போதைய பகுதி	14	1,265,997,652	1,462,808,971
முதலீடுகள்	13	13,756,945,688	12,489,607,333
ஏனைய முற்பணங்கள் மற்றும் முன்கொடுப்பனவுகள்	10	268,712	486,611
இருப்புக்கள்		438,274	107,612
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		20,947,576,064	16,262,895,427
நடைமுறையல்லாத சொத்துக்கள்			
பெறப்பட வேண்டிய வட்டி	07	-	2,135,210,959
சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்	11	5,407,856	15,467
அருவச் சொத்துக்கள்	12	235,311	720,623
முதலீடுகள்	13	42,684,425,600	39,500,907,720
கடன்கள்	14	9,559,162,280	6,252,393,294
மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்		52,249,231,048	47,889,248,063
மொத்தச் சொத்துக்கள்		**73,196,807,111**	**64,152,143,490**
பொறுப்புக்கள்			
நடைமுறை பொறுப்புக்கள்			
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	06	103,512,872	88,203,527
செலுத்த வேண்டிய கடன்கள்	15	186,274,821	-
ஏனைய செலுத்த வேண்டியவை	16	3,488,241	35,624,314
COLA செலுத்த வேண்டியவை		43,182,641	43,575,020
மீளச் செலுத்த வேண்டியவை	17	50,732,906	49,903,091
செலுத்த வேண்டிய வரிகள்	18	1,004,352,835	748,455,782
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		1,391,544,316	965,761,734
மொத்த தேறிய சொத்துக்கள்		**71,805,262,795**	**63,186,381,755**

தேறிய சொத்துக்கள் / பங்குகள்

அங்கத்துவக் கணக்கு மீதி - செயற்பாடு	19	71,057,499,025	62,988,316,953
அங்கத்துவக் கணக்கு மீதி - செயற்பாடற்ற	20	38,094,733	38,134,412
செயற்பாடற்ற அங்கத்துவர்களுக்கான ஒதுக்கீடு		8,000,000	8,000,000
கோரப்படாத அனுகூலங்கள் இருப்பு		6,997,078	6,997,078
முன்கொண்டு செல்லப்பட்ட நிறுத்திவைக்கப்பட்ட இலாபம்		694,671,959	144,933,312
மொத்த தேறிய சொத்துக்கள்		**71,805,262,795**	**63,186,381,755**

05 முதல் 09 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் 10 முதல் 27 வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகள் இத்தகைய நிதிக் கூற்றின் ஒருங்கிணைந்த பகுதியொன்றாகும். இத்தகைய நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் அளிக்கைக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களே பொறுப்பானவர்கள். 2023 பெப்ரவரி 27 இல் இடம்பெற்ற ஆணைக்குழுக் கூட்டத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களால் இத்தகைய நிதிக் கூற்றுக்கள் ஒப்புதலளிக்கப்பட்டன.

ஆர்.ஏ.யூ.ரணவீர
கணக்காளர்

டீ.எல்.எஸ்.ஜயந்த
செயலாளர் (பதில் கடமை)

சிரேஷ்ட பேரா.சம்பத் அமரதுங்க
தலைவர்

சிரே. பேரா.ஏ.கே.டபிள்யூ.ஜெயவர்த்தன
ஆணைக்குழு உறுப்பினர்

பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள்

காசுப் பாய்ச்சல் கூற்று திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக.	2022 ரூ.	2021 ரூ.
தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்		
வரி மற்றும் செலவுக்குப் பின்னரான தேறிய வருமானம்	6,015,429,579	4,225,026,102
சீர்படுத்தல்கள்		
காசு அல்லாத இயக்கங்கள்		
கூட்டுக/(கழிக்க): கழிவு/ திறைசேரி பிணை முறிக்கான தவணைத் தொகை	20,598,514	90,488,260
ஆண்டின் தேய்மானம்	164,270	11,600
பெறுமதி தேய்வுகள்	485,311	485,311
வருமான வரி	983,491,335	703,414,046
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான மேலதிகம்	7,020,169,010	5,019,425,320
(அதிகரிப்பு)/ குறைவு இருப்பு	(330,663)	(79,500)
(அதிகரிப்பு)/ (குறைவு) பெறப்பட வேண்டிய முதலீட்டு வருமானம்	(1,247,261,406)	(703,354,261)
(அதிகரிப்பு)/ (குறைவு) முற்பணங்கள் மற்றும் முன்கொடுப்பனவுகள்	217,899	(123,811)
(அதிகரிப்பு)/ (குறைவு) பெறப்பட வேண்டிய கடன் தவணைத் தொகை	(4,364,695)	4,728,427
(அதிகரிப்பு)/ (குறைவு) COLA செலுத்த வேண்டியவை	(392,379)	(2,274,398)
(அதிகரிப்பு)/ (குறைவு) நானாவித கடனாளிகள்	(32,136,073)	33,579,818
தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் ஈட்டிய காசு	5,735,901,692	4,351,901,595
கழிக்க : வருமான வரி செலுத்தல்	(727,594,282)	(605,205,872)
தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்	**5,008,307,410**	**3,746,695,723**
முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்		
சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் கொள்வனவு	(5,556,659)	-
நிலையான வைப்புக்களின் முதிர்ச்சி	17,294,882,009	9,580,049,064
நிலையான வைப்புக்களில் முதலீடு	(11,620,000,000)	(10,844,882,009)
திறைசேரி முறிகள் விற்பனை / முதிர்ச்சி	393,000,000	50,000,000
கடன் பத்திரங்களின் முதரிச்சி	-	1,595,366,700
கடன் பத்திரங்களின் கொள்வனவு	(170,000,000)	(3,300,000,000)
திறைசேரி முறிகளின் கொள்வனவு	(9,747,679,559)	(3,577,015,970)
திறைசேரி உண்டியல்களின் கொள்வனவு	(1,552,974,200)	-
திறைசேரி உண்டியல்களின் முதிர்ச்சி	931,317,000	-
கடன் வழங்குதல் மற்றும் தீர்த்தல்	(2,923,682,845)	(283,639,572)
முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்	**(7,400,694,255)**	**(6,780,121,787)**
நிதி நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்		
பெறப்பட்ட பங்களிப்புத் தொகை	6,347,808,222	6,159,907,301
மீளப் பெறுதல்கள்	(3,744,814,395)	(3,293,163,961)
நிதி நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்	**2,602,993,826**	**2,866,743,340**
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு / (குறைவு)	**210,606,982**	**(166,682,724)**
ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	(12,059,313)	154,623,411
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	**198,547,669**	**(12,059,313)**
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்:		
காசு மற்றும் வங்கி மீதிகள் (குறிப்பு: 06)	**198,547,669**	**(12,059,313)**

பங்குரிமை மாற்றல் / தேறிய சொத்துக்கள் கூற்று

2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான

ரூபா

	செயற்பாடுடைய அங்கத்துவ மீதி	செயற்பாடற்ற அங்கத்துவ மீதி	செயற்பாடற்ற கணக்குகளுக்கான ஒதுக்கீடு	கோரப்படாத அனுகூலங்கள் இருப்பு	நிறுத்திவைக்கப்பட்ட இலாபம்	மொத்த தேறிய பங்குகள், சொத்துக்கள்
2021.01.01 ஆம் திகதியன்று மீதி (மீள் கூற்று)	56,020,836,691	38,153,592	8,000,000	6,993,398	64,394,361	56,138,378,042
ஆண்டிற்குரிய அங்கத்துவப் பணம்	6,132,431,980	-	-	-	-	6,132,431,980
ஆண்டிற்குரிய அங்கத்துவ வட்டி	4,195,276,550	-	-	-	(4,195,276,550)	-
செயற்பாடற்ற அங்கத்துவக் கணக்குகளுக்கான வட்டி	-	-	926,873	-	(926,873)	-
அங்கத்துவப் பணம் மீளச் செலுத்தல்	(3,293,260,404)	-	-	-	-	(3,293,260,404)
ஓய்வினை விடுப்புக்கான அறவீடுகள்	(16,193,966)	-	-	-	-	(16,193,966)
சீர்படுத்தல்கள்	(50,773,898)	(19,180)	(926,873)	3,680	51,716,271	-
வரிக்கு பின்னரான தேறிய வருமானம் (மீள் கூற்று)	-	-	-	-	4,225,026,102	4,225,026,102
2022.01.01 ஆம் திகதியன்று மீதி	**62,988,316,953**	**38,134,412**	**8,000,000**	**6,997,078**	**144,933,312**	**63,186,381,755**
ஆண்டிற்குரிய அங்கத்துவப் பணம்	6,381,480,119	-	-	-	-	6,381,480,119
ஆண்டிற்குரிய அங்கத்துவ வட்டி	5,518,371,852	-	-	-	(5,518,371,852)	-
செயற்பாடற்ற அங்கத்துவக் கணக்குகளுக்கான வட்டி	-	-	2,081,868	-	(2,081,868)	-
அங்கத்துவப் பணம் மீளச் செலுத்தல்	(3,745,644,210)	-	-	-	-	(3,745,644,210)
ஓய்வினை விடுப்புக்கான அறவீடுகள்	(32,384,449)	-	-	-	-	(32,384,449)
சீர்படுத்தல்கள்	(52,641,241)	(39,679)	(2,081,868)	-	54,762,788	-
வரிக்கு பின்னரான தேறிய வருமானம் (மீள் கூற்று)	-	-	-	-	6,015,429,579	6,015,429,579
2022.12.31 ஆம் திகதியன்று மீதி	**71,057,499,025**	**38,094,733**	**8,000,000**	**6,997,078**	**694,671,959**	**71,805,262,796**

பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள்

நிதிச் செயலாற்றுகைக் கூற்று

திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான

	குறிப்பு இல.	2022 ரூபா	2021 ரூபா
வருமானம்			
முதலீட்டு வருமானம்	21	7,004,339,594	4,932,068,135
கழிக்க: தொழிற்பாட்டுச் செலவுகள்	22	(5,418,680)	(3,627,986)
வரிக்கு முன்னரான வருமானம்		**6,998,920,914**	**4,928,440,149**
கழிக்க: வருமான வரி	18	(983,491,335)	703,414,046)
வரிக்குப் பின்னரான தேறிய வருமானம்		**6,015,429,579**	**4,225,026,102**
வருமானத்தின் சீர்படுத்தல்கள்		54,762,788	51,716,271
முன்னைய ஆண்டின் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம்		144,933,312	64,394,361
Net Income Available for Distribution		**6,215,125,680**	**4,341,136,734**
அங்கத்துவ மீதிக்கான வட்டி		(5,518,371,852)	(4,195,276,550)
செயற்பாடற்ற கணக்குகளுக்கான வட்டி		(2,081,868)	(926,873)
முன் கொணரப்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம்		**694,671,959**	**144,933,312**

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இலக்கம் : HED/A/UPF/FA/2022 2023 மே 17 ஆம் திகதி

தவிசாளர்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு

பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2022 திசெம்பர் 31 ஆம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேற்குறிப்பிடப்பட்ட அறிக்கை இத்துடன் அனுப்பிவைக்கப்படுகின்றது.

டப்ளியு.எம்.பீ.ஏ.பொன்சேக்கா

பிரதிக் ககணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதி சார்பாக.

பிரதிகள்:

1. செயலாளர், கல்வி அமைச்சு
2. செயலாளர், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இலக்கம் : ர்நுனு.ஃ.யு.ஃ.ரூகு.ஃ.குயு.ஃ.2022 2023 மே 12 ஆம் திகதி

தலைவர்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு

பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2022 திசெம்பர் 31 ஆம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

.....

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 கருத்துரை

பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று, அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்கள், பொழிப்புச் செய்யப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(3) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) உறுப்புரைப் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல்இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மை மற்றும் நியாயமான நிலைமையை எடுத்தியம்புகின்றதென்பது எனது கருத்தாகும்.

1.2 கருத்துரைக்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன. இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நம்புகின்றேன்.

1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகையை மேற்கொள்ளும் தரப்பினர்களின் பொறுப்புக்கள்

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் முன்வைத்தல் மற்றும் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிக்க முடியுமாக இருப்பதற்குத் தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது நிதியத்தை தொடந்தும் நடாத்துவதற்கான ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதுடன் முகாமைத்துவம், நிதியத்தை கலைத்துவிடுவதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாதவிடத்து செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டாலே தவிர தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் கணக்குப் பதிதல் மற்றும் ஆணைக்குழுவின் தொடர்ச்சியான இருப்புடன் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்திக்கொள்வதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கைப்படுத்தல் செயற்பாடு தொடர்பான பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக உரிய பிரகாரம் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிவரல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மொத்தமாக, நிதிக் கூற்று ஊழல் மற்றும் தவறுகளால் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை கொண்டிராதவை என நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கான உறுதிப்பாடாக இல்லாதிருக்கும். ஊழல் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்பட முடியுமாக இருப்பதுடன், அதன் அளவானது இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு பயனர்களால் எடுக்கப்படும் பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில் நியாயம் மற்றும் தொழில் ஐயுறவுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வுக்குக் கருத்துரைக்கான அடிப்படையைப் பெற்றுக்கொள்ளும்போது ஊழல் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக்கூடிய ஆபத்தை இனங்கண்டுகொள்ளல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. பிழையாகக் குறிப்பிடப்பட்டதன் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினைப் பார்க்கிலும் ஊழல் காரணமாக ஏற்படும் தாக்கம் பலமானதாக இருப்பதுடன் கெட்ட கூட்டணி, பொய் ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் ஊழல் இடம்பெறுவதற்கான காரணங்களாகும்.

- உள்ளக நிர்வாகத்தின் பயன்தருதன்மை சம்பந்தமாக கருத்தை தெரிவிக்கும் நோக்கில் இல்லாவிட்டாலும், சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக நிர்வாகம் சம்பந்தமான தெளிவு பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்களின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக ஆணைக்குழுவின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமான அடிப்படையை பயன்படுத்திக்கொள்ளும் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதுமான நிச்சயமற்ற தன்மை நிலவுவதாக நான் தீர்மானித்தால் நிதிக் கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது கருத்தை திருத்தியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவுறுத்தப்படலாம்.

- நிதிக் கூற்றுக்களில் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் மொத்த முன்னிலைப்படுத்தல்கள் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்கண்டுகொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு வினைத்திறனின்மை மற்றும் ஏனைய பொதுவான விடயங்கள் சம்பந்தமாக ஆளும் தரப்புக்களுக்கு அறிவுறுத்துகின்றேன்.

2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழ் குறிப்பிடப்படும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (ஸை) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இயைந்துள்ளது.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (ஸ) (ஈ) (ஸை) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், முன்வைக்கப்பட்டிருக்கும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இயைந்திராமை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 95 ஆம் பிரிவு மற்றும் 2022 பெப்ருவரி 07 ஆம் திகதிய 03.̇.2022 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கைக்கமைய பங்காளியின் கணக்கை முடிவுறுத்தி 03 மாதங்களுக்குள் அவருடைய சேமலாப நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள தொகையைச் செலுத்த வேண்டும். ஆனாலும் 84 சந்தர்ப்பங்களில்01 மாதம் முதல் 354 மாதங்கள் வரையான காலம் தாமதித்து செலுத்தப்பட்டிருப்பதனால் அந்தக் காலப் பகுதிக்காக பங்காளிகளுக்கு ரூ. 30,968,567 வட்டித் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

டப்ளியு.பீ.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதி

பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2022 திசெம்பர் 31 ஆம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ஊடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இயைந்திராமை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 95 ஆம் பிரிவு மற்றும் 2022 பெப்ருவரி 07 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கைக்கமைய பங்காளியின் கணக்கை முடிவுறுத்தி 03 மாதங்களுக்குள் அவருடைய சேமலாப நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள தொகையைச் செலுத்த வேண்டும். ஆனாலும் 84 சந்தர்ப்பங்களில்01 மாதம் முதல் 354 மாதங்கள் வரையான காலம் தாமதித்து செலுத்தப்பட்டிருப்பதனால் அந்தக் காலப் பகுதிக்காக பங்காளிகளுக்கு ரூ. 30,968,567 வட்டித் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

பதில்:

பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 95 ஆம் பிரிவிற்கமைய சேமலாப நிதியை விடுவிக்கும்போது ஊழியரின் வரவு வைக்கப்பட்டுள்ள தொகையுடன் தொடர்பாக எந்தவொரு மேலதிக வட்டியும் பங்காளிகளுக்கு செலுத்தப்படவில்லை. குறித்த அனைத்து வட்டியும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 95 ஆம் பிரிவுக்கமைய கணக்கிடப்பட்டுள்ளது.

நிலையான (பேண்தகு) அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையிலான எதிர்காலத் திட்ட அறிக்கை - 2022

நிலையான (பேண்தகு) அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையிலான எதிர்காலத் திட்ட அறிக்கை - 2022

25.07.2017 திகதியிடப்பட்டு நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சினால் வெளியிட்டப்பட்ட தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 02/2017 ஆனது வருடாந்த பாதீட்டு (வரவு செலவுத் திட்டம்) மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்களையும் வழிமுறைகளையும் வழங்குகிறது.

பாதீட்டு செயன்முறைக்கான இடைக்கால எதிர்கால நோக்கு ஊடாக உபாயவழியில் அரசாங்கத்தின் முன்னுரிமைகளை மேலும் மூலோபாயமிக்கதாகவும் பதிலளிக்கக் கூடியதாகவும் உருவாக்குகின்றது எனவும் கூறுகிறது. அதன்படி, பாதீட்டுச் செயன்முறை மதிப்பிடப்பட்ட வளங்களின் கிடைப்பனவை நிதிக் கொள்கை முன்னுரிமைகளின் பாதையில் இடைக்கால, விரிநிலை நிதிக் கட்டமைப்போடு இணைக்க முடியும், இதன் மூலம் பாதீட்டை நிறைவேற்றுவதில் நிதி ஒழுக்கத்தை வலுப்படுத்துவதுடன் அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுடன் பாதீட்டு ஒதுக்கீடுகளை சீரமைக்க முடியுமாக இருக்கும்.

இதற்கிடையில், பாதீட்டு தயாரிப்பின் விரிவான எதிர்கால நோக்கு, 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் பட்டியல் தொடர்பாக, 2030 க்குள் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதை நோக்கி நகர வேண்டிய அவசியத்தை உள்ளடக்கியது.

17 நிலையான அபிவிருத்தி இலக்குகள் உள்ளன, அவற்றில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு மிகவும் பொருந்தக்கூடிய இலக்கு எண் 4 – தரமான கல்வி எனும் இலக்காகும். அதன்படி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு (UGC) நிலையான அபிவிருத்தி இலக்கு எண் 4 இற்கு இணங்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2019 - 2023 மூலோபாய திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட இலக்குகளை சீரமைத்துள்ளது, இது ஐந்து முக்கிய அம்சங்களின் கீழ் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் இனங்கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

- அரச துறை உயர் கல்விக்கு சம பிரவேச வாய்ப்புக்களை அதிகரித்தல்.
- 21 ஆம் நூற்றாண்டு குடியுரிமைக்குத் தேவையான மாணவர்களின் திறன்களையும் அறிவையும் வளர்ப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்வதன் மூலம் அரச உயர் கல்வி நிறுவகங்களுக்கு உதவுதல்.
- உலகளாவிய சூழலில் மாணவர்கள் வாழ்நாள் முழுவதும் கற்பவர்களாக மாற உதவும் திட்டங்கள், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்கள் மூலம் அரச உயர் கல்வி நிறுவனங்களின் கல்வி சிறப்பை ஊக்குவித்தல்.
- வினைத்திறன்மிக்க மற்றும் தரமான மனித வளங்கள், சிறந்த வசதிகள் மற்றும் நிலையான / பசுமை எண்ணக்களுடன் கூடிய மேம்பட்ட அரச உயர் கல்வி நிறுவனங்களை உறுதிசெய்தல்.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் ஆளுகை மற்றும் நிர்வாகத்தை பாதுகாப்பான மற்றும் நிலையான அமைப்புகள் மற்றும் பரஸ்பர பயன்மிக்க பங்குதாரர் உறவுகள் மூலம் பலப்படுத்துதல்.

அதற்கமைய, நாட்டின் வளர்ந்துவரும் எதிர்பார்ப்புகள் மற்றும் தேவைகள், முன்மொழியப்பட்ட அறிவு அடிப்படையிலான பொருளாதாரத்தில் மனித தேவைகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் கொள்கைகளுடனான பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் மற்றும் பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகளுடனான நிறுவனம்சார் இலக்குகள் இங்கு கவனத்திற்கொள்ளப்பட்டது.

பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்	ப.மா.ஆ குழுவின் இலக்குகள்	குறிக்கோள்	செயற்பாடு	செயல்திறன் குறிகாட்டி
தரமான கல்வி	**இலக்கு இல 01:** அரச துறை உயர் கல்விக்கான சம பிரவேச வாய்ப்பை அதிகரித்தல்.	1. 2023ம் ஆண்டளவில் அரச பல்கலைக்கழகங்களின் இளமாணி கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான பல்கலைக்கழக அனுமதிகளில் 15% ஒட்டு மொத்த வளர்ச்சி விகிதத்தை (CGR) அடைவதற்கு	நிலவும் கற்கைநெறிகளுக்கான ஆட்சேர்ப்பை 10,000 இனால் அதிகரித்தல் தற்போது அதிக சந்தை தேவையுள்ள கற்கைநெறிகளின் அனுமதியை 5% த்தினால் அதிகரித்தல் ஊழியச் சந்தையின் கேள்விகளின் அடிப்படையில் புதிய கற்கைநெறிகளை வடிவமைத்து அறிமுகப்படுத்துதல்	- அரச பல்கலைக்கழகங்களில் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான (தற்போதுள்ள மற்றும் புதியவை இரண்டிலும்) இளமாணிப் பட்ட மாணவர்களை உள்வாங்கல் சதவீதத்தை அதிகரித்தல்
		2. உ/தர பெறுபேறுகள் வெளியிடுதல் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் என்பவற்றுக்கு இடையிலான காலவெளியை இரண்டு மாதங்களால் குறைத்தல்	உ/தர பெறுபேறுகள் வெளியிடுதல் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் என்பவற்றுக்கு இடையிலான காலவெளியை குறைப்பதற்கு	- உ/தர பெறுபேறுகள் வெளியிடுதல் மற்றும் அரச பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் என்பவற்றுக்கு இடையிலான காலவெளியில் 2 மாதக் குறைப்பினை அடைதல்
		3. ஆற்றல் வளமிக்க மாணவர்களுக்கு மத்தியில் குறைவான கேள்வியுடன் தற்போதுள்ள இளமாணிப் பட்ட கற்கை (UG) படிப்பை ஊக்குவித்தல்	உயர் கல்வி நிறுவகங்களில் உள்ள வெற்றிடங்களைக் குறைத்தல்	- ஒவ்வொரு வருடமும் குறைவான கேள்வியுடைய கற்கை அலகுகளுக்காக பதிவு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கையில் சதவீதத்தை அதிகரித்தல். - குறைவான கேள்வியுடைய கற்கை நெறிகள் உள்ளடங்கலாக பல்கலைக்கழகங்களில் தற்போதுள்ள கற்கை நெறிகளின் வெற்றிடங்களில் சதவீதத்தைக் குறைத்தல்.
		4. அடுத்துவரும் 5 ஆண்டுகளில் 25% க்கும் அதிகமானவற்றால் தற்போதுள்ள இளமாணிப் பட்ட கற்கை நெறிகளிலுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைளை குறைத்தல்.		- குறைவான கேள்வியுடைய கற்கை நெறிகள் உள்ளடங்கலாக பல்கலைக்கழகங்களில் தற்போதுள்ள கற்கை நெறிகளின் வெற்றிடங்களில் சதவீதத்தைக் குறைத்தல்.

பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்	ப.மா.ஆ குழுவின் இலக்குகள்	குறிக்கோள்	செயற்பாடு	செயல்திறன் குறிகாட்டி
		5. 2023 ஆம் ஆண்டளவில் அரச பல்கலைக்கழகங்களின் இளமாணி கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான வெளிநாட்டுத் தகமையுடன் மாணவர் தொகையை அனுமதிப்பதற்கு 8% ஆல் அதிகரித்தல்.	கல்வித் தரத்தை அதிகரிப்பதற்கு இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு பொருந்தக்கூடிய புதிய விடயங்களை கற்பற்கு மற்றும் கூட்டாண்மையை கட்டியெழுப்புவதற்காக வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் தொடர்புகளை பலப்படுத்தல்	- ஏற்கனவேயுள்ள கேள்வியுடன் இளமாணி பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வெளிநாட்டுத் தகமையுடைய மாணவாகளள் அனுமதிக்கப்படும் தொகையில் சதவீதத்தை அதிகரித்தல்.
			வெளிநாடுகளுக்கு இலங்கை பல்கலைக்கழகம் மற்றும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை ஊக்குவித்தல் மற்றும் இலங்கையிலுள்ள கற்கைகளுக்கு வெளிநாட்டு கல்வித்தகமையுடைய அதிக மாணவர்களை ஈர்த்தல்	- உலகம் முழுவதுமாக ஆற்றல் வளமிக்க விண்ணப்பதாரிகள் மத்தியில் வெளிநாட்டு உள்ளெடுப்புகளை ஊக்குவிப்பதற்கு வெகுசன மற்றும் சமுக ஊடக பிரச்சாரங்களை வடிவமைத்து அமுல்படுத்தல்.
			வெளிநாட்டு மாணவர்களை அனுமதித்துக்கொள்ளும் செயற்பாட்டை துரிதப்படுத்தல்	- முன் கேள்வியில்லாது பெறப்பட்ட வெளிநாட்டு விண்ணப்பங்களுடன் இளமாணி பட்ட கற்கை நெறிகளின் எண்ணிக்கை
		6. அரச பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியை பெறாதுள்ள மாணவர்களுக்கு இடமளிப்பதற்கான குறிப்பிட்ட தொழில்துறையை இலக்கு வைத்த மற்றும் தரத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்தல்.	வெளிவாரிப் பட்டங்கள் தொடர்பான தர உறுதிப்பாட்டு கையேடு தொடர்பில் திறந்த பல்கலைக்கழகங்கள் உள்ளடங்கலாக அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்	- அரச பல்கலைக்கழக அனுமதிகளுக்கான தகுதியை பெறாதுள்ள மாணவர்களிடமிருந்து விசேடமாக வடிவமைக்கப்பட்ட வெளிவாரி இளமாணி பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக சேர்க்கப்படும் மாணவர்களின் சதவீதம்
			ப.மா.ஆ குழு வழிகாட்டல்களுடன் இணங்கி வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் நீண்ட கற்கைகளின் தரநிலைகள் மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்கு அனைத்து பல்கலைக்கழகங்கள்/ உயர் கல்வி நிறுவகங்களை வழிப்படுத்தல்	

பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்	ப.மா.ஆ குழுவின் இலக்குகள்	குறிக்கோள்	செயற்பாடு	செயல்றிறன் குறிகாட்டி
			வெளிவாரிப் பட்ட நிலையான குழு ஊடாக ப.மா.ஆ குழு வழிகாட்டல்களுடன் திறந்த மற்றும் தொலைக் கல்வி KiwA+டாக பல்கலைக்கழகங்கள்/உயர் கல்வி நிறுவகங்கள் அனைத்தாலும் வழங்கப்படும் வெளிவாரி கற்கை நிகழ்ச்சித் திட்டத்தின் தொடர்ச்சியான மதிப்பாய்வு	
			வெளிவாரிப் பரீட்சை பிரிவிலுள்ள ஆட்சி மற்றும் முகாமைத்துவ நடைமுறைகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யவும் மேம்படுத்தவும் அனைத்து பல்கலைக்கழகங்களையும் வழிப்படுத்தல்.	
			குழுச் செயற்பாடு, கூட்டங்கள் மற்றும் ஆணைக்குழு அனுமதியைப் பெறுதல்	
		7. அரச பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் ப.மா.ஆ குழுவால் அனுமதிக்கப்பட்ட மற்றும் ப.மா.ஆ குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகங்களுக்கு ஊடாகவும் வழங்கப்படும் இளமாணிப் பட்ட கற்கைநெறிகள் ஊடாகவும் அரச பல்கலைக்கழக அனுமதிகளுக்கான தகுதியினை பெறாத மாணவர்களுக்கு 2023ம் ஆண்டளவில் அதிக உயர்கல்வி வாய்ப்புக்களை வழங்குவதற்கு	கல்விக்கான பல்கலைக்கழகம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் 18 தேசிய கல்வியியற் கல்லூரிகளை பீடங்களாக தரமுயர்த்துவதற்கும் உயர் கல்வி அமைச்சுக்கு உதவுதலும் தேவைப்பட்டால் சட்டத்தை திருத்துதலும்	- பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் ப.மா.ஆ குழு அனுமதித்த இளமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் வழங்குதலுக்காக ப.மா.ஆ குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகங்களை தாபித்தல்.
			உட்கட்டுமான வசதிகள் மற்றும் மனிதவளங்களை வழங்கி உயர் கல்வி நிறுவனங்களுக்கான மாணவர் அனுமதிகளை அதிகரித்தல்.	
			கப்பல் சார்ந்த சேவைகள் துறைகளில் பட்டங்களை வழங்குவதற்கு தனியார் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்க உதவுதலும் தேவைப்பட்டால் சட்டத்தை திருத்துதலும்	
			விமான சேவைகள் துறைகளில் பட்டங்களை வழங்குவதற்கு தனியார் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்க உதவுதலும் தேவைப்பட்டால் சட்டத்தை திருத்துதலும்	

பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்	ப.மா.ஆ குழுவின் இலக்குகள்	குறிக்கோள்	செயற்பாடு	செயல்றிறன் குறிகாட்டி
			டிப்ளோமா கற்கைகளை வழங்குவதற்கு கட்புல அரங்கேற்ற கலை பல்கலைக்கழகத்துடன் தொடர்புடைய 10 நிறுவகங்களை ஸ்தாபித்தல்	
			பட்டம் வழங்கும் நிலைக்கு தாதியியல் கல்லூரிகளை தரமுயாத்துவதற்கு உதவுதல்	
			வெகுசன ஊடகத்திற்கான உயர் கல்வி நிறுவகமொன்றை ஸ்தாபிப்பதற்கு உதவுதல் தேவைப்பட்டால் சட்டத்தை திருத்துதல்	
			ஆலோசனைக் குழு ஒன்றின் ஊடாக பல்கலைக்கழக திட்ட முன்மொழிவுகளை இறுதிப்படுத்தல்	
			அவசியமான சட்ட கட்டமைப்பை உருவாக்குதல்	
			அவசியமான வளங்களை பாதுகாத்தல்	
			பொருத்தமான ஜனாதிபதி செயலணியால் பரிந்துரைக்கப்பட்டவாறு சான்றளிக்கும் நிறுவனங்களால் பரிந்துரைக்கப்பட்ட பட்டத்திற்கு தாதியியல் கல்லூரிகளை தரமுயர்த்துவது தொடர்பான செயற்பாடுகள்	
			பொருத்தமான ஜனாதிபதி செயலணியால் பரிந்துரைக்கப்பட்டவாறு விளையாட்டுக்கள் கல்விக்காக அர்பணிக்கும் வகையில் உயர் கல்வி நிறுவகம் ஒன்றை ஸ்தாபிப்பது தொடர்பான செயற்பாடுகள்	
		8. 2023ம் ஆண்டளவில் அரச பல்கலைக்கழகங்களின் பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கான பல்கலைக்கழக உள்ளெடுப்புகளில் 30% ஒட்டு மொத்த வளர்ச்சி விகிதத்தை எளிதாக்குவதற்கு	தொழிலாளர் சந்தை அவதானிப்பிலிருந்து வருகின்ற எதிர்நோக்குகளை அடிப்படையாகக்கொண்டு முக்கியத்துவம் அதிகரிக்கின்ற பகுதிகள் தொடர்பான புதிய பட்டப் பின்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை ஊக்குவித்தல்.	- வருடமொன்றுக்காக அனுமதிக்கப்பட்ட புதிய மற்றும் பொருத்தமான பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை

பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்	ப.மா.ஆ குழுவின் இலக்குகள்	குறிக்கோள்	செயற்பாடு	செயல்றிறன் குறிகாட்டி
தரமான கல்வி	**இலக்கு:** 02 21வது நூற்றாண்டு பிரஜாவுரிமைக்காக தேவைப்படும் மாணவர்களின் திறன் மற்றும் அறிவினை விருத்தி செய்வதற்கு நிதியினை ஒதுக்கீடு செய்வதனூடாக அரச உயர் கல்வி நிறுவகங்களுக்கு வசதிகளை வழங்குதல்.	1. தேவைப்படும் நிதி ஒதுக்கீடு மூலமாக 2023ம் ஆண்டளவில் ஒவ்வொரு அரச பல்கலைக்கழகத்திலும் மீள்உருவாக்கம், கலாச்சார வசதிகள் மற்றும் அழகியல் சுற்றுச் சூழல் என்பவற்றை மேம்படுத்துவதற்கு	ப.மா.ஆ குழுவின் பிரதான சபை அறையின் ஒலி மற்றும் ஒளி அமைப்பை மீள ஒழுங்குபடுத்தல்	- சேர்க்கப்பட்ட/ மேம்படுத்தப்பட்ட பொழுதுபோக்கு / கலாச்சார வசதிகள் மற்றும் / அல்லது அழகியல் சுற்றுச் சூழலைக் கொண்ட அரச பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை
			ப.மா.ஆ குழு வளாகத்தில் புதிய PABX இன் நிறுவுதல் மற்றும் தாபித்தல்	
			ப.மா.ஆ குழுவில் LAN முறைமையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்	
			வளப் பயன்படுத்தல் மற்றும் வளங்களின் கிடைப்பனவு தொடர்பான கணக்கெடுப்பு	
			அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்தல்	
			அரச பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்துக்கொள்ளப்படும் மாணவர்களுக்கு விசேட கடன் திட்டத்தின் கீழ் மடிக் கணனிகளை வழங்கல்.	
		2. பல்கலைக்கழகங்கள்/உயர்கல்வி நிறுவகங்களின் கல்வி மற்றும் கற்றல் சூழ்நிலைக்கு தேவைப்படும் பௌதீக வசதிகளை மேம்படுத்தல்	மூலதன செயற்றிட்டங்களின் முன்னேற்றத்தை கண்காணித்தலும் மீளாய்வு செய்தலும்	- அரச உயர்கல்வி நிறுவகங்களுக்கான வருடாந்த பாதீட்டில் சதவீதத்தை அதிகரித்தல்
			உட்கட்டுமான தேவைகளை மீளாய்வு செய்தலும் பகுப்பாய்வு செய்தலும்	
		3. அனைத்து பல்கலைக்கழக மாணவர்களுக்குமான சமமான வளங்கள் பயன்பாட்டை வழங்குவதனை நோக்கிய ஆரம்பகட்ட நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல்	வளப் பயன்படுத்தல் மற்றும் வளங்களின் கிடைப்பனவு தொடர்பான கணக்கெடுப்பு	- வளக் கிடைப்பனவு/பயன்டுத்தல் பகுப்பாய்வு வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள அரச பல்கலைக்களகங்களின் எண்ணிக்கை.
			அரச முதலீட்டுத் திட்டத்தை தயாரித்தல்	- பல்கலைக்கழக அமைப்பிற்கான வளத் திட்டத்தின் அளவீட்டு நியமக் குறியிடுதல்

பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்	ப.மா.ஆ குழுவின் இலக்குகள்	குறிக்கோள்	செயற்பாடு	செயல்றிறன் குறிகாட்டி
		4. உயர்கல்வி நிறுவகங்களில் உட்கட்டுமான அபிவிருத்திச் செயற்றிடங்களை வினைத்திறனுடன் அமூல்படுத்தலை உறுதிசெய்வதற்கு திறைசேரியிடமிருந்து காலத்திற்கேற்ப நிதிப் பாய்ச்சலை மேம்படுத்தல்.	வருடாந்த பாதீட்டுக்கான அனுமதி ப.மா.ஆ குழுவுக்கான நிதி முகாமைத்துவ முறைமையை அறிமுகப்படுத்தல்	- ஒவ்வொரு வருடமும் நடாத்தப்பட்ட உட்கட்டுமான அபிவிருத்தி தொடர்பான முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை - ஒவ்வொரு வருடமும் உயர்கல்வி நிறுவகங்களுக்கான களப்பயணங்களின் எண்ணிக்கை - ஒரு ஆண்டு காலப் பகுதியில் திறைசேரிக்கு/உயர் கல்வி அமைச்சுக்கு/ ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட உட்கட்டுமான அபிவிருத்திச் செயற்றிடங்கள் தொடர்பான முன்னேற்ற மதிப்பாய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை - ஒரு ஆண்டு காலப் பகுதியில் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு நிதியிடல் தொடர்பான முன்னேற்ற அறிக்கைகளின் எண்ணிக்கை
		5. தனிப்பயனாக்கப்பட்ட நிதியியல் முகாமைத்துவ தகவல் முறைமையான்றை (FMIS) அறிமுகப்படுத்துவதன் மூலம் நிதியியல் செயற்பாடுகளின் மூலோபாய முகாமைத்துவத்தை எளிதாக்குதல்	ஆவணப்படுத்தல் முகாமைத்துவ முறையை பலப்படுத்தல் நிதிப் பிரிவை 5 S முறைக்கமைய தயாரித்தல்.	- ப.மா.ஆ குழுவில் நிதியியல் முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை(FMIS) கிடைக்கச் செய்தல்.

பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்	ப.மா.ஆ குழுவின் இலக்குகள்	குறிக்கோள்	செயற்பாடு	செயல்றிறன் குறிகாட்டி
தரமான கல்வி	**இலக்கு: 03** பூகோளச் சூழலொன்றில் வாழ்நாள் கல்வியாளர்களாக வருவதற்கு மாணவர்களுக்கு வழிகோலுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள், ஆராய்ச்சிகள் மற்றும் புத்தாக்கங்கள் ஊடாக அரச உயர் கல்வி நிறுவகங்களின் கல்விச் சிறப்பினை ஊக்குவித்தல்	1. நிகழ்ச்சித் திட்டங்களின் பொருத்தப்பாடு மற்றும் சந்தைக் கேள்வியுடன் பொருத்துதலை உறுதிப்படுத்துவதன் பிரகாரம் தேவைக்கேற்ப புதிய கற்கை நெறிகளை அபிவிருத்தி செய்வதற்கும் தற்போதுள்ள பாடத்திட்டத்தினை திருத்துவதற்கும்	தொழிற் சந்தை அவதானிப்புகளுக்கு அமைவாக தற்போதுள்ள கற்கை நெறிகளை திருத்துதல்	- சந்தைக் கேள்விப் போக்கை பூர்த்தி செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள புதிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்ட பட்டப் பாடநெறி நிகழ்ச்சித் திட்டங்களின் சதவீதம் - கேள்வியை அதிகரிக்கவும் சந்தைப் பொருத்தப்பாட்டை உறுதிசெய்யவும் திருத்தப்பட்ட தற்போதுள்ள கற்கை நெறிகளின் எண்ணிக்கை.
			தொழிற் சந்தையின் கேள்விகளை அடிப்படையாகக்கொண்டு புதிய கற்கை நெறிகளை வடிவமைத்தலும் அறிமுகப்படுத்தலும்.	
			புதிய மற்றும் தற்போதுள்ள பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் அனுமதிக்கான முன்மொழிவுகளின் தரம் தொடர்பான அறிக்கை	
			புதிய பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள், திணைக்களங்கள் மற்றும் பீடங்களின் அனுமதிக்கான ப.மா.ஆ குழுவின் இணைய முறையின் பின்பற்றுதலை எளிதாக்குதல்	
		2. உயர் கல்விக்கான பிரவேசத்தை அதிகரிக்கும் பொருட்டு பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குவதற்கான முறைகளை அறிமுகப்படுத்துவதற்கு	பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் வழங்கல் வடிவங்கள் தொடர்பான கல்வியின் தற்போதைய சூழ்நிலையை கண்டறிந்து பகுப்பாய்வு செய்தல்	- இரண்டாம் ஆண்டுக்கான நேரடி நுழைவு/தரப்புள்ளிப் பரிமாற்றத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கான கற்கை நெறிகளின் எண்ணிக்கை
			இரண்டாம் ஆண்டுக்கான நேரடி நுழைவுக்கான (lateral entry) வழிகாட்டல்கள் மற்றும் முன்னர் கற்றமையின் தரப்புள்ளிப் பரிமாற்ற அங்கீகாரம்	
			உயர் கல்வியை அணுகுவதனை அதிகரிக்கும்பொருட்டு பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குவதற்கான முறைகளை அறிமுகப்படுத்துவதற்கு	

பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்	ப.மா.ஆ குழுவின் இலக்குகள்	குறிக்கோள்	செயற்பாடு	செயல்றிறன் குறிகாட்டி
		3. இளமாணி பட்ட மாணவர்களின் தனியாள் மற்றும் அவசிய திறன்கள் அபிவிருத்திக்கான பல்கலைக்கழகங்களின் தொழில் வழிகாட்டி அலகுகள் ஊடாக கட்டமைக்கப்பட்ட திட்டங்களை அமூல்படுத்துவதற்கு	தொழில் வழிகாட்டி அலகுகளின் செயற்றிறனை பார்ப்பதற்கு புள்ளி அட்டை முறையை தயாரித்தல்	- பல்கலைக்கழகங்களின் பீடத்தொழில் வழிகாட்டி அலகுகள் ஊடாக இளமாணி பட்ட மாணவர்களுக்காக ப.மா.ஆ குழுவால் எளிதாக்கப்பட்டுள்ள தனியாள் மற்றும் மென் திறன்கள் அபிவிருத்தியின் எண்ணிக்கை
			ஆணைக்குழுவால் அனுமதியளிக்கப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களுக்கான தொழில் வழிகாட்டி அலகுகளுக்கான பயிற்சியை வழங்குதல்	
			UTEL சோதனைச் சேவையை தாபித்தல்.	- பல்கலைக்கழகங்களின் தொழில் வழிகாட்டி அலகுகளின் ஆலோசகர்கள் / ஆளணியினருக்காக ப.மா.ஆ குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் / பட்டறைகளின் எண்ணிக்கை. - வருடாந்தம் மாணவர் ஆலோசகர்களாக /வழிகாட்டிகளாக நியமிக்கப்பட்ட கல்விசார் ஆளணியினர் சதவீதம். - கொழும்புப் பல்கலைக்கழகத்தில் ஒருங்கிணைப்பு நிலையத்துடன் சேர்ந்த பல்கலைக்கழக ஆங்கில மொழிப் பரீட்சைக் (UTEL) குழுக்களை தாபித்தல் - மொத்த இளமாணிப் பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் பல்கலைக்கழக UTEL பரீட்சையினை வருடமொன்றுக்கு எடுக்கின்ற மாணவர்களின் சதவீதம்

பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்	ப.மா.ஆ குழுவின் இலக்குகள்	குறிக்கோள்	செயற்பாடு	செயல்றிறன் குறிகாட்டி
		4. வாசிப்புப் பழக்கத்தின் முக்கியத்துவத்தை அதிகரிப்பதற்கும் E நூலகத்தின் வினைத்திறன்மிக்க பயன்பாடு மற்றும் பல்கலைக்கழகங்களில் கிடைக்கக்கூடிய ஏனைய வசதிகளை உறுதிப்படுத்தல்	இணைய நூலகங்கள் தொடர்பான உயர் கல்வி நிறுவகங்களின் தற்போதைய சூழலை இனங்காணுதலும் பகுப்பாய்வு செய்தலும்	- ஆராய்ச்சி தரவுத் தளங்கள், மென்பொருள் அறிவியல் திருட்டு (plagiarism) மற்றும் இலத்திரனியல் புத்தகங்கள் தொடர்பான மாணவர் பயன்பாட்டை ஊக்குவிக்கவும் அதிகரிக்கவும் பல்கலைக்கழகங்களில் இடம்பெற்ற விழிப்புணர்வுப் பிரச்சாரங்களின் எண்ணிக்கை
			பல்கலைக்கழக அமைப்பிற்காக அறிவியல் திருட்டுக்கு எதிரான மென்பொருளை (Anti-plagiarism Software) வழங்குதல்	
		5. ஆணைக்குழுச் சுற்றறிக்கை 933 இல் குறிப்பிட்டுள்ளவாறு மாணவர் ஆதரவுச் சேவைகளை பலப்படுத்தல் மற்றும் பல்கலைக்கழக அமைப்புக்குள் மாணவர் கற்பதனை எளிதாக்குதல்.	மாணவர் ஆதரவு முறைகளின் தற்போதுள்ள நிலையை இனங்காணல் மற்றும் பலப்படுத்தப்பட வேண்டியவற்றை எளிதாக்குதல்.	- மாணவர் ஆதரவுச் சேவை மற்றும் நலன்புரி முறைகளை ஸ்தாபிப்பதற்கு ஆணைக்குழுச் சுற்றறிக்கை 933 இன் அமுலாக்கம்
			தர உறுதிப்பாட்டில் மாணவர் ஈடுபாட்டை ஊக்கப்படுத்தல்.	
		6. பூகோள மற்றும் தேசிய ரீதியில் ஈடுபாடுள்ள பகுதிகளில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தினை ஊக்குவிப்பதற்கு கல்வி மற்றும் மாணவர்களை வலுவூட்டுகின்ற பல்கலைக்கழக வணிகவியல் தொடர்புகள் கூடங்கள் செயற்பாடு ஊடாக வினைத்திறன்மிக்க பல்கலைக்கழக-தொழில்த்துறை கூட்டாண்மையை உருவாக்குதல்.	பட்டதாரிகளின் திறனைக் கட்டியெழுப்புவதற்கான நிலையான செயன்முறைகளின் அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதற்கும் பொருத்தமற்ற திறன்களை குறைப்பதற்கும் ப.மா.ஆ குழுவின் நிலையான குழுவிற்கு தனியார் தறைகளின் பிரதிநிதிகளை உள்ளடக்குதல்	- ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களுக்கு வசதிகளை வழங்குவதற்கு அரச பல்கலைக்கழக முறைமையில் தாபிக்கப்பட்டுள்ள செயற்பாட்டிலுளள்ள பல்கலைக்கழக வணிகவியல் தொடர்புக் குழுக்களின் எண்ணிக்கை - அரச தனியார் துறைகளுடன் இணைந்து இரண்டு அல்லது அதற்கும் அதிகமான உயர் கல்வி நிறுவகங்களால் இணைந்து ஒழுங்குபடுத்தப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வசதிப்படுத்திய விழிப்புணர்வு
			பல்கலைக்கழக வணிகவியல் தொடர்புக் குழுக்களை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தல்	
			தற்போதுள்ள பட்டப்பின் படிப்பு கற்கை ஆராய்ச்சித் திட்டங்களுக்கு கல்வியாளர்களை விண்ணப்பிப்பதற்கு அழைத்தல்	
			பட்டப்பின் படிப்பு கற்கை ஆராய்ச்சித் திட்டங்களை ஸ்தாபிப்பதற்கு சிறந்த வெளிநாட்டு பல்கலைக்கழகங்களை இனங்காணல்.	

பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்	ப.மா.ஆ குழுவின் இலக்குகள்	குறிக்கோள்	செயற்பாடு	செயல்றிறன் குறிகாட்டி
			இளம் தொழில் முனைவோரைப் பலப்படுத்துவதற்கு வாய்ப்புக்களையும் ஊக்கத்தையும் வழங்குதல்.	அமர்வுகளின் எண்ணிக்கை
			பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய நிறுவகங்களுக்கு விவசாய அமைச்சின் வருடாந்த ஒதுக்கீட்டிலிருந்து ஆராய்ச்சி வசதிகளை அதிகரித்தல்.	
		7. அரச பல்கலைக்கழகங்களால் வழங்கப்பட்டுள்ள உயர் கல்வியின் தரம் தொடர்பில் பங்குதாரர்களின் திருப்தியை அதிகரிப்பதற்கு	பல்கலைக்கழக ஆளணியினர்/மாணவர்களுக்க தொழில்முறை அபிவிருத்தியை தொடர்வதற்கான வாய்ப்புகளை வழங்குதல்.	- 2023ம் ஆண்டளவில் பல்கலைக்கழக சேவையின் உள்ளக பங்குதாரர் மதிப்பீட்டில் ஆகக்குறைந்தது 80% திருப்தி நிலை தரப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளல்
			UBL ஊடாக உயர் கல்வி நிறுவகங்களுடன் தொடர்பொன்றை ஸ்தாபிப்பதற்கு வெளியகப் பங்குதாரர்களுக்கு வாய்ப்புகளை வழங்குதல்.	- 2023ம் ஆண்டளவில் பல்கலைக்கழக வெளியீட்டில் வெளியக பங்குதாரரில் ஆகக்குறைந்தது 75% திருப்தி நிலை
		8. ப.க.மா. ஆ குழுவின் கீழ் தொடர்ச்சியான மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் அபிவிருத்தி ஊடாக உயர் கல்வி நிறுவகங்களால் சர்வதேச மற்றும் தேசிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தரங்களுக்கமைவாக வழங்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை உறுதிப்படுத்துவதற்கு	பல்கலைக்கழகங்களில் உள்ளக தர உறுதிப்பாட்டுச் செயற்பாடுகளுக்கு ஆதரவளித்தல்.	- இலங்கை உயர்கல்வி நிறுவகங்களில் வழங்கப்படும் பாடங்களுக்காக(புதிய மற்றும் 25% 75% 100% புதுப்பிக்கப்பட்ட இரண்டிலும்) தயாரிக்கப்பட்ட தேவைப்பட்ட அடைவுமட்ட குறியீட்டு கூற்றுக்களின் சதவீதம்
			தற்போதுள்ள பாட நியமகட்ட குறியீட்டு அறிக்கைகளை புதுப்பித்தல் மற்றும் பொருத்தமான இடங்களின் புதிய அறிக்கைகளை உருவாக்குதல்.	
			நிறுவனம்சார் மதிப்பாய்வுகளை நடாத்துதல்	- ஆண்டுப்பகுதியில் வெளியிடப்பட்ட உயர்கல்வி நிறுவகங்களின் நிறுவனம்சார் மதிப்பாய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை.
			நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகளை நடாத்தல்	
			இலங்கை கல்வித் தகமை நியம மட்டத்திற்கு (SLQF) ஏற்ப தற்போதுள்ள அனைத்து கற்கை நெறிகளையும் திருத்தி பெயர் மாற்றுதல் மற்றும் அதன்படியே கையேட்டையும் புதுப்பித்தல்.	- ஆண்டுப்பகுதியில் வெளியிடப்பட்ட

பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்	ப.மா.ஆ குழுவின் இலக்குகள்	குறிக்கோள்	செயற்பாடு	செயல்றிறன் குறிகாட்டி
			இலங்கை கல்வித்தகமை நியம மட்டம் 2015 க்கு ஏற்ப தங்களுடைய கல்வித் தகமைகளை திட்டமிடுவதற்கு பல்கலைக்கழகங்களுக்கு அதரவளித்தல்.	உயர்கல்வி நிறுவகங்களின் நிகழ்ச்சித் திட்ட மதிப்பாய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை
			ஒத்திசைவுடைய கல்வி நாட்காட்டியை நோக்கி பணியாற்றுவதற்கு பல்கலைக்கழகங்களுக்கு உதவுதல்	
			உயர் கல்வியில் தர உறுதிப்பாடு தொடர்பான தேசிய கல்வி மாநாட்டினை ஆரம்பித்தல்	
			ப.க.மா. ஆ குழுவின் கீழ் தகமைக்கான தேசிய அங்கீகாரம் மற்றும் தகவல் நிலையத்தை ஸ்தாபித்தல்	
			சமுத்திர பல்கலைக்கழகம் மற்றும் கொத்தலாவெல பாதுகாப்பு பல்கலைக்கழகங்களை சர்வதேச தரத்திற்கு கொண்டு வருவதற்கு உதவுதல் மற்றும் ஊக்குவித்தல்.	
தரமான கல்வி மற்றும் பால்நிலை சமத்துவம்	**இலக்கு:** 04 திறமையான மற்றும் தரமான மனித வளம், சிறப்பான வசதிகள் மற்றும் நிலையான / பச்சை எண்ணக்கருவுடன் இணைந்து மேம்படுத்தப்பட்ட அரச உயர்கல்வி நிறுவகங்களை உறுதிசெய்தல்	1. அடுத்த 5 ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தின் அனைத்து மட்டங்களுக்குமான சாத்தியப்பாடுடைய அதிக திறமையுடைய மற்றும் பல்தரப்பட்ட பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் தக்க வைத்தலை உறுதி செய்வதற்கு	ப.மா.ஆ குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களில் மனித மூலதனம் மற்றும் நிபுணத்துவத்தின் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்தல்.	- முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பல்கலைக்கழக அமைப்பிலுள்ள ஆளணியினரின் அனைத்து வகைப்பாடுகளிலும் ஆட்சேர்ப்புத் திட்டங்களின் திருத்தம். - பதவி உறுதிப்படுத்தல் தகுதியின் முதற் தடவையில் சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட பல்கலைக்கழக ஆளணியினரின் சதவீதம்.
			ஆளணியினரின் ஆட்சேர்ப்புத் திட்டங்களின் திருத்தம்	
			தற்போதுள்ள பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சித் திட்டத்திற்காக விண்ணப்பிப்பதற்கு கல்வியாளர்களை அழைத்தல்	
			பட்டப்பின் படிப்பு தொழில் தகமைகளை பெறுவதற்கு நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு உதவுதல்	

பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்	ப.மா.ஆ குழுவின் இலக்குகள்	குறிக்கோள்	செயற்பாடு	செயல்றிறன் குறிகாட்டி
		2. பயிற்சி மற்றும் விருத்தி ஊடாக தற்போதுள்ள பல்கலைக்கழக ஆளணியின் மத்தியில் மறைந்திருக்கும் திறமையை இனங்கண்டு வளர்ப்பதற்குரிய நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு	-	- உள்நாட்டு வேலை தொடர்பான பயிற்சியுடன் நிர்வாக அலுவலர்களின் சதவீத தொகுப்பு - வெளிநாட்டு வேலை தொடர்பான பயிற்சியுடன் நிர்வாக அலுவலர்களின் சதவீத தொகுப்பு - கல்விசார் ஆளணியினருக்கு ப.மா.ஆ.குழு ஊடாக வழங்கப்பட்ட பிஎச்டி பட்ட புலமைப்பரிசிலின் சதவீதம். - நிர்வாக ஆளணியினருக்கு ப.மா.ஆ.குழு ஊடாக வழங்கப்பட்ட பிஎச்டி பட்ட புலமைப்பரிசிலின் சதவீதம். - பட்டப் பின் படிப்பு பட்டம் மற்றும்/ அல்லது தொழில்முறை கல்வித் தகமைகளுடன் நிர்வாக ஆளணியினரின் சதவீதம்.
		3. பல்கலைக்கழக அமைப்பின் அனைத்து மட்டங்களிலும் செயற்படாத ஆளணியினரை திறம்பட நிவர்த்தி செய்வதற்கும் ஊழியர் நலனை மேம்படுத்துவதற்கும்	பல்கலைக்கழக அமைப்பின் அனைத்து மட்டங்களிலும் செயற்படாத ஆளணியினரை குறைப்பதற்கும் ஊழியர் நலனை மேம்படுத்துவதற்குமான திட்டத்தை மதிப்பாய்வு செய்தல்	- 5 புள்ளி அளவில் குறிப்பிட்ட கால செயற்றிறன் மதிப்பீட்டில் ஆகக் குறைந்தது 3 புள்ளிகளை பெற்ற ஆளணியினரின் சதவீதம். - ஊழியர் நலன் மற்றும் திருப்தியின் பகுப்பாய்வொன்றில் >75% புள்ளியினை அடைகின்ற பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை. - ப.மா.ஆ குழுவின் சட்டப் பிரிவினால் கையாளப்பட்ட சட்ட/நீதிமன்ற வழக்குகள் தொடர்புடைய ஊழியர்களின் எண்ணிக்கை.

பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்	ப.மா.ஆ குழுவின் இலக்குகள்	குறிக்கோள்	செயற்பாடு	செயல்றிறன் குறிகாட்டி
		4. பல்கலைக்கழக மாணவர்களும் ஆளணியினரும் அடக்குமுறை மற்றும் பாகுபாடு இன்றி தங்களுடைய வேலைகளை தொடர அனுமதிக்கும் வகையில் பல்கலைக்கழகங்களுக்குள் கலாச்சாரம் மற்றும் சூழலொன்றை எளிதாக்குவதற்கு	அனைத்து பல்கலைக்கழகங்களிலும் பால்நிலை ஒப்பரவு /சமத்துவம் மற்றும் பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்செயல்கள் தொடர்பில் பொருத்தமான கட்டமைப்புக்கள்/முறைமைகளினை ஸ்தாபித்து/அபிவிருத்தி செய்யவதற்கு ஆலோசனையுடன் எளிதாக்குதல் இலங்கைப் பல்கலைக்கழக அமைப்பில் பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்செயலை எதிர்த்து போராடுவதற்கான தலையீடுகள் மற்றும் பொறிமுறைகளை அமூல்படுத்தல்/முன்மொழிதல் - ஆராய்ச்சி (யுனிசெப் நிதியிடப்பட்டது) பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்செயல் தொடர்பில் அச்சு மற்றும் / அல்லது இலத்திரனியல் ஊடகத்தை பயன்படுத்தி பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்செயலை எதிர்த்து போராடுவது தொடர்பில் விளம்பரப்படுத்தலுடன் தொடர்புடைய நிகழ்ச்சித் திட்டங்கள் பல்கலைக்கழகங்களில் பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்செயலின் குறைகளை கையாளும் பொறிமுறையை ஸ்தாபித்தல்/ பலப்படுத்தலை எளிதாக்குதல் மற்றும் மாணவர்கள், ஆளணியினர் மத்தியில் பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்செயலின் குறைகளை கையாளும் பொறிமுறை தொடர்பான விழிப்புணர்வினை உருவாக்குதல் மற்றும் முறையிடுதல்/அறிக்கையிடுதலை ஊக்குவித்து ஊக்கப்படுத்தல் அனைத்து உயர் கல்வி நிறுவகங்களிலிருந்தும் பகிடிவதையை இல்லதொழிப்பதற்கு ஏற்பாடு செய்தல்.	- பகிடிவதை அற்ற பல்கலைக்கழகங்களில் உகந்ததும் பாதுகாப்பானதுமான கற்றல் சூழலொன்றின் மாணவர்களுடைய மதிப்பீட்டில் சதவீத திருப்தி. - பாலியல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்செயல்களிலிருந்து விடுபட்டு காணப்படுகின்ற பல்கலைக்கழக சூழலொன்று பற்றிய மாணவர் மற்றும் ஆளணியினரின் சதவீத திருப்தி.

பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்	ப.மா.ஆ குழுவின் இலக்குகள்	குறிக்கோள்	செயற்பாடு	செயல்திறன் குறிகாட்டி
		5. பல்கலைக்கழக அமைப்பின் அனைத்து மட்டங்களிலும் கல்வி சாரா ஆளணியினரின் திறன் மற்றும் தொழில்முறை விருத்திக்கான தெளிவான வழிகாட்டல் மற்றும் கொள்கையை ஸ்தாபித்தல்	அனைத்து மாற்றுத்திறன் மாணவர்களும் எதுவித தடைகளுமின்றி தமது கல்விச் செயற்பாடுகளை கொண்டிருப்பதற்கான அணுகுதல் ஏற்பாடுகளை வழங்குவதற்கு அறிவுறுத்தல்களை வழங்குதல்	- தொழில்முறை மற்றும் முகாமைத்துவ திறன்களை இலக்காகக் கொண்ட தனிப்பயனாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக வருடாந்தம் பயிற்சியளிக்கப்பட்ட கல்விசாரா ஆளணியினரின் எண்ணிக்கை.
			பட்டப்பின் படிப்பு பட்டம் மற்றும் தொழில்முறைக் கல்வித்தகமையை நிர்வாக மற்றும் ஏனைய நிறைவேற்று அலுவலர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல்	
			தற்போதுள்ள நடைமுறைகளை மதிப்பாய்வு செய்தலும் கல்வி ஸ்தாபனங்கள் விடயங்களுக்கான சிறப்பான நடைமுறைகளை உருவாக்குதல்.	
		6. மாற்றுத்திறன் மாணவர்களுக்கான சிநேகபூர்வமான சூழலை உள்ளிட்ட வசதிகளுக்காக தரமான விரிவுரை மண்டபங்கள் மற்றும் ஆய்வு கூடங்களை உள்ளடக்கிய பல்கலைக்கழக வசதிகளை நவீனமயப்படுத்துவதற்கான விரிவான திட்டத்தை உருவாக்கி அமூல்படுத்துவதற்கு	அனைத்து மாற்றுத்திறன் மாணவர்களும் எதுவித தடைகளுமற்ற தமது கல்விச் செயற்பாடுகளை கொண்டிருப்பதற்கான அணுகுதல் ஏற்பாடுகளை வழங்குவதற்கு அறிவுறுத்தல்களை வழங்குதல்	- மாற்றுத்திறன் மாணவர்கள் பயன்படுத்துவதற்கு 50% ஐ விட அதிகமான தனிப்பயனாக்கப்பட்டதும் தரமானதுமான விரிவுரை மண்டபங்கள் மற்றும் ஆய்வு கூடங்களுடன் உள்ள பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை.
			மாற்றுத்திறன் மாணவர்கள் பொதுப் பரீட்சைகளுக்கு தோற்றும் போது அவர்களுக்கு உதவும் பொருட்டு முன்னோடி செயற்றிட்டத்தை நடாத்துதல்.	
			சர்வதேச அளவில் உள்நாட்டு கட்டுமாணத்தை முத்திரை பதிப்பதில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை, பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய நிறுவகங்களுக்கு இடையில் நெருக்கமான கூட்டுறவினை ஸ்தாபிப்பதற்கான பொறிமுறையொன்றினை அறிமுகப்படுத்தல்.	
			விடுதி வசதிகளை பெறுவதற்கு அரச தனியார் கூட்டாண்மையை தாபிப்பதற்கு பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்தல்.	

பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்	ப.மா.ஆ குழுவின் இலக்குகள்	குறிக்கோள்	செயற்பாடு	செயல்றிறன் குறிகாட்டி
